விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 03 செவ்வாய்க்கிழமை (20.10.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 305

# வாக்குறுதிகளை அரசு நிறைவேற்ற வேண்டும்!

## சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்து

(லண்டன்)

**இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த விடயங்களில் பொறுப்புக் கூறுதல் மற்றும் நீதியை நிலை நாட்டுதல் தொடர்பாக இலங்கை அரசாங்கம் சர்வதேசத்துக்கு அளித்துள்ள வாக் குறுதிகளை விரைந்து நிறைவேற்ற வேண்டும் என தெரிவித் துள்ள சர்வதேச மன்னிப்புச்சபை மேற்படி விடயங்களில் சர்வதேச சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு பின்பற்றப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளது.**

AMNESTY INTERNATIONAL

இலங்கையின் பாராளுமன்றத் தேர்தல் முடிவடைந்து புதிய அரசாங் கம் பதவியைப் பொறுப்பேற்றுள்ள நிலையில் இலங்கை அரசினால் சர்வதேசத்துக்கு வழங்கப்பட்ட உறுதி மொழிகள் நிறைவேற்றப்பட வேண் டியது மிகவும் அவசியமானது என சர்வதேச மன்னிப்புச்சபையின் ஊடக அதிகாரி ஓலோப் ப்ளொம்க் விஸ்ட் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட ஊடகக் குறிப்பில்,

இலங்கையில் இடம் பெற்ற போர்க் கால குற்றச்செயல்கள் மற றும் மனித உரிமைகளை மீறிய

23ஆம் பக்கம் பார்க்க....

## பரந்தனில் இன்று தமிழினியின் இறுதிச்சடங்கு



(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் மகளிர் அரசியல்துறைப

24ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை விவகாரம்; நோர்வேயின் பங்களிப்பு

(கொழும்பு)

இலங்கை விவகாரத்தில் நோர் வேயின் பங்களிப்பை சொல்ஹெய்ம், விடார் கெல்கிசன் ஆகியோர் வெளி ப்படுத்த உள்ளனர்

இலங்கை விவகாரத்தில் நோர்வேயின் பங்களிப்பு குறித்து நூல் ஒன்றின் ஊடாக இவ் வெளிப்

23ஆம் பக்கம் பார்க்க....

## அரசியல் முதிர்ச்சி மைத்திரிக்கு இல்லை!

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவுக்கு விமர்சனங்களைத் தாங்கிக் கொள்ளும் அரசியல் முதி ர்ச்சி இல்லை என்று காட்டமான ஆசிரியர் தலையங்கம் ஒன்றை ராவய பத்திரிகை வெளியிட்டுள்ளது.

குறித்த தலையங்கத்தில் தொட

23ஆம் பக்கம் பார்க்க....

## சுதந்திர கட்சியை மகிந்தவே தோற்கடித்தார்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்றத் தோல்வி க்குக் காரணம் என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள் ளார்.

கண்டியில் நடைபெற்ற இறுதி தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பங் கேற்குமாறு மகிந்த தமக்கு தனிப்

23ஆம் பக்கம் பார்க்க....

## புலிச் சந்தேக நபர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கக் கூடாது

### ஏற்க முடியாது என்கிறது ஹெல உறுமய

(கொழும்பு)

பல்வேறு குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட விடுதலைப் புலிச் சந் தேக நபர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படுவதை எந்த வகையி லும் ஏற்றுக்கொள்ள முடியாது என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்து ள்ளது.

மேலும், விடுதலைப் புலிச் சந் தேக நபர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என கோரி க்கை முன்வைக்கப்பட்டிருப் பது அநீதியானது என அந்தக் கட்சியின்

24ஆம் பக்கம் பார்க்க....

## பிரகீத் காணாமல் போன வழக்கில் பிரதிவாதியாக இராணுவத் தளபதி




(கொழும்பு)

நாட்டில் கடந்த 2010-ம் ஆண் டில் காணாமல்போன ஊடகவிய லாளர் பிரகீத் எக்னெலிகொடவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு அவரது மனைவி தாக்கல் செய்திரு ந்த மனுவில் பிரதிவாதிகளாக இரா

24ஆம் பக்கம் பார்க்க....

## ஜெனிவா அறிக்கைக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நேற்று கூட்டம்

### நாமல் ராஜபக்ஷவும் பங்கேற்பு



(கொழும்பு)

ஜெனிவா அறிக்கைக்கு எதிராக ஒழுங்கு செய்யப்பட்ட எதிர்க்கட்சிக ளின் நேற்றைய கூட்டத்தில் அதிகள வான பொதுமக்கள் கலந்து கொண் டிருந்தனர்.

விமல் வீரவன்ச, உதய கம்மன பில, டளஸ் அலகப்பெரும ஆகி யோர் முன்னின்று இதனை ஏற்பாடு

23ஆம் பக்கம் பார்க்க....

## முன்னாள் போராளி திடீர் மரணம்

(கிளிநொச்சி)

புதுக்குடியிருப்பு கைவேலி மரு தமடு கிராமத்தை சேர்ந்த முன்னாள பெண் போராளி ஒருவர் நேற்று மாலை திடீரென மரணமடைந்து ள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தாயா

23ஆம் பக்கம் பார்க்க....

## நாய்க் கூட்டில் தந்தை; மகளுக்கு மறியல்

(கண்டி)

கண்டி - பலகொல்லை பகுதியில் தனது உயர் ரக நாயையும் அதன் குட்டிகளையும் வீட்டின் உள்ளே கட்டிலில் உறங்க வைத்து தனது தந்தையை நாய்க் கூட்டில் பல வரு

23ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா தீர்மானத்தை ஆதரித்து இனவாதத்துக்கு எதிராக போராட்டம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப பேரவையின் தீர்மானத்திற்கு ஆத ரவாகவும், இனவாத நடவடிக்கை களுக்கு எதிராகவும் நாளை மறுதி னம் 22-ம் திகதி வியாழக்கிழமை போராட்டம் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 22-ம் திகதி நாடாளு மன்ற சுற்று வட்டத்தில் நண்பகல் 12.30 மணிக்கு இந்தப் போராட்டம நடத்தப்படவுள்ளது.

சமாதானத்திற்காக தேசிய அமை ப்பினால் இந்தப் போராட்டம் முன் னெடுக்கப்படவுள்ளது.

சிலர் ஜெனிவா தீர்மானம் குறி த்து பீதியை ஏற்படுத்தி வருகின்ற னர் என அந்த அமைப்பின் அழை ப்பாளர் சமன் ரத்னப்பிரிய தெரிவி த்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேர்வினுக்கு கொலை மிரட்டல்; சிம் உரிமையாளர் வாக்குமூலம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு தொலைபேசியில் கொலை மிரட்டல் விடுத்த தொலைபேசி இலக்கம் கொண்ட சிம் அட்டை உரிமையாளர் நேற்றுக் காலை 09 மணிக்கு நாரஹேன்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் ஒன்றினை வழங்கிசென்றுள்ளார்.

பூண்டுலோயா பிரதேசத்தை சேர்ந்தவரான அவர், தனது தேசிய அடையாள அட்டையை பயன்படுத்தி ஹிக்கடுவை பிரதேசத்தை சேர்ந்த நண்பருக்கு சிம் அட்டை வாங்கி கொடுப்பதற்கு உதவியதாக குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய எதிர்வரும் நாட்களில் அந்த நபரை நாரஹேன்பிட்டிய பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வாக்குமூலம் ஒன்று பெற்றுக்கொள்ளவுள்ளதாக அதன் சிரேஷ்ட அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 16ஆம் திகதி நாரஹேன்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தனக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாக முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# வரவு செலவு திட்டத்தில் அனைவருக்கும் நிவாரணம்

## நிதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் அனைத்து தரப்பு மக்களுக்கும் நிவாரணத்தை பெற்றுக் கொடுக்கும் நோக்கில், எதிர்வரும் 2016ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நீண்டகால வேலைத்திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கையாக, இந்த வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத்திட்டம் குறித்து பொதுமக்களிடமிருந்து கிடைக்கக்கூடிய அபிப்பிராயங்களை ஆராய்வது தொடர்பில், அமைச்சின் அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் நடத்திய கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வரவு-செலவுத் திட்டம் குறித்து தனி நபர்கள், நிறுவனங்கள் மற்றும் பல அமைப்புகளிடமிருந்து ஆயிரக்கணக்கான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக குறிப்பிட்ட அமைச்சர், அவை தற்போது நிதியமைச்சின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

குறிப்பாக தொழில், உற்பத்தி, அரசதுறைகளை மறுசீரமைத்தல், உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம், சிறிய மற்றும் நடுத்தர தொழிற்சாலை அபிவிருத்தி ஆகிய விடயங்கள் தொடர்பாகவே அதிகளவு அபிப்பிராயங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்வரும் 2016ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டமானது எதிர்வரும் நவம்பர் மாதம் 20ஆம் திகதி நாடாளு மன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# சந்தேக நபர் தற்கொலை

வெல்லம்பிட்டிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் குற்றச் செயல் ஒன்றுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை வெல்லம்பிட்டிய பொலிஸார் கைது செய்திருந்தனர். எனினும் அவரிடம் மேலதிக விசார்ணைகள் மேற்கொள்ள வேண்டும் என்ற காரணத்தை காட்டி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படாமல், பொலிஸ் நிலைய தடு ப்புக் கூண்டுக்குள் குறித்த நபர் அடைக்கப்பட்டிருந்தார்.

பின்னர் நேற்று மாலை அவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

தகவல் அறிந்தவுடன் உயிரிழந்தவரின் உறவினர்கள் வெல்லம்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் குழுமி முற்றுகையிட்டனர்.

இச்சம்பவம் காரணமாக நேற்று மாலை வெல்லம்பிட்டிய நகரில் சற்று பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. (செ-11)

# மத்தள விமான நிலையத்துக்கு இழப்பீடு வழங்க முடியாது

## நெல் கொள்வனவுச் சபை அறிவிப்பு

(கொழும்பு)

மத்தள விமான நிலையத்தில் நெல் களஞ்சியப்படுத்தியதன் காரணமாக ஏற்பட்ட சேதங்களுக்கு நட்டஈடு வழங்க முடியாது என்று நெல் கொள்வனவுச் சபை திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று முன்தினம் மத்தள விமான நிலையத்துக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போது மத்தள விமான நிலையத்தில் நெல் களஞ்சியப்படுத்தல் செயற்பாடுகளின் காரணமாக ஏற்பட்ட சேதங்களையும் நேரில் கண்டறிந்தார்.

பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர்,

நெல் களஞ்சியப்படுத்தல் காரணமாக ஏற்பட்ட சேதங்களுக்கு நெல் கொள்வனவுச் சபையிடமிருந்து நட்டஈடு அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.

எனினும் இதுகுறித்து கருத்து வெளியிட்டிருந்த நெல் கொள்வனவுச் சபை முக்கிய அதிகாரியொருவர், மத்தள விமான நிலையத்தில் நெல் களஞ்சியப்படுத்தியதன் காரணமாக ஏற்பட்ட சேதங்களுக்கு நட்டஈடு வழங்க முடியாது என்று திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் உயர்மட்டத் தீர்மானத்துக்கு அமையவே தாம் மத்தள விமான நிலையத்தின் விமானப் பொதிகள் களஞ்சியத்தில் நெல் களஞ்சியப்படுத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

# பாடசாலை ஆசிரியை வானில் கடத்தப்பட்டார்

மாத்தறை, பெங்கமுவ பிரதேசத்தில் 28 வயதுடைய பெண் ஆசிரியை ஒருவர் வானில் கடத்தி செல்லப்பட்டுள்ளார்.

நேற்று பாடசாலைக்கு சென்று கொண்டிருந்த மாரவில பகுதியைச் சேர்ந்த ஆசிரியை ஒருவரே வான் ஒன்றில் வந்த இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்ட ஆசிரியை விலயாய மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக சேவை செய்து வந்துள்ளார் என தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் நேற்றிரவு வரை சந்தேக நபர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை. அத்துடன் பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

# ஜெனிவா பிரேரணை அழுத்தத்துக்கு வழி

ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான அமெரிக்காவின் பிரேரணையில் உள்நாட்டு பிரச்சினைகளை தீர்ப்பதற்கான உரிமை சர்வதேசத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக ஜனநாயக இடதுசாரி முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார நேற்று இதனை தெரிவித்துள்ளார். (செ-11)


**வேலைவாய்ப்பு**

தையல் வேலைக்கு உடன் ஆண்கள் தேவை. தங்குமிடம் இலவசம், 50000/= க்கு மேற்பட்ட சம்பளம். (C-2504)

தொடர்புகளுக்கு 0774582344

**விஜயதசமி ஓகன் வகுப்புக்கள்**

ஸப்தஸ்வரம் இசைக்கலையக
விஜயதசமி ஓகன்(KEY BOARD)
வகுப்பு ஆரம்பம்

ஆசிரியர் - ஸ்ரீ குகன்

(2106)



நேரம் - வியாழன் மாலை 4 மணி தொடர்பு :- 0776980573

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**குணரங்கன் நிஜானன்**



கிளி/மாசார் அ.த.க பாடசாலையில் கல்வி பயின்று 2015ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய மாணவன்

குணரங்கன் நிஜானன்

என்பவரை பாராட்டி வாழ்த்துவதுடன் இவருக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கும் சிறப்பாக வழிநடத்திய அதிபர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(இ)

வாழ்த்துவோர் :
குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள்

**யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி**
(தேசிய பாடசாலை)

**தரம் 6 அனுமதி - 2016**

2016ஆம் ஆண்டு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் தரம் 6 இல் அனுமதிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். (C-2802)

விண்ணப்ப முடிவு திகதி : 2015.11.06 அதிபர்.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1552

**மின்சாரக் கட்டணங்களை செலுத்துதல் தொடர்பாக சகல மின்பாவனையாளர்களுக்குமான அறிவித்தல்**

மின்பாவனையாளர்கள் தமது மாதாந்த மின்சாரக் கட்டணங்களை நிலுவையின்றி செலுத்தி மின்துண்டிப்பைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுவதோடு தமது இடங்களுக்கு மின்மானி வாசிப்பை பெற்றுக் கொள்வதற்காக வருகைதரும் மானி வாசிப்பாளர்களிடம் மின்சாரக் கட்டணங்களை செலுத்துவதற்கான பணத்தினை எச்சந்தர்ப்பத்திலும் வழங்க வேண்டாம் என்பதையும் அவ்வாறு வழங்கி அவர்களால் குறித்த மின்சாரக் கட்டணம் செலுத்த தவறும் பட்சத்தில் அதற்கு இலங்கை மின்சார சபை எவ்விதத்திலும் பொறுப்பாக மாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம். தமது மின் கட்டணங்களை தாங்களோ அல்லது தங்களை சார்ந்தவர் ஒருவர் மூலமாகவோ மட்டுமே பணத்தை செலுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

✦ மின்பாவனையாளர்கள் தமது மின்பட்டியலுக்கான பணத்தினை பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள இ.மி சபையின் கருமபீடம் மற்றும் மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி கிளைகளில் அமைந்துள்ள எமது கருமபீடங்களிலும் மற்றும் ஏனைய வங்கிகளிலும் அபான்ஸ், சிங்கர், சொப்ற்லொயிக் காட்சியறைகளிலும், கார்கில்ஸ் பூட் சிற்றிகளிலும், தபாலகங்களிலும் செலுத்த முடியும்.

✦ பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள இ.மி.சபை வட மாகாண அலுவலக வளாகம் மற்றும் மக்கள் வங்கி கிளைகளில் அமைந்துள்ள இ.மி.சபை கருமபீடங்கள் ஆகியவற்றில் செலுத்தப்படும் மின் பட்டியல்கள் உடனுக்குடன் வரவு வைக்கப்படும்.

✦ மின்னிணைப்பு துண்டிக்கப்படும் பட்சத்தில் மீள மின்னிணைப்பு வழங்குவதற்கு மின்பட்டியல் நிலுவையுடன் மேலதிகமாக ரூபா 1,100.00 இனை மீளிணைப்பு கட்டணமாக மின்சிட்டையில் செலுத்தப்பட வேண்டும்.

நன்றி

மின் பொறியியலாளர் அலுவலகம்
யாழ்.பிரதேசம்,
இலங்கை மின்சார சபை, சுன்னாகம்.

(சி-2503)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையால் அரசாங்கம் பிளவடையக்கூடிய சாத்தியம்

(கொழும்பு)

**விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள காணாமல் போனோர் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கை காரணமாக அரசாங்கத்தினுள் பெரிய அளவிலான பிளவு ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

இந்த அறிக்கையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலருக்கு எதிராக கடுமையாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குறித்த அறிக்கை இந்த காரணங்களினால் தான் தாமதமாவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எப்படியிருப்பினும், இந்த அறிக்கை வெகு விரைவில் வெளியிடுவதற்கு ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்குமாறு ஐக்கிய தேசிய கட்சியினர் பிரதமரிடம் கோரியுள்ளனர்.

இந்த அறிக்கையை வெளியிட்டு அதில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களை அடிப்படையாக கொண்டு, தகுதி தராதரம் பாராமல் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவது ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களின் நிலைப்பாடாகும்.

எனினும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இந்த அறிக்கை வெளியாகினால் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு கடுமையான பாதிப்பேற்படும் என குறிப்பிட்டுள்ளனர்.

அதற்கமைய இந்த அறிக்கையினை வெளியிடாமல் இருக்குமாறு அவர்கள் ஜனாதி பதியிடம் கோரியுள்ளனர் எனவும தெரிய வந்துள்ளது. (இ-7-10)

## அரசாங்கம் புனர்வாழ்வளித்தாவது கைதிகளை விடுவிக்க வேண்டும்

### இராஜாங்க அமைச்சர் விஜயகலா வலியுறுத்து



தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்க முடியாவிட்டாலும் புனர்வாழ்வளித்து அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்

யாழ்.சிறைச்சாலைக்குச் சென்று உண்ணாவிரதம் இருந்த கைதிகளை சந்தித்து கலந்துரையாடி உண்ணாவிரதத்தை முடித்து வைத்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் கைதிகள் தொடர்பாக எதிர்வரும் 7 ஆம் திகதிக்குள் நிரந்தரத் தீர்வைப் பெற்றுத் தருவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். தற்பொழுது இருக்கும் அரசியல் சூழ்நிலை காரணமாக பொது மன்னிப்பு வழங்க முடியாத நிலையில் ஜனாதிபதி இருக்கின்றார். எனினும் அவர் கைதிகளை எந்த விதத்தில் விடுதலை செய்யப்போகின்றார் என தெரியவில்லை.

தற்போதைய சூழ்நிலையில் ஜனாதிபதி பொதுமன்னிப்பை வழங்க முடியாவிட்டாலும் 3 அல்லது 6 ஆறு மாதங்களுக்கு கைதிகளுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னர் விடுதலை செய்யுமாறு அரசிடம் வலியுறுத்தியுள்ளேன்.ஏனெனில் அனைத்தையும் நேரடியாக அரசாங்கத்தி டமிருந்து எதிர்பார்க்க முடியாது.

அதே நேரம் கைதிகளிடமும் புனர்வாழ்வை ஏற்குமாறு கோரியுள்ளேன்.

கடந்த காலங்களில் 12 ஆயிரம் முன்னாள் போராளிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

கடந்த காலங்களில் குற்றம் புரிந்தவர்கள் சுதந்திரமாக அமைச்சர்களாக இருந்தார்கள். ஆயுதக்குழுக்களில் இருந்தவர்கள் பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள்.

ஆனால் சந்தேகத்தின் பேரில் கைதான தமிழ் கைதிகள் குற்றம் புரிந்துள்ளார்கள் என்பது தொடர்பில் இன்னமும் விசாரணைகள் நடத்தப்படவுமில்லை உறுதிப் படுத்தப்படவுமில்லை. ஆகவே கைதிகளுக்கு பொதுமன்னிப்பு அளிக்க முடியாது விட்டாலும் அவர்களுக்கு புனர்வாழ்வளித்து விடுதலை செய்து குடும்பங்களுடன் ஒன்றிணைந்து வாழ வழி செய்ய வேண்டும் என அவர் தெரிவித்தார். (இ-9)

## 2016 பட்ஜெட்டில் சகலரையும் திருப்திப்படுத்தும் யோசனைகள்

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நீண்டகால வேலைத்திட்டத்தின் முதற்கட்டம் 2016ஆம ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்திற்கூடாக முன்னெடுக்கப்பட்டிருப்பதாக ஐ.தே.க. உப தலைவரும் நிதியமைச்சருமான ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் அனைத்து தரப்பு மக்களுக்கும் நிவாரணத்தை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் முன்வைக்கப்பட்டிருக்கும் இந்த வரவு - செலவு திட்டம் குறித்து பொதுமக்களின் அபிப்பிராயம் கோரப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பொதுமக்களிடமிருந்து கிடைக்கக் கூடிய அபிப்பிராயங்களை ஆராய்வது தொடர்பில் அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று முன்தினம் அமைச்சில் அதிகாரிகளுடன் நடத்திய கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.


2016 ஆம் ஆண்டு வரவு - செலவு திட்டத்தில் உள்ளடங்கும் வகையில் ஆயிரக்கணக்கான அபிப்பிராயங்கள் நிதியமைச்சுக்கு கிடைத்துள்ளன.

இவை தனி நபர்கள், நிறுவனங்கள், அமைப்புக்களிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன. மேலும் சில பெயர் குறிப்பிடப்படாத நிலையில் நிதியமைச்சினை வந்தடைந்துள்ளன.

இந்த அபிப்பிராயங்கள் நிதியமைச்சரின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இவை குறிப்பாக தொழில், உற்பத்தி மற்றும் அது தொடர்பான பிரச்சினை, அரச துறைகளை மறுசீரமைத்தல், உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம், சிறிய மற்றும் நடுத்தர தொழிற்சாலை அபிவிருத்தி ஆகிய விடயங்கள் தொடர்பிலேயே கூடுதலான அபிப்பிராயங்கள் கிடைத்துள்ளன.

2016 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்ட யோசனைகள் எதிர்வரும் நவம்பர் 20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)



கேலிச்சித்திரம்

### கொண்டயா விடுதலை

வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட 5 வயது சிறுமியான சேயாவின் கொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட துனேஷ் பிரியஷாந்த என்றழைக்கப்படும் கொண்டயாவை, விடுதலை செய்யுமாறு மினுவாங்கொடை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. (இ-7)

## சர்வதேச பொலிஸாரால் தேடப்பட்ட நபர் கைது!

(கொழும்பு)

மாலைதீவு நாட்டின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீரின் சட்டத்தரணியை கத்தியால் குத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, சர்வதேச பொலிஸாரால் தேடப்பட்டு வந்த சந்தேக நபர், நேற்று கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. மாலைதீவு அரசாங்கத்துக்குச் சொந்தமான சொசுன் விலா எனும் விடுதியொன்றிலேயே ஷப்ராஸ் இப்ராஹிம் (வயது 20) என்ற நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7-10)

### மின்னல் தாக்கியதில் இரு மீனவர்கள் பலி

மட்டக்களப்பு - கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள திகிலிவெட்டை ஆற்றில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இரு மீனவர்கள் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை நள்ளிரவு ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதன்போது, கோ.கிருஸ்ணரூபன் (வயது- 26), இ. புலேந்திரன் (வயது 35) ஆகிய இருவருமே ஆற்றில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது மின்னல் தாக்கத்திற்குள்ளாகியுள்ளனர். இவர்களின்சடலம் கிராம சேவகரின் அனுமதியுடன் உறவினர்களினால் மீட்கப்பட்டு ஏறாவூர் வைத்தியசாலைக்கு பொலிஸாரின் உதவியுடன் எடுத்து செல்லப் பட்டுள்ளது. (இ-7-10)

## குற்றச்செயல்கள் தொடர்பாக அறிவித்தால் சட்டநடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் சட்டவிரோத மதுபான குற்றச் செயல்கள் தொடர்பாக தகவல்கள் தெரிந்தால் அந்தந்த பிரதேச மது வரிநிலையங்களுக்கு தெரியப்படுத்தும் பட்சத்தில் உடனடியாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என யாழ் மாவட்ட மது வரி அத்தியட்சகர் கே. தர்மசீலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும்தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் நடைபெறும் சட்ட விரோத மதுபான விற்பனை உற்பத்தி போன்ற குற்றச் செயல்கள் தொடர்பாக தகவல்கள் தெரியுமிடத்து அவற்றை அந்தந்த மது வரி நிலையங்களில் தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும்.

அந்த வகையில் யாழ்ப்பாண மதுவரி நிலையத்திற்கு 021 222 8000 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் சங்கானை மதுவரி நிலையத்துக்கு 021 225 0016 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் சாவகச்சேரி மதுவரி நிலையத்துக்கு 02122 7 0030 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் பருத்தித்துறை மதுவரி நிலையத்துக்கு 021 226 4222 என்ற இலக்கத்தினூடாகவும் மல்லாகம் மதுவரி நிலையத்துக்கு 021 224 1064 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் தொடர்பு னொண்டு தகவல்களை தெரிவிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-

## படைவீரர்களை மதவழிபாடுகளில் ஈடுபடுவதற்கு அனுமதிப்பதில்லை

### அஸ்கிரிய பீடாதிபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

உயர் இராணுவ அதிகாரியொருவர் படைவீரர்களை மதவழிபாடுகளில் ஈடுபட அனுமதிப்பதில்லை என கண்டி அஸ்கிரிய பீடாதிபதி கலகம சிறி அத்தாஸ்ஸி தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எனக்கு எழுத்து மூலம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.ஒரு தொகுதி படையினருக்கு மதவழிபாடுகளில் ஈடுபடக்கூட சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை.

தமக்குக் கீழ் கடமையாற்றி வரும் படை வீரர்கள் பெற்றோர், பிள்ளைகள் சுகவீனமுற்றாலும் விடுமுறை பெற்றுச்செல்ல அனுமதிப்பதில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.இந்த முறைப்பாடு பாதுகாப்புச் செயலாளரின கவனத்திற்குக் கொண்டு வரப்படும் என அஸ்கிரிய பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மஹிந்த சமரசிங்க அஸ்கிரிய பீடாதிபதியை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்ட போது இந்த விடயம் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு தொடர்பில் ஜனாதிபதியிடம் அறிவிக்க உள்ளதாக அமைச்சர் சமரசிங்க அஸ்கிரிய பீடாதிபதியிடம் தெரிவித்துள்ளார். (இ-7-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான இந்திய டெஸ்ட் அணி அறிவிப்பு



இந்தியா வந்துள்ள தென்னாபிரிக்க அணி இருபது-20 தொடரை முடித்துள்ளது. தற்போது ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் போட்டி தொடரில் விளையாடி வருகிறது. அதன்பின் நான்கு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட இருக்கிறது.

இந்த டெஸ்ட் தொடரின் முதல் இரண்டு போட்டிக்கான இந்திய அணி நேற்று டெல்லியில் நடந்த கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. இதில் ரவீந்திர ஜடேஜா, புவனேஸ்வர் குமார் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முதல் இரண்டு போட்டிக்கான இந்திய அணியில் இடம்பிடித்துள்ள வீரர்கள் விபரம்,

1. கோலி (கப்டன்). 2. முரளி விஜய். 3. தவான். 4. புஜாரா. 5. ரகானே. 6. சகா (விக்கெட் கீப்பர்). 7. அஸ்வின். 8. ஜடேஜா. 9. புவனேஸ்வர் குமார். 10. உமேஷ் யாதவ். 11. லோகேஷ் ராகுல் 12. ஸ்டூவர்ட் பின்னி. 13. வருண் ஆரோன். 14. இசாந்த் சர்மா.


ஒருநாள் போட்டியில் தொடர்ந்து சொதப்பிய ரவீந்திர ஜடேஜா அணியில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டிருந்தார். தற்போது நடைபெற்று வரும் ரஞ்சி டிராபியில் சவுராஷ்டிரா அணியில் இடம்பிடித்திக்கும் ஜடேஜா, ஜார்க்கண்ட் அணிக்கு எதிராக 13 விக்கெட்டுகள் வீழ்த்தியிருந்தார். இதனால் இந்திய அணியில் அவருக்கு இடம்கிடைத்துள்ளது.

காயம் காரணமாக நீண்ட நாள் அணியில் இடம்பிடிக்காமல் இருந்த புவனேஸ்வர் குமாரும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேபோல் கடைசி இரண்டு ஒருநாள் போட்டிக்கான அணியும் அறிவிக்கப்பட்டது. இதில் உமேஷ் யாதவ் நீக்கப்பட்டு ஶ்ரீநாத் அரவிந்த் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முதல் டெஸ்ட் போட்டி மொகாலியில் நவம்பர் 5-ந் திகதியும், 2-வது டெஸ்ட் பெங்களூருவில் 14-ந் திகதியும், 3-வது டெஸ்ட் நாக்பூரில் 25-ந் திகதியும், நான்காவது மற்றும் கடைசி டெஸ்ட் டெல்லியில் டிசம்பர் 3-ந் திகதியும் தொடங்குகிறது. (க)

# தோனியின் பரிசோதனையால் இந்திய அணி தோல்வி



தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3-வது ஒருநாள் போட்டியில் தோனியின் பரிசோதனை முயற்சியால் இந்திய அணி தோல்வியைத் தழுவியது.

தோனி டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் அவர் தனது இடத்தை 6-வது இடத்தில் இருந்து முன்வரிசையில் மாற்றி ஆட விருப்பப்பட்டார்.

அதற்கேற்றால் போல் பங்களாதேஷ் தொடரில் 4வது வீரர் வரிசையில் 2 போட்டியில் தோனி ஆடினார். ஆனால் அதில் இந்தியா தொடரை இழந்தது.

இந்நிலையில் தென்னாபிரிக்க தொடரில் கான்பூரில் நடந்த முதல் போட்டியில் 5-வது இடத்தில் களமிறங்கிய தோனியால் கடைசி நேரத்தில் ஆட்டத்தை முடிக்க முடியாமல் போனது.

இதனால் அவரது துடுப்பாட்டம் மற்றும் தலைவர் பதவி தொடர்பாக விமர்சனம் எழுந்தது.

இந்நிலையில் 2-வது போட்டியில் அதே வரிசையில் களம் இறங்கிய தோனி 92 ஓட்டங்கள் எடுத்து இந்திய அணியை வெற்றி பெற செய்து விமர்சனத்திற்கு பதிலடி கொடுத்தார்.

தற்போது நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் ரஹானே வர வேண்டிய 4-வது இடத்தில் தோனி ஆடினார். தொடக்கத்தில் நேர்த்தியாக ஆடிய தோனியால் நேரம் செல்ல செல்ல அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்த இயலவில்லை.

இதனால் ஓட்டங்களை எடுக்க முடியாமல் திணற வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர் 41.5வது ஓவரில் ஆட்டம் இழந்தார். 61 பந்துகளை சந்தித்து 5 பவுண்டரி மட்டும் அடித்து 47 ஓட்டங்கள் எடுத்தார்.

இதனால் தோனி மேற்கொண்ட புதிய பரிசோதனை தோல்வி அடைந்தது. அவர் செய்த தவறால் 3-வது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 18 ஓட்டங்களால் தோற்றது.

ஒருநாள் தொடரை தக்க வைத்துக் கொள்ள அடுத்த இரண்டு போட்டிகளிலும் இந்திய அணி வென்றாக வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இதனால் அணித்தலைவர் தோனிக்கு நெருக்கடி அதிகரித்துள்ளது.(க)

# சென்னையில் நடைபெறும் போட்டியில் மோர்க்கல் விளையாடுவது சந்தேகம்?



ராஜ்கோட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் தென்னாபிரிக்காவின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்தவர் வேகப்பந்து வீச்சாளர் மோர்னே மோர்கல். பவுன்சர் மன்னரான இவர் காயம் காரணமாக சென்னையில் வரும் 22-ந்தேதி நடைபெற இருக்கும் 4-வது ஒருநாள் போட்டியில் விளையாடுவது சந்தேகம் எனத் தெரிய வந்துள்ளது.

போட்டியின்போது மோர்கல் 6-வது ஓவரை வீசியபோது அவருக்கு காலில் வலி ஏற்பட்டது. இதுகுறித்து அவர் கூறுகையில், “இந்த காயம் குறித்து நான் சிறிது கவலை அடைகிறேன். ஆனால், நாங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்த மருத்துவக்குழுவை பெற்றுள்ளோம். இந்த குழு இரண்டு நாட்களுக்குள் என்னை தயார் செய்துவிடுவார்கள் என்று நினைக்கிறேன். எனது 6-வது ஓவரை வீசும்போது சற்று தடுமாறினேன். ஆனாலும் நான் பந்து வீசினேன். நான் அடுத்த போட்டிக்கு தயார் ஆவேனா என்று உறுதியாகச் சொல்லமுடியாது” என்றார்.

இதனால் சென்னை போட்டியில் மோர்கல் விளையாடுவாரா? என்பது உறுதியாக தெரியவில்லை. சென்னை போட்டி இரண்டு அணிக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தென்னாபிரிக்கா வெற்றி பெற்றால் தொடரை 3-1 எனக் கைப்பற்றிவிடும். இந்தியா வெற்றி பெற்றால் தொடரை 2-2 என சமநிலைப் படுத்தும். (க)

# முறைதவறி பந்து வீசுவதாக சாமுவேல்ஸ் மீது குற்றச்சாட்டு





மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னணி பட்ஸ்மேன் மார்லன் சாமுவேல்ஸ். இவர் பேட்டிங் செய்வதுடன் சுழற்பந்தும் வீசுவார்.

ஐ.சி.சி. விதிமுறைக்கு மாறாக பந்து வீசியதாக கடந்த 2008-ம் ஆண்டு இவருக்கு நான்கு ஆண்டுகாலம் தடை விதிக்கப்பட்டது. பின்னர் பந்து வீச்சை சரிசெய்ததால் 2011-ம் ஆண்டு பந்து வீச அனுமதிக்கப்பட்டார். ஆனால் 2013-ம் ஆண்டு இந்தியாவிற்கு எதிரான போட்டியில் வீசிய பந்திலும் குறைபாடு இருந்தது. இதனால் அவர் சுழற்பந்தில் குயிக்கர் டெலிவரி வீச தடை விதிக்கப்பட்டது. ஆனால், ஓப் பிரேக் பந்து வீச்சில் மற்ற முறையில் பந்து வீச அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மூன்றாவது முறையாக தற்போது நடந்து முடிந்த இலங்கை அணிக்கு எதிராக காலியில் நடைபெற்ற முதல் டெஸ்டிலும் அவர் வீசிய பந்து குறித்து சந்தேகம் எழுந்துள்ளது.

இதனால் இன்னும் 14 நாட்களுக்குள் அவர் தன்னுடைய பந்து வீச்சை பரிசோதனைக்குட்படுத்த வேண்டும். அதன்பின் பரிசோதனை முடிவு வரும்வரை பந்து வீச அனுமதிக்கப்படும் என்று ஐ.சி.சி. தெரிவித்துள்ளது. (க)

# டென்மார்க் பட்மிண்டன் இறுதிப் போட்டியில் சிந்து



டென்மார்க் ஓபன் சுப்பர் சீரீஸ் பட்மிண்டன் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில், இந்தியாவின் பி.வி.சிந்து வெள்ளிப் பதக்கம் வென்றார்.

இறுதிப் போட்டியில் சீன வீராங்கனை லீ ஸீவருயி உடன் நேற்று முன்தினம் மோதிய பி.வி.சிந்து 19-21, [illegible] என்ற நேர் செட்களில் போராடி தோற்று 2-வது இடம்பிடித்தார்.

சுப்பர் சீரீஸ் [illegible] தொடரின் இறுதிப் போட்டிக்கு அவர் முதல் முறையாக தகுதி பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கு நேர்முகப்பரீட்சை

தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 2015 ஆம் ஆண்டுக்கான ஆசிரிய மாணவர்களை உள்வாங்குவதற்குரிய நேர்முகப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதியிலிருந்து யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக் கையில் ,யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 2015 ஆம் ஆண்டுக்குரிய கற்கை நெறிக்கு 230 ஆசிரிய மாணவர்கள் உள் வாங்கப்படவுள்ளனர்.

அந்த வகையில் தமிழ் மொழிமூலமான கற்கைநெறியில் ஆரம்பக் கல்விக்கு 50 பேரும் விஞ்ஞானபாடத்துக்கு 50 பேரும் கணிதபாடத்துக்கு 20 பேரும் விசேட கல்விக்கு 15 பேரும் சித்திர பாடத்திற்கு 15 பேரும் நடன பாடத்துக்கு 10 பேரும் சங்கீத பாடத்துக்கு 10 பேரும் உள்வாங்கப்படவுள்ளனர்.

ஆங்கில மொழி மூலமானகற்கைநெறியில் கணித பாடத்துக்கு 10 பேரும் விஞ்ஞான பாடத்துக்கு 20 பேரும் ஆங்கில பாடத்துக்கு 30 பேரும் உள்வாங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(இ-9)


## மலிவு விற்பனை

தீபாவளியை முன்னிட்டு வாடிக்கையாளரின் நலன் கருதி 15.10.2015 முதல் 10.11.2015 வரையில் விசேட விலைக் கழிவில் சகல விதமான பொருட்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

நாடவேண்டிய இடம்
லைடன் புடைவை நிலையம்,
410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 021 222 2381

(சி-2010)



## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- இலங்கையில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. INTERNATIONAL CERTIFICATES பெறலாம். வெளிநாடொன்றில் இருக்கும்போது
- பிரெஞ் பேச தேவையான ஆற்றலை வழங்குகின்றோம்.

விரைவில் ஆரம்பம். உடன் பதிவை உறுதிப்படுத்துக.

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

கச்சேரி பஸ்நிலையம் →புகையிரதகடவை →AF (வெள்ளை மாடிக்கட்டடம்)


## 31ஆம் நாள் நினைவில்



### அமரர் கிருஷ்ணர் சுப்பிரமணியம்


எமது பாடசாலை ஆசிரியை திருமதி தவமணிதேவி சுப்பிரமணியம் அவர்களின் பாசமிகு கணவர் அமரர் கிருஷ்ணர் சுப்பிரமணியம் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/தோப்பு அருள்நந்தி வித்தியாலயம்,
அச்சுவேலி.

(2100)

யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை
தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2015

## மாணவ சாதனையாளர்கள்



| | | |
|---|---|---|
| பு.கம்சாயினி - 178 | சி.கிருத்திகன் - 165 | க.டகிதா - 157 |
| உ.கேனுஜா - 168 | ஜெ.அபிசன் - 163 | க.துவாரகா - 156 |
| சு.தினுஜன் - 167 | க.வர்ஜிதா - 160 | லோ.மகிஷாயினி - 155 |

100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்தி மகிழ்ச்சியடைகின்றோம்

| | | | |
|---|---|---|---|
| சு.சாணக்கியா - 151 | ஜெ.டினுசன் - 131 | சி.டேனுஜா - 119 | து.வேணுகாளன் - 109 |
| கி.துபிதா - 150 | ம.கீர்த்தனன் - 130 | ஜ.ஜானுசன் - 119 | பி.சனுஸன் - 108 |
| ர.ஜெபன்சியா - 150 | ஜோ.டெசிக்கா - 128 | சி.கஜனிகா - 114 | சி.ஜெசிந்தினி - 107 |
| ச.ஜனார்த்தனி - 146 | ச.சாருஜன் - 127 | ச.சுலோனா - 112 | ந.விபுசன் - 105 |
| சி.சோபிதா - 136 | ச.சாங்கீர்னா - 124 | ச.சோபனா - 109 | ச.சபேஷன் - 105 |
| வி.நிவேதனன் - 136 | சு.கேதிகா - 124 | | நோ.நிருஷாந் - 105 |
| க.வேனினி - 136 | து.சகீனா - 121 | | |
| சி.கலாபவன் - 132 | அ.லக்சிகன் - 119 | | |

(சி-2500)

வாழ்த்துவோர்: சி.சிறீகாந்தன், அ.இரகுபதி } குடும்பத்தினர்.

# சொற்பொழிவு

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு – சந்திரபுரம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான நவராத்திரி கால விசேட சொற்பொழிவு தினமும் மாலை 6 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை ஆலய பரிபாலன சபைத் தலைவர் செ.ஞானசேகரம் தலைமையில் நடைபெற்று வருகின்றது. இதற்கமைய இன்று செவ்வாய்க்கிழமை அம்பிகையை சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம் எனும் விடயம் தொடர்பாக ஈழவுர் சைவப்புலவர் கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் ஐயா சொற்பொழிவினை வழங்கவுள்ளார்.

(இ-5)


## அமெரிக்க Green Card Lottery -2017

அமெரிக்க Green card Lottery விண்ணப்பத்தில் 13 வருட அனுபவமிக்க எமது நிறுவனத்தில் 2017 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் விபரங்களை ரூபா 15/- முத்திரையொட்டப்பட்டு சுய முகவரியிட்ட தபாலுறையை

**Bristol Cyber cafe.**
**No. 8/3/4, Bristol Street,**
**Colombo -01** எனும் முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

(எமது நிறுவனத்திற்கு கிளை அலுவலகமோ அல்லது பிரதிநிதிகளோ இலங்கையின் எப்பாகத்திலும் இல்லை என்பதை அறியத் தருகின்றோம்.)


**Tel : 0112393919, 0774276579**

W/A 44843 www.bristolcc.biz

(C-2243)


## மு/வற்றாப்பளை மகா வித்தியாலயம்

தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை - 2015




சித்தியடைந்த மாணவர்களையும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் அம் மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியை செல்வி போ. சித்திரா அவர்களையும் மனமுவந்து வாழ்த்துகின்றோம்

அதிபர், ஆசிரியர், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்
மு/ வற்றாப்பளை மகா வித்தியாலயம்

(2501)

# ராசி பலன்

**20.10.2015**
(ஐப்பசி 03, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
சப்தமி முற்பகல் 10.17 யமணிவரை
பூராடம் முற்பகல் 11.25 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ரோகினி, மிருகசீரிடம்.<br>மக-சந்<br>மாலை 5.14இற்கு | | |
| | | | குரு, செவ், சுக் |
| சந் | சனி | சூரி | ராகு, புத |

**மேடம்:** புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, உடல்நலம் சீராகி உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**இடபம்:** குடும்ப பொறுப்புக்கள் அதிகரிக்கும் நாள், உறவினர்களிடம் பேசும் போது கவனம் தேவை, செலவுகள் அதிகரிக்கும், மனக்கிலேசங்கள் கூடும் நாள்.

**மிதுனம்:** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, அலங்காரப் பொருட்களை வாங்க நினைப்பீர்கள்.

**கடகம்:** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வியாபார விருத்தியுண்டு, மருத்துவச் செலவுகள் குறையும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்:** பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்து கொள்ளும் நாள்.

**கன்னி:** வாகன சுகமுண்டு, கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சுபசெய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்:** செய்தொழில் மேன்மையுண்டு, உறவினர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வீட்டுத் [illegible] பூர்த்தியாகும், காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்:** நல்ல காரியத்திற்கு அடித்தளம் அமைப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தினரின் தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

**தனுசு:** சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு, எதிர்பாராத காரியமொன்று நடைபெறலாம்.

**மகரம்:** தொழிலில் சிறு மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், உறவினர் வீட்டு சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சஞ்சலங்கள் கூடும் நாள்.

**கும்பம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம், எதிர்பார்த்த பணவரவுகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**மீனம்:** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், உறவினர்களும் நண்பர்களும் வலியவந்து உதவுவார்கள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், போசன நன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 570 வழக்குப் பதிவுகளின் ஊடாக

# 46 இலட்சத்து 86000 ரூபா தண்டப் பணமாக அறவீடு!

### யாழ்.மதுவரி அத்தியட்சகர் தகவல்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்ட மதுவரி திணைக்களத்தினால் கடந்த 9 மாதங்களில் மதுவரி கட்டளை சட்டத்துக்குட்பட்ட குற்றங்களில் ஆயிரத்து 570 குற்றங்களுக்காக வழக்குப்பதிவு செய்யப்பட்டு 46இலட்சத்து 86ஆயிரம் ரூபா தண்டப்பணமாக அறிவிடப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பிராந்திய மதுவரி அத்தியட்சகர் கே.தர்மசீலன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்திலுள்ள 5மதுவரி நிலையங்களின் ஊடாக மதுவரி நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கைகளின் போது மதுவரி கட்டளை சட்டத்துக்கு உட்பட்ட குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக அந்தந்த நீதிமன்றங்களில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு குற்றவாளிகளிடம் இருந்து தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

அதில் சட்டவிரோதமாக சாராயம் விற்றமை, வெளிநாட்டு மது விற்பனை, சட்ட விரோதமாக கள் விற்றமை, சட்ட விரோதமாக கசிப்பு வைத்திருந்தமை, கஞ்சா வைத்திருந்தமை, கசிப்பு உற்பத்தி, சட்ட விரோத சிகரெட் வைத்திருந்தமை, அளவுக்கு அதிகமாக சாராயம் வைத்திருந்தமை, சட்ட விரோதமாக கள் வைத்திருந்தமை, சட்டவிரோதமாக சிகரெட் விற்றமை போன்ற குற்றங்களுக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்தவகையில் யாழ்ப்பாண மதுவரி நிலையத்தினூடாக 405 குற்றங்களுக்கு வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு 9இலட்சத்து 73ஆயிரம் ரூபாவும் சங்கானை மதுவரி நிலையத்தினூடாக 373 குற்றங்களுக்கு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 8இலட்சத்து 87ஆயிரம் ரூபாவும் சாவகச்சேரி மதுவரி நிலையத்தினூடாக 249 குற்றங்களுக்கு வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு 20இலட்சத்து 95ஆயிரம் ரூபாவும் பருத்தித்துறை மதுவரி நிலையத்தினூடாக 250 குற்றங்களுக்கு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு ஒரு இலட்சத்து 63ஆயிரம் ரூபாவும் மல்லாகம் மதுவரி நிலையத்தினூடாக 293 குற்றங்களுக்கு வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு 5இலட்சத்து 68ஆயிரம் ரூபாவும் தண்டப் பணமாக அறிவிடப்பட்டுள்ளது.

மதுவரி கட்டளைச் சட்டத்துக்கு உட்பட்ட குற்றங்களில் சட்டவிரோதமாக கள் விற்றமை, சட்டவிரோதமாக கள் வைத்திருந்தமை மற்றும் சட்ட விரோதமாக சிகரெட் விற்றமை போன்ற குற்றங்களே யாழ். மாவட்டத்தில் அதிகரித்து காணப்படுகின்றன.

அந்தவகையில் சட்டவிரோதமாக கள் விற்றமை தொடர்பாக 698 வழக்குகளும் சட்ட விரோதமாக கள் வைத்திருந்தமை தொடர்பாக 557 வழக்குகளும் சட்டவிரோதமாக சிகரெட் விற்றமை தொடர்பாக 248 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

### கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு





(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகபீட 3 ஆம் வருட மாணவர்களால் மக்கள் தொடர்பாடல் எனும் பாடத்திட்டத்துக்கு அமைவாக குழு-I மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான கணித பாட வழிகாட்டல் கருத்தரங்கு நேற்று முன்தினம் பி.ப. [illegible] மணிக்கு யாழ்.சைவ வித்தியா விருத்தி சங்கத்தில் நடைபெற்றது.

இக் கருத்தரங்கில் கலந்து கொண்ட 35 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (இ-9)

### வாணி விழா இன்று

வேலணை சரவணை கிழக்கு பள்ளம்புலம் முருக மூர்த்தி சனசமூக நிலையத்தின் வாணிவிழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சரவணை பள்ளம்பு லம் அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவில் நால்வர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட செயலக தொழில்நுட்ப அலுவலரும் சமயப் பொறுப்பாளருமான பஞ்சாட்சரம் ஞானபண்டிதன் தலைவராகப் பங்கேற்று நடத்தும் இந் நிகழ்வில் வரவேற்புரையினை சொ.சிவயோகலிங்கம் வழங்குவதுடன் சிறப்புரையினை யாழ். நாரந்தனை கணேச வித்தியாலய ஆசிரியர் தளையசிங்கம் கபிலன்வழங்கவுள்ளார்.(இ-5)

### பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதன்தலைமையில்நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ். வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன், கௌரவ விருந்தினராக கிளிநொச்சி கரைச்சி உதவிப் பிரதேச செயலர் திருமதி எஸ். உமாகாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5-136)

## சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் சைவமாநாடும் கீரிமலை சிவபூமியில்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் நடத்தும் சைவப் புலவர் பட்டமளிப்பு விழாவும் சைவ மாநாடும் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை கீரிமலை சிவபூமி மடாலய மண்டபத்தில் சிவத் தமிழ்ச் செல்வி சைவப் புலவர் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அரங்கில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத் தலைவர் தி.முத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் மா.வேதநாதன்கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானம் சிவபூமி அறக் கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், கௌரவ விருந்தினர்களாக சி.ஆறுமுகநாதன், திருமதி கு.கங்கைவேணியன், சைவப் புலவர் கலாபூஷணம் சு.செல்லத்துரை, சைவப் புலவர் கலாநிதி செ.திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வுகளானது காலை, மாலை என இரு அமர்வுகளாக இடம்பெறவுள்ளது.

இதற்கமைய காலை அமர்வு சைவப் புலவர் மு.திருஞான சம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலய மாணவர் வழங்கும் வரவேற்பு நடனம் இடம்பெறுவதுடன் வரவேற்புரையினை சைவப் புலவர் ஆனந்தி ஜெயரட்ணம், ஆசியுரையினை இராஜராஜ ஸ்ரீ.கு.நகுலேஸ்வரக் குருக்கள், அருளுரையினை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், மு.திருஞான சம்பந்த பிள்ளை, சிறப்புரையினை கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

முற்பகல் 10.30 மணிக்கு சங்கத்தின் பொருளாளர் சைவப் புலவர் சி.நந்தகுமார் தலைமையில் கௌரவிப்பு வைபவம் இடம்பெறும்.

இதன்போது இராஜராஜ ஸ்ரீ.கு.நகுலேஸ்வரக் குருக்கள், திருமதி சி.ஆறுமுகநாதன், திருமதி கு.கங்கைவேணியன் ஆகியோர் கௌரவப் பட்டமளிப்பினை பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

அத்துடன் சைவப்புலவர் கலாபூஷணம் எஸ்.செல்லத்துரை, சைவப்புலவர் கலாநிதி செ.திருநாவுக்கரசு ஆகியோர் மூத்த சைவப் புலவர் கௌரவிப்பினை பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து சைவப் புலவர், இளஞ் சைவப் புலவர் பட்டமளிப்பு, பரிசளிப்பு வைபவம் என்பன இடம்பெறும்.

இதன்போது 2015 ஆம் ஆண்டுத் தேர்வில் சித்தி பெற்றோர், வினாவிடைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள் என்போர் பரிசில்களையும் பட்டத்தினையும் பெற்றுக் கொள்ளவுள்ளனர். தொடர்ந்து பிற்பகல் 12.30 மணிக்கு அமர்வு-II இடம் பெறும்.

சங்கத்தின் உப தலைவர் சைவப் புலவர் கலாபூஷணம் எஸ்.செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் "சைவநாதம்" மலர்-5வெளியீடு செய்து வைக்கப்படும்.

இதன்போது நூல் வெயீட்டுரையினை சங்க பிரசார செயலாளர் சைவப் புலவர் கந்த சத்தியதாசன் வழங்கவுள்ளதுடன் நயப்புரையினை சைவப் புலவர் கலாநிதி செல்லையா திருநாவுக்கரசு வழங்கவுள்ளார்.

தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்கு அமர்வு III இடம் பெறும். சங்கத்தின் உப தலைவர் சைவப் புலவர் கலாநிதி சா.தில்லைநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள் வழங்கும் புராணபடனம், கதாப்பிரசங்கம், கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலய மாணவர்கள் மற்றும் மானிப்பாய் ஸ்ரீ சத்தியசாயி பாடசாலை மாணவர்கள் வழங்கும் நடனம் என்பன இடம்பெறவுள்ளது.(இ-5)




### நவராத்திரி விழா

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்று நவராத்திரி கால பூசைகளில் நாளை புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்கு மகஷிஷாசுரன் போரும் மறுநாள் வியாழக்கிழமை பிற்பகல் 5 மணிக்குமானம்பூ உற்சவமும் இடம் பெறும். (இ-5)

### வயோதிபர் படுகாயம்

மோட்டார்சைக்கிள் விபத்தில்படுகாயமடைந்தவயோதிபர் ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் நெல்லியடிப் பகுதியில் உள்ள எரிபொருள் நிலைய முன்றலில் இடம்பெற்றது.

இதில் கரவெட்டி மேற்கைச் சேர்ந்த இராசலிங்கம் சிவராசா (வயது- 58) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்தவராவார்.

துவிச்சக்கரவண்டியில்சென்று கொண்டிருந்த குறித்த வயோதிபரை மோட்டார் சைக்கிள் மோதித் தள்ளியதிலே மேற்படி விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் சாரதி நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுவிசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார் என தெரிய வந்தது.(இ-5-60)

### குருபூசையும் விஜயதசமியும்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீமத் மகாதேவா சுவாமிகளின் 73 ஆம் வருட குருபூசையும் விஜயதசமிப்பூசையும் எதிர்வரும் 22 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் கந்தர்மடப் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ சிவகுரு நாத குருபீட மகாதேவா சுவாமிகள் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது சொல்லின் [illegible] வழங்கும் சொற்பொழிவும் [illegible] (இ-5)

### சித்திர வித்தியாரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில் இயங்கி வருகின்ற ஐ.ஏ.ரி.சித்திரப்பயிற்சி நிறுவனத்தில் இலவச சித்திர வித்தியாரம்பம் நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

பயில விரும்பும் மாணவர்க்ள் அன்றைய தினம் குறித்த [illegible] வருகை தருமாறு ஐ.ஏ.ரி. சித்திரப் பயிற்சி நிறுவன இயக்குநர் அறிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் மட்டும் பேசி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது

## தமிழர் விடுதலைக் கூட்டணி சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மட்டும் பேசி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு டன் பேச்சு நடத்தி நிரந்தர அரசியல் தீர்வு காணத்தயார் என்ற அமைச்சர் ராஜித சேனாரட்னவின் கூற்று வெறும் பகல் கனவே. நல்லாட்சி மாற்றத்தின் போது உதவியவர்களுடன் அரசியல் தீர்விலும் ஒன்றாக பேசி தீர்வு காணபது இலகுவான காரியம். நீண்டகால அரசியல் பிரச்சினைக்கு தமிழ் தேசிய கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்த தீர்மானித்துள்ளோம் என அமைச்சர் கூறியுள்ளார்.

அரசியல் பேசுகின்றவர்கள் ஓரளவுக்கேனும் நாட்டின் சரித்திரத்தையும், மாற்றுக் கட்சிகளின் பல்வேறு நிலைப்பாடுகளை சரியாக தெரிந்திராமல் அரசியல் செய்ய முடியாது.

முதலாவதாக நல்லாட்சி மாற்றத்தின் போது தமிழர் விடுதலைக் கூட்டணியே முதன்முதலாக தனது ஆதரவினை தெரிவித்தது. ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பு இரண்டு வாரங்களின் பின்பே தமது நிலைப்பாட்டை வெளிபபடுத்தியது. அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பலவித தீர்வுகளை முன் வைத்தது என்பது மட்டுமல்ல தென்னாபிரிக்கா போன்ற வேறு நாடுகளின் அரசியல் சாசனங்களையும் ஆராய்கின்றனர். வேறு பிரச்சினைகளை கிளப்பக்கூடிய மாற்றுக் கட்சிகளால் நிராகரிக்கப்படும் எனத் தெரிந்தும் வேறு ஆலோசனைகளை முன்வைத்து வருகின்றனர்.

ஆகவே ராஜித சேனரட்னா சொல்வதை அவர்கள் கேட்கப்போவதி ல்லை. தமிழ் தேசிய கூட்ட மைப்பு முன்வைக்கின்ற தீர்வினை ராஜித சேனாரட்னவும் ஏற்கப் போவதில்லை. முக்கியமான விடயம் பல்வேறு கட்சிகளின் அனுசரணையின்றி எந்தத் தீர்வையும் எட்டமுடியாது.

தமிழர் விடுதலைக் கூட்டணி இந் திய அரசியல் சாசனத் தையொத்த முறையை வலியுறுத்தி வருவதோடு கடந்த பத்து ஆண்டு காலமாக அது சம்பந்தமாக பல்வேறு தலைமைகளுடனும், நாட்டின் பல்வேறு கட்சிகளுடனும் தாங்கள் தங்கள் கட்சி உட்பட கலந்துரையாடி வந்துள்ளது. இதே நிலைப்பாட்டை தொடர்ந்து வலியுறுத்தி வருவதும் தமிழர் விடுதலைக் கூட்டணியே.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள் புது அரசியல் சாசனத்தைத் தேடி தென்னாபிரிக்காவுக்கு பல தடவை விஜயம் செய்திருக்கின்றனர். அதன் விளைவாக இந்திய அரசின் வெறுப்பையும் ஓரளவுக்கு சம்பாதித்துக் கொண்டனர். ஆகவே குட்டையை மேலும் குழப்பாமல் எல்லா மக்களும் ஏற்றுக்கொள் ளக் கூடிய வகையில் ஒரு தீர்வை தேடிப்பிடிப்பதை விடுத்து தமிழ் தேசிய கூட்டமைப்பினருடன் பேசி தீர்வு காணலாம் என நினைப்பதோ அதை மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று எண்ணுவதோ பொருநதாத விடயமாகும். ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆலோசனையை நாட்டின் பல்வேறு இன மக்களும், தலைவர்களும் ஏற்கக் கூடிய அல்லது ஏற்க வைக்கக்கூடிய நிலைமை உருவாகியுள்ளது.

குறிப்பாக த.தே.கூ இன் இரா.சம்பந்தனும் இந்திய முறையிலான தீர்வினை ஏற்கக்கூடியதாக இருக்கிறதென்று பகிரங்கமாக தெரிவித்துள்ளார்.

எமது மேலதிகமான ஆலோசனை தென்னாபிரிக்காவின் பல்வேறு உரிமைகளையும் உள்ளடக்கிய (Bill of rights) சட்டக்கோர்வையை எமது அரசியல் சாசனத்தோடு இணைப்பது மிகப் பொருத்தமாக இருப்பது மட்டுமல்ல அநேகமாய் ஏற்கக்கூடியதாகவும் இருக்கும். ஆகவே புதுப்பித்து பிரச்சினைகளை கிளப்பி பிரச்சினைகளுக்குரிய தீர்வை தூரத்துக்கு எடுத்துச் செல்லாமல் புத்திசாதுரியமாக தலைவர்கள் நடந்து கொள்ள வேண்டும் என்பதை சுட்டிக்காட்டுகிறேன்.

இதில் முக்கிய விடயம் யாதெனில் மிகப் பெரியளவில் தற்பெருமையுடன் 18 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இயங்கி வந்த ஜனநாயக கட்சியாகிய தமிழர் விடுதலைக் கூட்டணி தனக்கிருந்த பெருமைமிக்க பழைய இடத்தை மீளப்பெறுகின்ற தகுதியை தமிழ் தேசிய கூட்டமைப்பு இழந்து நிற்கிறது. ஏனெனில் மிக மோசமான முறையில் நாட்டில் நிலவிய ஜனநாயக பாரம்பரியத்தை த.தே.கூ சீரழித்துள்ளமையாலேயே.

2004ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தல் கிடைத்த வெற்றியையே அவர்கள் இன்றும் சுமந்து நிற்கின்றனர்.

ஆனால் இந்த வெற்றியைப் பற்றி அதில் ஏற்பட்ட மோசடிகள் பற்றி அமைச்சர் ராஜித சேனாரட்ன அறியாதிருப்பது கவலைக்குரிய விடயமாகும். ஆனால் இந்த உண்மையை முழு நாடு உட்பட சர்வதேச சமூகமும் அறிந்திருக்கிறது. ஆகவே ராஜித சேனாரட்னவின் ஆலோசனை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாதவொன்று என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)




# இளைஞர் பாராளுமன்றத் தேர்தல் எதிர்வரும் நவம்பரில் நடைபெறும்

225 இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதாக இலங்கை இளைஞர் பாராளுமன்றத் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.எல்.எம்.என். நைறூஸ் தெரிவித்துள்ளார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் எரந்திக வெலியங்கவினால் சகல மாவட்டப் பணிமனைகளுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையிலே அவ்வாறு தெரிவித்துள்ளதாகவும் எதிர்வரும் நவம்பர் 7 ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறும் மாவட்டங்களின் உதவிப் பணிப்பாளர்களுக்கும் வலியுறுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் இளைஞர் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்று முன்தினம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்டப் பணிமனையில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த போதே மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.எல்.எம்.என். நைறூஸ் அவ்வாறு தெரிவித்தார். இவ் விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

மொத்தமாக 225 பேரைக் கொண்ட இவ் இளைஞர் பாராளுமன்றத்துக்கு தொகுதி அடிப்படையில் 160 பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் ஊடாகத் தெரிவு தெரிவு செய்யப்படுவதுடன் 15 பிரதேச செயலாளர்களுக்கு அதிகமான பிரதேசங்களைக் கொண்ட மாவட்டங்களுக்கு போனஸ் அடிப்படையில் 9 உறுப்பினர்களும் பல்கலைக்கழகங்களில் இருந்து 15 உறுப்பினர்களும் சட்டக் கல்லூரியில் இருந்து 10 உறுப்பினர்களும் மாற்றுத் திறனாளிகளில் இருந்து 2 உறுப்பினர்களும் பாடசாலை மாணவர் தலைவர்கள் தலைவிகளில் இருந்து 10 உறுப்பினர்களும் இளைஞர் பிரதிநிதிகள் உள்ள வேறு அமைப்புக்களில் இருந்து 9 பேரும் அமைச்சர் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் சிபார்சில் 10 பேரும் நேர்முகப் பரீட்சை ஊடாகவும் மொத்தமாக 225 பேர் தெரிவு செய்யப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

இத்தேர்தலில் 2015.06.30 ஆம் திகதிக்கு முன் புனரமைக்கப்பட்ட அல்லது அமைக்கப்பட்ட இளைஞர் கழகங்களின் 13 தொடக்கம் 29 வயதுடைய இளைஞர் கழக உறுப்பினர்கள் வாக்களிக்க முடியும் எனவும் 18 வயது தொடக்கம் 28 வயதுடைய இளைஞர் கழகங்களின் நிறைவேற்றுப் பதவியில் உள்ளவர்கள் போட்டியிட முடியும் எனவும் தெரிவித்துள்ள அவர் வேட்புமனுத் தாக்கல் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 8 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் இடம் பெறவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சகல பிரதேச செயலகங்களிலும் நவம்பர் 7 ஆம் திகதி காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை தேர்தல் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவித்த அவர் முதலாவது பாராளும ன்றம் நவம்பர் 11 ஆம் திகதி மகரகமையில் அமைந்துள்ள இலங்கை இளைஞர் பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவித்தார். (இ-7-10)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா:58செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:<br>நிலஅளவையாளர் லண்டன் PR<br>தொ.இ: B/1448 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 72செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Diploma in IT<br>தொ.இ: G/2623 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 67 செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/வங்கியாளர்<br>தொ.இ: B/1450 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 56செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:சட்டத்தரணி<br>தொ.இ: G/2626 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 44செவ் 7 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:BSC/அரச தொழில்<br>தொ.இ: B/1487 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 18 சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/2632 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 23செவ் 2 ல<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில் : O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/1456 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 59<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/2648 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளுக்கான இரண்டாம் கட்ட மானிய உர விநியோக கால அட்டவணை

## ஒலுமடு கமநல சேவை நிலையம் அறிவிப்பு

(மல்லாவி)

**ஒலுமடு கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட ஒன்பது கமக்கார அமைப்பிலுள்ள விவசாயிகளில் 2015-2016 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற் செய்கையில் விதைப்பை மேற்கொண்ட விவசாயிகளுக்கும் மற்றும் தரை பண்படுத்தல், பிரதான கால்வாய் சுத்தப்படுத்தல், குளத்தின் அணைக்கட்டு சுத்தப்படத்தல் ஆகிய வேலைகளை பூர்த்தி செய்தவர்களுக்கான இரண்டாம் கட்ட மானிய உர விநியோகமும் இடம்பெறவுள்ள கால அட்டவணையை ஒலுமடு கமநல சேவை நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.**

இதற்கமைய ஒலுமடு கமநல சேவை நிலையத்தில் வைத்து இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அம்பகாமம் கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாயிகளுக்கும் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு திருமுறிகண்டி, மாங்குளம், இந்துபுரம், மாங்குளம் வடக்கு ஆகிய கமக்கார அமைப்புகளுக்குட்பட்ட விவசாயிகளுக்கும் வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு தச்சடம்பன், மணவாளன் பட்ட முறிப்பு ஆகிய கமக்கார அமைப்புகளுக்குட்பட்ட விவசாயிகளுக்கும் எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஒலுமடு கமக்கார அமைப்பிலுள்ள விவசாயிகளுக்கும் வழங்கப்படவுள்ளது.

முதலாம் கட்ட மானிய உர விநியோகத்தின்போது உரத்தினைப் பெறத் தவறிய விவசாயிகள் தமக்குரிய கமக்கார அமைப்பிற்கு இரண்டாம் கட்டத்தில் மானிய உர விநியோகம் நடைபெறும்போது பெற்றுக்கொள்ள முடியும்.

ஒலுமடு கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட அனைத்து குளங்களின் கீழான விதைப்புக்கான இறுதித் திகதி எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் முடிவடைகின்றது. குறித்த திகதி முடிவதற்குள் மானிய உர விநியோகம் நிறைவுபெற வேண்டி இருப்பதால் மானிய உரக் கொள்வனவை விதைப்புத்திகதிக்குள் விவசாயிகள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

விதைப்பு திகதிக்கும் பின்னர் உர மானியக் கொள்வனவு இருக்குமாயின் பயிரழிவுகள் ஏற்படும் போது உரமானியக் காப்புறுதித் தொகையை பெற்றுக்கொள்ள முடியாது என்பதை விவசாயிகளுக்கு ஒலுமடு கமநல சேவை நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (2-15)

## கட்டட நிர்மாணப் பணிகளை பார்வையிட்டார் அமைச்சர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முத்தையன்கட்டில் புதிதாக நிர்மாணிக்கப்படும் சந்தைக்கட்டடத்தை வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட, முத்தையன்கட்டு நன்னீர் மீன்பிடி அமைச்சின்2.3 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நன்னீர் மீன் சந்தையினை அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டார் வடக்கு மீன்பிடி அமைச்சர்.

அங்கு சென்ற வேளை வடக்கு மாகாண சபையின் உறுப்பினரான ரவிகரன், அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வீதி அபிவிருத்தி திணைக்கள பொறியியலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து நன்னீர் மீன்பிடி சங்கத்தினருடனும் அங்குள்ள கிராமமட்ட அமைப்புக்களுடனும் விசேட கலந்துரையாடல் ஒன்றும் நடைபெற்றது. (2-9)


## துரித மீட்டல் வகுப்பு

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நடப்பாண்டில் நடைபெறவுள்ள க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் கிறிஸ்தவப் பாடத்தை எழுதவுள்ள மாணவர்களுக்கான துரித மீட்டல் வகுப்பு எதிர்வரும் 24 சனிக்கிழமை, மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறுமென துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

எனவே பாடசாலை அதிபர்கள் பொறுப்பாசிரியர்களுடன்மாணவர்களைமேற்படிசெயலமர்வில் பங்கேற்பதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அவர் மேலும் அறிவித்துள்ளார்.(2-15)

### பூநகரி–வேரவில்

## வீதியை செப்பனிட்டுத் தருமாறு மனு வழங்கப்பட்டும் நடவடிக்கை இல்லை



(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி - பூநகரி, பல்லவராயன் கட்டுச் சந்தியிலிருந்து கிராஞ்சி - வேரவில் வரையான 15 கிலோ மீற்றர் தூரம் கொண்ட வீதியை புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரக்கை விடுத்துள்ளனர். இந்த விடயம் தொடரபில் அப்பகுதிமக்கள்கிளிநொச்சிமாவட்டச்செயலரிடம் மனு ஒன்றையும் கையளித்துள்ளனர்.

பல்லவராயன்கட்டுச் சந்தியிலிருந்து கிராஞ்சி - வேரவில் வரையான வீதி சேதமடைந்து ள்ளது. இவ் வீதி வழியாக கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு, பொன்னாவெளி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றன.

அத்துடன், தற்போது இடம்பெற்று வருகின்ற பேருந்து சேவை போதாது என்றும் மேலும் பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துமாறும் பிரதேசமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-281)

## இருட்டுமடு கிராமத்தின் குறைகள் படிப்படியாக தீர்த்து வைக்கப்படும்

### வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் உறுதி

முல்லை. இருட்டுமடு கிராமத்தில் நீண்ட காலமாக தீர்க்கப்பட்டாதிருக்கும் பல்வேறு அடிப்படை வசதிகளை தீர்த்து வைக்கும்முகமாக மக்கள் குறைகேள் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. கடந்த 17 ஆம் திகதி இருட்டுமடு கிராமத்தில் மக்கள் சந்திப்பொன்றை வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் முன்னெடுத்திருந்தார்.

இருட்டுமடு கிராமத்தின் பொதுமக்களின் கோரிக்கைக்கு அமைவாக ஏற்பாடு செய்யப்பட்ட இச்சந்திப்பில் கிராமத்தில் மக்கள் பிரதிநிதிகளும் மக்களும் கலந்து தம் கிராமம் சார்ந்த, தம் கிராம மக்கள் சார்ந்த நீண்டகாலமாக தீர்க்கப்பட்டாதிருக்கும் பல்வேறு அடிப்படைக் குறைகளையும் கோரிக்கைகளையும் முன் வைத்தனர்.

மேலதிக 300 மீற்றர் தூரத்திற்கான வாய்க்கால் நீட்டிப்பு, கிராமத்தின் பல இடங்களுக்கு மின்சார இணைப்பு நிறுவப்படாமை, வீதிகள் புனரமைப்பு செய்யப்படாமை, பொது நோக்கு மண்டபக் குறைபாடு, வாழ்வாதார உதவி கோரல் ம்ற்றும் வீட்டுத் திட்டக்குறைபாடுகள் தொடர்பில் அச்சந்திப்பில் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இது தொடர்பாக ரவிகரன் தனது கருத்துகளை தெரிவிக்கையில், முன்வைக்கப்பட்ட குறைகள் அனைத்தையும் படிப்படியாக தீர்ப்பதற்கான தன்னாலான முயற்சிகள் எடுக்கப்படும் எனத் தெரி வித்தார்.

மேலும் இருட்டுமடு கிராமத்தில் இருந்து உடையார்கட்டு மகாவித்தியாலயத்திற்கு நடந்து செல்லும் மாணவர்களுக்கு அடுத்த ஆண்டிலிருந்து தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒத்துக்கீட்டின் ஊடாக மிதிவண்டிகள் வழங்கப்படும் எனவும் வாழ்வாதார, நலிவுற்ற குடும்பங்களுக்கான வாழ்வாதார ஊக்குவிப்பு உதவிகளை வழங்கும் செயன்முறை தொடர்ந்தும் இக்கிராமத்திலும் முன்னெடுக்கப் படும் என்றும் உறுதியளித்தார். (2-281-250)




## வளநகர் கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாயிகளுக்கு விதைநெல் வழங்கல்


(மல்லாவி)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் துணுக்காய் கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட வள நகர் கமக்கார அமைப்பிற்குட்பபட்ட 155 விவசாயிகளுக்கு 2015-2016 ஆம் ஆண்டு காலபோக நெற்செய்கையை ஊக்குவிக்கும் முகமாக ஏக்கருக்கு தலா 3 புசல் வீதம் 880 புசல் கீரிச் சம்பா விதை நெல் வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு துணுக்காய் கமநல சேவை நிலையத்தில் துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் சி.பிரபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்விற்கு பிரதம விருந்தினராக முல்லைத்தீவு/வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் கலந்து கொண்டு விதை நெல்லை வழங்கி வைக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அதிகாரிகள், துணுக்காய் பிரதேச செயலர் எஸ்.குணபாலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ள்னர்.


நிகழ்வில் வளநகர் கிராம சேவகர், விவசாயிகள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (2-15)



வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் நிதியொதுக்கீட்டின் கீழ் மன்னார் மாவட்டத்தில் பாலியாறு, பனங்கட்டுக்கொட்டு ஆகியகிராமங்களில் அரைக்கும் ஆலைகள் அண் மையில் வடக்குமாகாணமுதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனில் திறந்து வைக்கப் பட்ட போது... (படம்:- பொ.சோபிகர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின முன்னாள் மகளிர் அரசியல் துறை பொறுப்பாளரான தமிழினி. உடல் நலக் குறைவால் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். இவரது பூதவுடல் நேற்றுமுன்தினம் மகரகமவில் இருந்து கிளிநொச்சிக்கு எடுத்து வரப்பட்டு சிவபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

(படங்கள்:- மல்லாவி செய்தியாளர்)

# பதுக்கி வைக்கப்பட்ட 25கிலோ கேரளா கஞ்சா பொதிகள் மீட்பு

(முழுங்காவில்)

முழங்காவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சோலை நிலா பல்லவராயன் கட்டு கிராமப் பகுதியிலுள்ள வீடொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 25 கிலோகிராம் பொதியிடப்பட்ட கேரளா கஞ்சா முழங்காவில் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த வீட்டில் கஞ்சா பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து முழங்காவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.எம். ஜே.ஆரியவன்ச தலைமையிலான பொலிஸ் குழுவினர், குறித்த பகுதிக்குச் சென்று தேடுதல்களை மேற்கொண்ட போது ஒரு தொகுதி கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன.



குறித்த கஞ்சா, கேரளா கஞ்சா எனவும் 25 கிலோகிராம் எடை கொண்டது எனவும் முழங்காவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, முழங்காவில் குமுழமுனை மற்றும் சோலை நிலா பல்லவராயன்கட்டு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் மேற கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது மீட்கப்பட்டுள்ள கஞ்சா, கடல் மார்க்கமாக இந்தியாவில் இருந்து இந்திய மீனவர்களினால் கொண்டு வரப்பட்டு, தம்மிடம் விற்பனைக்காக வழங்கப்பட்டுள்ளதாக குறித்த சந்தேகநபர்கள் தெரிவித்து ள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முழங்காவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2)

# க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாட சாலைகளில் இருந்து நடப்பாண்டில் க.பொ.த (சா/த) பரீட்சையில் தகவல் தொழில்நுட்ப பாடத்தை எழுதும் மாணவர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணியளவில் இருந்து பிற்பகல் 4 மணி வரை துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தின் ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறும் என துணுக்காய் வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி எல் மாலினி வெனிற்றன அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடரீதியான அனுபவம் உள்ள வளவாளர்களினால் கருத்துரைகள் வழங்கப்பட்டு செயலமர்வு நடைபெறவுள்ளதால் பொறுப்பாசிரியருடன் மாணவர்களை ஏற்கனவே வலயக்கல்வி அலுவலகத்தினால் பாட ரீதியாக வழங்கப்பட்டுள்ள கையேடுகளுடன் அனுப்பி வைக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளார். (2-15)

# மாணவர்கள் கலைத்துறையில் காட்டும் ஆர்வத்தை கல்வியிலும் காட்ட வேண்டும்

## இந்திய துணைத்தூதுவர் அறிவுரை

இந்திய அரசாங்கம் வழங்கி வரும் கலைத்துறை சார்ந்த புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாணவர்களையும் இந்தியாவிற்கு அனுப்பி கலைத்துறை உயர்கல்வியை கற்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என இந்திய துணைத்தூதுவர் ஆறுமுகம் நடராஜன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட கல்வி பண்பாட்டு அபிவிருத்தி மன்றத்தின் கவின்கலை விழா கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

மாணவர்கள் கலைத்துறையில் காட்டும் ஆர்வத்தை கல்வியிலும் காட்டவேண்டும். இனிவரும் காலங்களில் இந்தியக் கலைஞர்கள் இலங்கைக்கு வருகைதரும் போது கிளிநொச்சியிலும் அவர்களின் நிகழ்வுகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என குறிப்பிட்டார்.

கிளிநொச்சி கல்வி பண்பாட்டு அபிவிருத்தி மன்றம் மிகக்காத்திரமான சேவைகளை ஆற்றி வருகின்ற தன்மையினை அறிய முடிவதாகவும். மாணவர்கள் மத்தியில் கலை பண்பாடுகளை மட்டுமன்றி கடமை உணர்வையும் பொறுப்புணர்வையும் கூட வளர்த்தெடுப்பதில் இந்தமன்றம் அதிக கவனம் செலுத்தி வருகின்ற தன்மையினையும் வெளிப்படுத்துவதாக குறிப்பிட்டார்.

கல்விபண்பாட்டு அபிவிருத்தி மன்றம்மிக அற்புதமான செயற்பாட்டைக் கொண்டுள்ளது என்பதில் எந்த ஐயமும் இல்லை என குறிப்பிட்ட அவர், எதிர்காலத்தில் எங்களுடைய ஒத்துழைப்பு கிளிநொச்சி கல்வி பண்பாட்டு அபிவிருத்தி மன்றத்திற்கு கிடைக்கும் எனவும் தெரிவித்தார்.

கிளிநொச்சி கல்விபண்பாட்டு அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப்பணிப்பாளர் ம. பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்குமாகாண சபை உறுப்பினர் தவநாதன், கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன், கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் க.முருகவேல், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர். (2-281)




# வன்னிவிளாங்குளம்-மூன்றுமுறிப்பு வீதியை செப்பனிட்டுத் தருமாறு மக்கள் கோரிக்கை


(குருமன்காடு)

முல்லைத்தீவு வன்னிவிளாங்குளச் சந்தியிலிருந்து மூன்றுமுறிப்பு சந்திவரை செல்லும் வீதியூடான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாங்குளம் துணுக்காய் பிரதான வீதியின் வன்னிவிளாங்குளம் சந்தியில் இருந்து பாலைப்பாணி கொம்பு வைத்தகுளம் மூன்றுமுறிப்பு வரை செல்லும் சுமார் 11 மைல் நீளமான வீதி தற்காலிக புனரமைப்பு செய்யப்பட்டுள்ள போதும் இதனூடான போக்குவரத்து வசதிகள் எவையும் இன்மையால் மேற்குறித்த கிராமங்களில் இருந்து பல்வேறு தேவைகருதி செல்லும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களும் தினமும் பாடசாலை செல்லும் 25 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே குறித்த வீதியூடாக போக்குவரத்து வசதி ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளதுடன் போக்குவரத்து வசதிகள் இன்மையால் குறித்த கிராமங்களில் உள்ள மாணவர்கள் ஆரம்பக்கல்வியை பாலைப்பாணி அ.த.க பாடசாலையில் கற்றுவிட்டு மேலதிக கல்விக்காக வேறு பாடசாலை செல்லவேண்டிய நிலையில் போக்குவரத்து வசதிகள் இன்மையால் பாடசாலையை விட்டு இடைவிலகும் நிலையும் காணப்படுவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் போக்குவரத்து வசதியினை ஏற்படுத்தித் தர வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-250)







புதுக்குடியிருப்பு கவிஞர் ஜெயும் ஜெகன் எழுதிய **போர்க்காலமும் [illegible]** கவிதை நூல் வெளியீடு கடந்த 18 ஆம் திகதி காலை புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கலாபூஷணம் ந. இராமநாதன் தலைமையில் இடம்பெற்ற போது.

(படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரி-ரணில் இணக்க ஆட்சி காரணமாக நாட்டுக்கு எதிரான சூழ்ச்சிகள் நின்றுள்ளன

## அமைச்சர் ஹரிசன் தெரிவிப்பு

மைத்திரி - ரணில் இணக்க ஆட்சிக் காரணமாக நாட்டுக்கு எதிரான சகல சூழ்ச்சிகளும் நின்று போயுள்ளதாக அமைச்சர் பீ. ஹரிசன் தெரிவித்துள்ளார்.


அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமையிலான தேசிய அரசாங்கம் காரணமாக நாட்டுக்கு எதிரான சகல சூழ்ச்சகளும் நின்று போயுள்ளன.

இவர்கள் மீதான நம்பிக்கை காரணமாக சர்வதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த விசாரணைகள் நிறுத்தப்பட்டு உள்நாட்டிற்குள் விசாரணைகளை முன்னெடுக்க சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இது நாம் பெற்ற வெற்றியாகும்.

உலகில் இலங்கைக்கு அவப்பெயர் ஏற்பட்டிருந்தது. அந்த கரும்புள்ளி அழிந்துள்ளது.

கடந்த அரசாங்கத்தில் அங்கம்வகித்த மூன்று நான்கு பேர் இவை பற்றி எதனை கூறினாலும் தற்போதைய அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது எனவும் அமைச்சர் ஹரிசன் மேலும் தெரிவித்தார். (இ-7-10)




# தமிழினி சிங்களப்பெண்களின் மனச்சாட்சிக்கான தமிழ்க்குரல்

## சிங்கள ஊடகவியலாளர் புகழாரம்



விடுதலைப்புலிகளின் முன்னாள் மகளிர் அரசியல் பொறுப்பாளர் தமிழினி சிங்களப்பெண்களின் மனச்சாட்சிக்கான தமிழ்க்குரல் என சிங்கள ஊடகவியலாளர் மஞ்சுள வெடிவர்த்தன புகழாரம் சூட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப்பொறுப்பாளர் தமிழினியின் மறைவு குறித்து நாடு கடத்தப்பட்டுள்ள சிங்கள ஊடகவியலாளர் மஞ்சுள வெடிவர்த்தன எழுதியுள்ள அஞ்சலிக் கட்டுரை கொழும்பு நியூஸ்டுடே இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

குறித்த அஞ்சலிக்கட்டுரையில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தமிழினி ஒருபோதும் சிங்கள மக்கள் தொடர்பில் குரோத மனப்பான்மையுடன் இருக்கவில்லை. நாங்கள் அனைவரும் சகோதரர்கள் என்பதே அவரின் நிலைப்பாடாக இருந்தது.

தமது இனத்தின் விடுதலைக்காக அவர் தன்னை அர்ப்பணித்திருந்தார். அதே நேரம் பெண்களுக்கான உரிமைகள் தொடர்பில் அவர் எதுவித விட்டுக் கொடுப்புகளுக்கும் தயார் இல்லை என்பதையும் உணர்த்தியிருந்தார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் என்ற வகையில் அவர் கைது செய்யப்பட்டதே தவறானது. எனினும் அதன் பின்னர் நடைபெற்ற சட்ட இழுத்தடிப்புகள மற்றும் தடுத்து வைப்பின் கொடூரங்கள் காரணமாக அவர் மனதளவில் பாதிக்கப்பட்டார். அதன் காரணமாகவே மரணம் அவரை சீக்கிரமாக அழைத்துக் கொண்டு விட்டது.

தென்னிலங்கையில் அடக்கி வைக்கப்பட்டுள்ள சிங்களப் பெண்கள் குறித்தும் தமிழினியிடம் விசாலமான பார்வை இருந்தது. சுருக்கமாகச் சொல்வதானால் சிங்களப் பெண்களின் மனச்சாட்சிக்கான தமிழ்க்குரலாக அவரை அடையாளப்படுத்தலாம். தமிழினியின் மறைவு எங்கள் சகோதரியின் மறைவாகவே எங்களால் உணரப்படுகின்றது என்றும் மஞ்சுள வெடிவர்த்தன தனது இரங்கல் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# போராட்டத்தில் குதிப்பதற்கு தபால் ஊழியர்கள் முடிவு!

(கொழும்பு)

**கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்து எதிர்வரும் நாட்களில் கடுமையான தொழிற்சங்கப் போராட்டத்தினை ஆரம்பிக்க ஒன்றிணைந்த தபால் ஊழியர்களின் தொழிற்சங்க முன்னணி தீர்மானம் மேற்கொண்டுள்ளது.**

தமது கோரிக்கைகளை வென்றெடுக்கும் நோக்கிலேயே இந்த போராட்டத்தை நடத்த தீர்மானித்திருப்பதாக சுட்டிக் காட்டிய தொழிற்சங்க முக்கியஸ்தர் இதனால் தபால் மற்றும்முஸ்லிம் விவகார அமைச்சு மற்றும் அதன் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு குந்தகம் ஏற்படாது என்றும் தெரிவித்தார்.

இதற்கமைய கொழும்பு, கண்டி, இரத்தினபுரி, குருணாகலை, பதுளை, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், அநுராதபுரம், பொலநறுவை, திருகோணமலை, மாத்தளை, அம்பாறை, நுவரெலியா ஆகிய பிரதேசங்களிலும தொழிற்சங்கப் போராட்டங்கள் குறித்து தபால் ஊழியர்களின் தொழிற்சங்க முன்னணி மேற்படி பிரதேசங்களிலுள்ள தமது உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தி வருகின்றது.

தபால் திணைக்களத்தில் முன்னெடுக்கப்படும் புதிதான ஆட்சேர்ப்பிலுள்ள பிரச்சினை, தபால் திணைக்களத்தின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நிதியொதுக்கீட்டிலுள்ள பிரச்சினை, தற்போது நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதிலுள்ள பிரச்சினை, தபால் திணைக்களத்துக்கு சொந்தமான காணியை பெற்றுக் கொள்வதிலுள்ள பிரச்சினை ஆகியவற்றுக்கு தீர்வு காணும் முகமாகவே இந்த தொழிற்சங்கப் போராட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. (இ-7-10)

# மண்சரிவு அபாயமா? உடன் அழைக்கவும்

"மலையகத்தில் மண்சரிவு அபாயமுள்ள பிரதேசங்களில் வாழும் மக்கள், அதுதொடர்பில் உடனடியாக அறியத்தந்தால் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும" என மலையக புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

"தற்போது நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக மலையகத்தில் பெருமளவிலான பகுதிகளில் மண்சரிவு ஏற்பட்டு வருகின்றது. எனவே, அவ்வாறு பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளிலுள்ள மக்கள், மலையக புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின 011-2380859 என்ற இலக்கதுடன் தொடர்பை ஏற்படுத்தி அறியத்தர முடியும" என அவர் தெரிவித்தார். இவ்வாறு அறியத்தரும் போதே அதற்கு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றும் அவர மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# மரண தண்டனை மட்டுமே குற்றங்களை குறைக்காது

## கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன வலியுறுத்தல்

மரண தண்டனை மட்டுமே குற்றங்களை குறைத்து விடாது என்று ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக ராவய பத்திரிகைக்கு அவர் அளித்துள்ள நேர்காணல் வருமாறு,



குற்றவாளிகள் தொடர்பிலும், குற்றம் சாட்டப்பட்டு நிரூபிக்கப்பட்டவர்களுக்கான தண்டனை தொடர்பிலும் சட்ட நடைமுறைகள் வலுவடையச் செய்யப்பட வேண்டும். அவ்வாறின்றி மரண தண்டனை அல்ல அதனை விடக் கொடிய தண்டனை அறிமுகப்படுத்தப்பட்டாலும், குற்றங்களை குறைத்துவிட முடியாது.

குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான வன்முறைகள் தொடர்பில் பொலிஸாரும், நீதிபதிகளும் உணர்வுபூர்வமாக நடந்து கொள்ள வேண்டும். இதன்போது ஆணாதிக்க மனோபாவத்துடன் நடந்து கொள்ளக் கூடாது.

பொலிஸாருக்கு நவீன கருவிகள், புதிய வழிமுறைகள் குறித்த பயிற்சிகள் என்பன வழங்கப்பட வேண்டும்.

இவை எல்லாவற்றுக்கும்மேலாக பெற்றோர் தங்கள் பிள்ளைகள் தொடர்பில் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். இதன் மூலமாக மட்டுமே குற்றச் செயல்களை ஒழிக்க முடியும்.

அவ்வாறின்றி மரண தண்டனையை நடைமுறைப்படுத்துவதால் மட்டும் குற்றங்களை ஒழித்து விட முடியுமென்பது நடைமுறைக்கு சரிப்பட்டு வராதுஎன்றும் கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன வலியுறுத்தியுள்ளார். (இ-7-10)

# 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழை காரணமாக நாட்டிலுள்ள எட்டு மாவட்டங்களுக்கு தொடர்ந்தும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பதுளை, நுவரெலியா, கேகாலை, கண்டி, களுத்துறை, இரத்தினபுரி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களுக்கே மண்சரிவு எச்சரிக்கை தொடர்ந்தும் விடுக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டங்களில் தொடர்ந்தும் மழை பெய்துவருவதால் அப்பிரதேச மக்களை கவனமுடன் பாதுகாப்பான பிரதேசங்களில் இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

இதே நேரத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள சில பிரதேசங்களில் மழை பெய்யக் கூடிய சாத்தியம் நிலவுகிறது எனவும், பிற்பகல் 2 மணிக்கு பின்னர் பெரும்பாலான பிரதேசங்களில் இடியுடன் கூடிய மழைக்கு சாத்தியம் நிலவுகிறது எனவும் வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (இ-7-10)

### சுற்றாடலை பாதிக்காமல்

# சுற்றுலாத்துறையினை மேம்படுத்த வேண்டும்

## பிரதமர் அட்வைஸ்


சுற்றாடலையும் பாதுகாக்கும் விதமாக சுற்றுலாத்துறையை மேம்படுத்த வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறை தொடர்பாக தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் ஹிக்கடுவையில் இடம் பெற்றது.

பிரதமர் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் கருத்து தெரிவித்த அவர், தென்னிலங்கையில் சுற்றாடல் பாதிக்கப்பட்டுள்ளதுடன், கரையோரப் பகுதிகள் பாரிய பாதிப்பை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்தார்.

விருந்தகங்கள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட போதும், கடற்கரைப் பகுதிகளுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் வேலைத் திட்டங்கள் இடம்பெறவேண்டும்.

கடந்த காலங்களில் கரையோர பாதுகாப்பு அதிகாரசபை அரசியல் தலையீடுகளின் அடிப்படையில் செயற்பட்டு வந்தது.



வருமானத்தை அதிகமாக பெற வேண்டுமாயின் சேவைகளை மேம்படுத்த வேண்டும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (இ-7-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளைச்சலை அதிகரிக்கும் நெல் நாற்றுநடும் இயந்திரம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் 70 வீதமான மக்கள் விவசாயத்தை வாழ்வாதாரமாக கொண்டுள்ளனர். மாவட்டத்தில் 41 ஆயிரத்து 340 ஏக்கர் வயல் நிலத்தில் நெற் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

கால போகத்தில் 30 ஆயிரத்து 480 ஏக்கர் நிலத்திலும் சிறு போகத்தில் 9 ஆயிரத்து 175 ஏக்கர் நிலத்திலும் பயிரிடப்பட்டு வருகின்றது. இவற்றுள் கால போகத்தில் 15ஆயிரத்து940 ஏக்கர்பெரிய நீர்ப்பாசனத்தின் கீழும் 7 ஆயிரத்து 775 ஏக்கர் சிறிய நீர்ப்பாசனத்தின் கீழும் செய்கை பண்ணப்பட்டு வருகின்றது.

இங்கு அதிகளவான நெற் செய்கைக்குகாரணமாக அமைவது சிறப்பான மண்வகையாகும். இங்கு 7 வகையான மண் காணப்படுகின்றபோதும Red yellow latosol (RYL), Reddish Brown earth (RBE), Alluvial, Grumo soil மண் வகைகளில் நெறசெய்கை பண்ணப்படுகின்றது.

இதனை விட 19 பெரிய நீர்ப்பாசனக்குளங்களின் மூலமும், 134 சிறிய நீர்ப்பாசனக் குளங் களின் மூலமும் நெற்செய்கையானது மேற்கொள்ளப்படுகின்றது.

ஆனாலும் முத்தையன் கட்டுக் குளமும், விசுவமடுக்குளமும் மறு வயற்பயிருக்காக ஒதுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. பொதுவாக இரண்டு போகம் நெற்செய்கை பண்ணப்பட்டு வருகின்ற போதும் முள்ளியவளை விவசாயப் போதனாசிரியர் பிரிவை அண்மித்த நீராவியூற்று குள வெளியில் சில இடங்களில் மூன்று போகம் கூட நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பொதுவாக எமது விவசாயிகள் அதிகளவில் At 362 மற்றும் Bg 360, Bg358, Bg406 போன்ற இனங்களையும் செய்கை பணணி வருகின்றார்கள்.

அத்துடன் சாதாரணமாக சிறு போகத்தில்100-120 புசல்/ஏக்கர் அறுவடையும், கால போகத்தில் 80 -100 புசல்/ஏக்கர் அறுவடையையும் எமது விவசாயிகள் பெற்றுக் கொள்கின்றனர்.

நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் தற்போது பிரதான மாக எதிர்நோக்கும் பிரச்சினையாக கட்டுப்படுத்தமுடியாத களைகள் காணப்படுகின்றது. பல்வேறுபட்ட களைநாசினிகளை விசிறிய போதும் சில இன களைகளை கட்டுப்படுத்த முடியாமல் உள்ளதுடன் விளைச்சலிலும் பாதிப்பினை எதிர் கொண்டுள்ளனர்.

விளை நிலங்கள் கடந்த போகங்களில் கைவிடப்பட்டமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

வெற்றிகரமான நெற் செய்கைக்கு சிறப்பான களைக்கட்டுப்பாடும் முக்கியமானதாகும். களைக் கட்டுப்பாட்டினை மேற்கொள்வதற்காக விவசாயிகள் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொளுதல் வேண்டும்

1.முறையான நிலப்பண்படுத்தல்

2.நீர்ப்பாசன வாய்க்கால்களின் துப்புரவுத் தன்மை

3.தரமான விதை நெற்பாவனை

4.உரிய நேரத்தில் சரியான அளவுகளை நாசினிப் பாவனையும் அதன் பின்னான நீர்ப்பாசன மும்

5.உரிய நேரத்தில் பசளைப் பாவனை

6.உரிய நேரத்தில் நீர்ப்பாசனம் மேற்கொள்ளல்

**முறையான நிலப்பண படுத்தல**

நெற் செய்கையினைப் பொறுத்தவரையில் நிலப்பண்படுத்தலானது மிகவும் முக்கியமானதொன்றாகும். ஆரம்ப மழையுடன் சட்டிக் கலப்பையின் மூலமாக மண்ணைப் புரட்டி உலர விடவேண்டும்.

இதன் போது களைகள், களைகளின் கிழங்குகள் என்பன மண்ணின் மேற் கொண்டுவரப்பட்டு உலர விடப்படுகின்றது. இதனால் மண்ணின ஆழமான பகுதியிலுள்ள போசணைக் கூறுகளை பயிரால் அகத்துறிஞ்சக் கூடிய நிலைக்கு மாற்றப்படுகின்றது. அத்துடன் மண் மென்மையாக்கப்படுவதுடன் வேர் வளர்ச்சிக்கு ஏற்றவாறு காற்றூட்டமும் ஏற்படுத்தப்படுகின்றது.

இது நெற் பயிரின் வளர்ச்சிக்கு ஏதுவாக அமைகின்றது. பின்னர் 15 நாட்களின் பின் முள்ளுக் கலப்பையினால் மீண்டும் மண் புரட்டப்படல் வேண்டும். இதன் மூலமாக எஞ்சியிருந்த களைகளும், களை விதைகளும் அழிக்கப் படுகின்றது. பின்னர் மீண்டும் 10 -15 நாட்களின் பின்னர் சுழல் கலபபையின் மூலமாக தூர்வை யாக்கி அதனபின்னர் வழமையான செய்கை முறையினை மேற் கொள் ளல் வேண்டும். அதேவேளை புழுதி விதைப்பு மேற்கொள்ளும் விவசாயிகள் மூன்றாவது முறையும் முள்ளுக்கலப்பையினாலேயே உழுது புரட்டி விடல் வேண்டும்.



**நீர்ப்பாசன வாய்க்கால் களின் துப்புரவுத் தன்மை**

களை பரவுவதில் நீர்ப்பாசன வாய்க்காலும் அதன் துப்புரவுத் தன்மையும் முக்கிய பங்களிக்கின்றன. ஒரு களையானது 3000-5000 களை விதைகளை ஒருதடவையில் உற்பத்தியாக்கவல்லது. எனவே நீர்ப்பாசன வாய்க்கா லினை துப்புரவாக வைத்திருப்ப தன்மூலம் களை விதைகள்நீர்ப்பாசனத்துடன்சேர்ந்து வயல்களிற்கு செல்லும் சந்தர்ப்பத்தினைக் கட்டுப்படுத்த முடியும்.

**தரமான விதை நெல் தெரிவு**

அநேகமான களை விதைகள் விதை நெல்லுடன் சேர்ந்து வயல் நிலங்களை அடைகின்றது. எனவே களைகளற்ற சுத்திகரிக்கப்பட்டதும் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான விதை நெல்லினைப் பயன்படுத்தலானது அவசியமாகிறது.

இவ்வாறான விதைகளை ஒட்டுசுட்டானில் இயங்கிவரும் ஒருங்கிணைந்த பண்ணையாளர் சங்கத்தில் ஒரு கிலோவிற்கு 3.50 ரூபா செலுத்தி சுத்திகரிக்க முடியும். 021 206 1715 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி மேற்குறிப்பிட்ட வசதி களை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

**உரிய நேரத்தில்களை நாசினிப் பாவனை**

களைகளை இனங்கண்டு அதற்குரிய களை நாசினியை சரியான காலத்திலும் சிபாரிசு செய்யப்பட்ட அளவிலும் பாவித்தல் வேண்டும். களை நாசினிகள் தாவர ஓமோன்களைப் பயன்படுத்தி தயாரிப்பதன் காரணமாக சிபாரிசு செய்யப்பட்ட அளவினை விட அதிகரித்தாலோ அலலது குறைவடைந்தாலோ களையின் வளர்ச்சியை அல்லது பெருக்கத்தை கூட்டுவதுடன் பயிரின் வளர்ச்சியினை மந்தப்படுத்தவும் வாய்ப்பாக அமைகின்றது. அத்துடன் களைநாசினி பாவித்து 3 ஆம் நாள் வயலில் தண்ணீர் கட்டுதல் அவசியமாகும். அச்சந்தர்ப்பத்தில் களைகளின் இலைகள் மஞ்சள் நிறமாகக்காணப்படுவதுடன் நீர்க் களைகளின் (Water grass) இலையானது இளம்சிவப்பு நிறமாக மாற்றம டைவதையும் அவதானிக்கலாம். இவ்வாறாக உரிய காலத்தில் நீர்ப்பாசனம் செய்வதன் மூலமாக இறந்து காணப்படும் களைகளின் வேர்கள் முற்றாக அழுகுவதன் காரணமாககளை களை முழுமையாக கட்டுப்படுத்த முடியும்.

**பசளையிடல்**

விவசாயிகள் களைநாசினி பயன்படுத்தி 3 ஆவது நாள் நீர்ப்பாசனம் செய்தவுடன் பசளைப் பிரயோகமும் மேற்கொள்கின்றனர்.

இதன் காரணமாக இலைகள் மஞ்சள் நிறமாகவும், வாட்டமாகவும் காணப்பட்ட களைகளிலிருந்து புதிய வேர்கள் உருவாவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. இதனால் இறக்கக்கூடிய களைகள் மீண்டும் துளிர்க்கக்கூடும்.

எனவே நீர்ப்பாசனம் செய்து 7 நாட்களின் பின்னரே பசளைப் பாவனையுடன் சிபாரிசு செய்யப்பட்ட அளவுகளிலும் பசளைப் பாவனையை மேற்கொள்ளல் வேண்டும். அத்துடன் சிபாரிசு செய்யப்பட்ட அளவுகளிலும் பசளைப் பாவனையினை மேற்கொள்ளல் வேண்டும்.



**நீர்ப்பாசனம் செய்தல்**

பயிர் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து 21 நாட்கள் வரையில் 5 செ.மீ வரையிலான நீர் மட்டம் பேணப்படுதல் வேண்டும். இதன் காரணமாக களைகளின் பெருக்கத்தினைக் கட்டுப்படுத்த முடியும்.

**நாற்று நடுகை இயந்திரம் அறிமுகம்**

வடமாகாண விவசாயத் திணைக்களத்தினால் விவசாயிகளுக்காக நாற்று நடும் இயந்திரம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இவ்வியந்திரத்தின் மூலமாக நாற்றுக்கள் நடுதலானது 100% ஆன களைக் கட்டுப்பாட்டிற்கு ஏதுவானதாக அமைவதுடன் களை நாசினிக்கான செலவினைக் குறைத்து, விளைச்சலை அதிகரித்து வருமானத்தை அதிகரிக்க ஓர் புதிய தொழில்நுட்பமாகும்.

**நாற்றுநடும் இயந்திரத்தைப் பயன்படுத்தல்**

நாற்று நடும் இயந்திரத்தின் மூலமாக நெற் பயிரை ஸ்தாபிக்கும் போது பின்வரும் 3 முக்கியமான விடயங்களில் கவனம் செலுத்துவது மிகவும் அவசியமானது.

1.நிலம் பண்படுத்தல்

2.நாற்று மேடை அமை த்தல்

3.நாற்று நடல்

**நிலம் பண்படுத்தல்**

நாற்று நடுவதற்கு 25 நாட்களுக்கு முன்னர் நிலம் நன்கு ஆழமாக சட்டிக்கலப்பையினால் உழப்பட்டு மண்ணினைப் புரட்டி 10 நாட்கள் வரை உலரவிடல் வேண்டும். இதன் போது மண்ணின் வளமான கூறுகள் மேலே கொண்டுவரப் படுவதுடன் களைவிதைகளும் மேலே கொண்டுவரப்பட்டு களை முளைத்தலானது கட்டுப்படுத்தப்படுகின்றது.

பின்னர் மீண்டும் நிலத்தினை புரட்டி சுழல் கலப்பையின் மூலமாக தூர்வையாக்கப்படுதல் வேண்டும். நீரினை விட்டுக் க்ட்டி வயலினை நன்கு புளிக்க விட்டு நாற்று நடுவதற்கு 4 நாட்களுக்கு முன் மீண்டும் வயலினை நன்கு கலக்கி மட்டப்படுத்தி ஒரு நாளின் பின்னர் நீரை வடிய விடல் அதாவது நடுவதற்கு 3 நாட்களின் முன் நீரை வடியவிடல் வேண்டும்.

**நாற்றுமேடையமைத்தல்**

நாற்று நடுகை வெற்றிகரமாக அமைவதற்கு நாற்று மேடை அமைத்தலில் மிகவும் கவனம் செலுத்துதல் வேண்டும். ஒரு ஏக்கர் வயல் நிலத்திற்கு நாற்று நடல் மேற்கொள்வதற்கு 2' (அடி) அகலமானதும் 100' (அடி) நீளமானதுமான மேடை போது மானதாகும்.

நாற்று நடலிற்கான நாற்று மேடையானது வயலிலேயே அமைத்தல் வேண்டும். இவ்வாறாக வயலில் நாற்றுமேடை அமைப்பதன் மூலமாக பராமரித்தலும்,நாற்று நடலும் இலகுவானதாக அமைகின்றது.

நாற்று நடுகை இயந்திரத்தின் மூலம் நடுகை செய்வதற்கு 31/2 வயது இனங்களைத் தெரிவு செய்வது சிறப்பானதாகும். ஒரு ஏக்கருக்கான நாற்று நடுகைக்கு விதை நெல்லானது 20 கிலோ போதுமான தர்கும்.

விதை நெல்லை 24 மணித்தியாலம் (1 நாள்) நீரில் ஊற விடுதல் வேண்டும். பின்னர் ஊற விட்ட நீரினை மாற்றி புதிய நீரினை விட்டு மீண்டும் 24 மணித்தியாலங்கள் நீரில் ஊற விடுதல் வேண்டும்.

அதன் பின்னர் நீரினை வடிய விட்டு நல்ல நிழலான பிரதேசத்தில் சாக்கினை விரித்து அதன் மேல் 3'(அங்குலம்)தடிப்பில் பரவி இரண்டு நாட்கள் வரை வைத்திருத்தல் வேண்டும். இவ்வாறு மேற்கொள்வதன் மூலமாக முளை உருவாகியும் வேர் உருவாகாத நெல்லினை பெற்றுக் கொள்ளலாம். அதாவது ஒன்றுடன் ஒன்று சேராத உலிர்வான நெல்லினை பெற்றுக் கொள்வதே இதன் நோக்கமாகும். அதன் பின்னர் அதற்காக தயார் செய்யப்பட்ட மேடையில் ஒன்றன் மேலொன்று நெல் விழாத வண்ணம் நாற்று மேடையில் வதைநெல்இடப்படல்வேண்டும்

இதற்கான நாற்று மேடையானது பின்வருமாறு தயாரிக்கப்படல் வேண்டும்.

வயலில் 2'(அடி) அக்லமானதும் தேவையான நீளமான நிலப்பரப் பினைத் தெரிவு செய்து அதன் நான்கு மூலைகளிலும் 1"(அங்குலம்) விட்டமுள்ள 1'அடி நீளமான தடிகளை நன்கு நீள்சதுரமாக இறுக்கி அடையாளப் படுத்தல் வேண்டும். (தொடரும்)

பொ.அற்புதச்சந்திரன்
பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர்
அ.கபிலன்
பாடவிதான உத்தியோகத்தர் (நெல் மற்றும் பண்ணை இயந்திரம்) முல்லைத்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாகிஸ்தானில் பல்கலைக்கழக மாணவிகளுக்கு பாகிஸ்தான் படையினர் ஆயுதப்பயிற்சி வழங்குகின்றனர். நேற்று முன்தினம் வழங்கப்பட்ட இப் பயிற்சியில் எவ்வாறு துப்பாக்கிகளை தற்பாதுகாப்பிற்கு பயன்படுத்துவது என்பது குறித்து விளக்கமளிக்கப்படுகிறது.

### பரபரப்பாக நடந்த தென்னிந்திய நடிகர் சங்கத் தேர்தல்

# பாண்டவர் அணி வென்றது

**தென்னிந்திய நடிகர் சங்கத்துக்கு 3 வருடங்களுக்கு ஒருமுறை தேர்தல் நடைபெறுவது வழக்கம். 2015-2018ஆம் ஆண்டுக்கான தேர்தல் நேற்று முன்தினம் நடந்தது. இதில் சரத்குமார் தலைமையில் ஒரு அணியும், நாசர் தலைமையில் இன்னொரு அணியும் போட்டியிட்டன. இதில் நாசர் தலைமையிலான பாண்டவர் அணி 113 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.**

தலைவர் பதவிக்கு சரத்குமார், நாசர் (பாண்டவர் அணி) ஆகிய இருவரும் போட்டியிட்டார்கள். சரத்குமார் அணியில் பொதுச்செயலாளர் பதவிக்கு ராதாரவியும், நாசர் அணியில் விஷாலும் போட்டியிட்டனர். 2 துணைத்தலைவர்கள் பதவிக்கு சரத்குமார் அணி சார்பில் விஜயகுமார். சிம்பு ஆகியோரும், நாசர் அணி சார்பில் பொன்வண்ணன், கருணாஸ் ஆகியோரும் போட்டியிட்டார்கள்.

பொருளாளர் பதவிக்கு சரத்குமார் அணி சார்பில் எஸ்.எஸ். ஆர். கண்ணன், நாசர் அணி சார்பில் கார்த்தி ஆகிய இருவரும் போட்டியிட்டனர்.



நடிகர் சங்கத்தில் வாக்குரிமையுள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 3,139 பேர். இதில் வெளியூர்களில் உள்ள நாடக நடிகர்-நடிகைகளும் அடங்குவார்கள். அவர்களில் 783 பேர் தபால் மூலம் வாக்களித்தனர்.

வாக்குப்பதிவு நடைபெற்றதை வெளியே பெரிய திரையின் மூலம் பார்ப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. தொலைக்காட்சிகள் போட்டி போட்டுக்கொண்டு வாக்குப்பதிவு நடைபெறுவதை நேரடி ஒளிபரப்பு செய்தன.

இதுவரை நடைபெற்ற எந்த தேர்தலிலும் இல்லாத அளவுக்கு இந்த தேர்தல் பெரும் பரபரப்பாக நடந்தது. வயதான சில நடிகர்-நடிகைகள் 3 சக்கர வண்டியில் வந்து வாக்குப்போட்டார்கள்.

பிற்பகல் 12.30 மணி அளவில் சரத் குமார் அணியினருக்கும், நாசர் அணியினருக்கும் இடையே கைகலப்பு நடந்ததாக கூறப்பட்டது. இதைத்தொடர்ந்து, அங்கு பர பரப்பான சூழ்நிலை உருவானது. பொலிஸார் தலையிட்டு, இரு தரப்பினரையும் சமாதானப்படுத்தினார்கள்.

பாண்டவர்அணியின்சார்பில்தலைவர் பதவிக்கு போட்டியிட்ட நாசர் 1,344 வாக்குகள் பெற்று வெற்றிபெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட சரத்குமார் 1,231 வாக்குகள் பெற்றார். 113 வாக்குகள் வித்தியாசத்தில் நாசர் வெற்றி பெற்று உள்ளார். சுயேச்சையாக போட்டியிட்ட சிவசாமிக்கு 4 வாக்குகள் கிடைத்தன.

பாண்டவர் அணியைச் சேர்ந்த விஷால் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு 1,445 வாக்குகள் கிடைத்தன. அவரை எதிர்த்து போட்டியிட்ட ராதாரவி 1,138 வாக்குகள் பெற்றார். ராதாரவியை விட விஷால் 307 வாக்குகள் அதிகம் பெற்றுள்ளார். துணைத் தலைவர்களாக பாண்ட வர் அணியைச் சேர்ந்த கருணாஸ், பொன் வண்ணன் ஆகியோர் தேர்ந்து எடுக்கப்பட்டனர். (3-7)

# 2015 அமைதிக்கான நோபல்பரிசு

### துனீஷியா நாட்டை சேர்ந்த நால்வருக்கு

துனீஷியா நாட்டைச் சேர்ந்த தேசிய பேச்சுவார்த்தைக் கூட்டமைப்பு (நேஷனல் டயலாக் குவார்டட்) இந்த ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசை வென்றுள்ளது.

துனீஷியாவில் சர்வாதிகார ஆட்சிக்கு எதிரான போராட்டங்கள் 2010-2011ஆம் ஆண்டுகளில் வெடித்தபோது, பல்வேறு தரப்பினரையும் பேச்சுவார்த்தை மூலம் ஒன்றிணைத்து, நாட்டை ஜனநாயகப் பாதைக்கு இட்டுச் சென்றமைக்காக அந்தக் கூட்டமைப்புக்கு இந்தப் பரிசை வழங்குவதாக நோபல் பரிசு தேர்வுக்குழு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தக் குழு கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,




துனீஷியாவில் ஆட்சிக்கு எதிராக 2010-11ஆம்ஆண்டுகளில் தோன்றிய போராட்டம்தான் வட ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு ஆசியநாடுகள்முழுவதும் பரவி "அரபு வசந்தம்" என்ற புரட்சி அலை உருவாகக் காரணமாக அமைந்தது.

ஆனால், பிற நாடுகளைப் போலன்றி, துனீஷியாவில் ஜனநாயகம் மலரச் செய்ததில் தேசிய பேச்சுவார்த்தை கூட்டமைப்பு முக்கிய பங்கு வகித்தது. அந்தக் கூட்டமைப்பைச் சேர்ந்த துனீஷிய பொதுத் தொழிலாளர் சங்கம், துனீஷிய தொழில் கூட்டமைப்பு, வர்த்தக, கைவினைப் பொருட்கள் தொழிற்சங்கம், துனீஷிய மனித உரிமைகள் முன்னணி ஆகிய நான்கு அமைப்புகளும் மேற்கொண்ட முயற்சிகளால் உள்நாட்டுச் சண்டையின் விளிம்பிலிருந்து துனீஷியா காப்பாற்றப்பட்டது.


பிரச்சினைகளுக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முடியும் என்பதையும், ஒரு நாட்டின் சங்கங்களும், அமைப்புகளும் அபாயக் கட்டத்திலிருந்து தங்களது நாட்டைக் காப்பாற்ற முடியும் என்பதை துனீஷிய தேசியக் கூட்டமைப்பு நிரூபித்துள்ளது. அந்தக் கூட்டமைப்புக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்குவதன் மூலம், பேச்சுவார்த்தையின் மூலம் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண பிற நாடுகளுக்கும் ஊக்கம் ஏற்படும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

துனீஷியாவில் 23 ஆண்டு களாக ஆட்சி செலுத்தி வந்த ஜனாதிபதி அபிடைன் பென் அலிக்கு எதிராக கடந்த 2010-ஆம் ஆண்டு மக்கள் போராட்டம் வெடித்தது.

அதனைத் தொடர்ந்து அவரது ஆடசிஅகற்றப்பட்டு தேர்தல்மூலம்அந்த நாட்டில் ஜனநாயக ஆட்சி ஏற்படுத்தபபட்டது குறிப்பிடத்தக்கது. (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித தெரேசாளின் பெற்றோர் புனிதர்களாக அறிவிப்பு



போப் பிரான்சிஸ் புனித தெரெசாளின் பெற்றோரான லூயிஸ், செலி மாட்டின் ஆகியோரை நேற்று முன்தினம் வணக்கத்துக்குரிய புனிதர்களாக அறிவித்தார். புனித தெரெசாளின் தாயும் தந்தையும் புனிதர்களாக உயர்த்தப்பட்டமை கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றில் இதுவே முதல் தடவை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. புனிதர்களாக உயர்த்தும் திருப்பலி நிகழ்வில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

# இந்திய - அமெரிக்க விமானப்படை கூட்டுப்பயிற்சி வெகுவிரைவில்

### சீனாவின் கருத்துக்கு அமெரிக்க தூதுவர் பதிலடி

**அமெரிக்க - இந்திய விமானப்படையினர் இணைந்து அடுத்தவருட தொடக்கத்தில் விமான கூட்டுப்பயிற்சியை மேற்கொள்ளவுள்ளதாக இந்தியாவிலுள்ள அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார்.**

(சென்னை)

இந்தியா, அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய 3 நாடுகள் சார்பில் 'மலபார்' கூட்டு கடற்பயிற்சி சென்னை துறைமுகத்தில் இருந்து 150 கடல் மைல் தூரத்தில் உள்ள வங்களா விரிகுடா கடல் பகுதியில் கடந்த 13ஆம் திகதியில் இருந்து நேற்று முன்தினம் வரை நடைபெற்றது. இதற்காக அமெரிக்க நாட்டைச் சேர்ந்த உலகிலேயே பெரிய விமானம் தாங்கி கப்பல்களில் ஒன்றான 'யு.எஸ்.எஸ். தியோடர் ரூஸ்வெல்ட்' என்ற விமானம் தாங்கி போர்க்கப்பல் நடுக்கடலில் நிறுத்தப்பட்டிருந்தது. இதிலிருந்து விமானங்கள் விண்ணில் ஏவப்பட்டு 3 நாட்டு கடற்படையினரும் பயிற்சி பெற்றனர்.

இந்த பயிற்சியை இந்தியாவுக்கான அமெரிக்க நாட்டு தூதர் ரிச்சர்ட் வர்மா நேற்று முன்தினம் பார்வையிட்டு, கடற்படை அதிகாரிகளுக்கு ஆலோசனைகளையும் வழங்கினார்.

பின்னர் ரிச்சர்ட் வர்மா சென்னையில் நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில்,

இந்தியா, அமெரிக்கா மற்றும் ஜப்பான் 3 நாடுகள் இணைந்து வங்கக்கடலில் நடந்த 'மலபார்' கூட்டு கடற்பயிற்சி அற்புதமான நடவடிக்கையாக இருந்தது. இது வெறும் பயிற்சியாக இல்லாமல் மனிதாபிமான முறையிலான நிகழ்ச்சியாக இருந்தது. கடல் பாதுகாப்பை திறம்பட கையாள்வதற்காக 3 நாடுகளின் கடற்படையினரும் சாதாரண விடயம் முதல் சிக்கலான அம்சங்களை பரிமாறிக் கொண்டனர். இந்த கூட்டு கடற்பயிற்சி எதிர்காலத்திலும் தொடர்ந்து நடைபெறும்.

உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடுகளாக விளங்கும் அமெரிக்கா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் இணைந்து செயற்பட்ட இந்த பயிற்சி கடல்சார் பாதுகாப்புக்கு உதவும். அத்துடன் நாடுகளுக்கு இடையே நல்லுறவையும் வளர்க்கும். இந்த முத்தரப்பு பயிற்சி உலக அமைதிக்கும், சர்வதேச வளர்ச்சிக்கும் உதவும்.


இந்திய பிரதமர் நரேந்திரமோடி சமீபத்தில் அமெரிக்கா சென்று வந்தார். இதன் மூலம் பிரதமர் நரேந்திரமோடிக்கும், ஜனாதிபதி ஒபாமாவுக்கும் இடையே நல்லுறவு இருந்து வருகிறது. இதன் மூலம் இந்தியா- அமெரிக்கா நாடுகள் பருவநிலை மாற்றம், பசுமை எரிசக்தி, விண்வெளி, விவசாயம் போன்ற துறைகளில் இணைந்து செயற்படுவதற்கும் வாய்ப்புகள் உள்ளன. அதேபோல் கூட்டு ஆராய்ச்சியிலும் ஈடுபடலாம் தொழில்நுட்பங்களை பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளலாம்.

அமெரிக்காவில் 32 இலட்சம் இந்தியர்கள் வசிக்கின்றனர். இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே நல்ல உறவு உள்ளது. அந்த உறவு மேலும் வலிமை பெறும்.

இந்திய இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையுடன் பரஸ்பர ஒத்துழைப்பு இருப்பதால், இந்தியாவின் கடற்படையுடன் நடத்தப்பட்ட கூட்டு பயிற்சி போல, இந்திய இராணுவம் மற்றும் விமானப்படையுடன் இணைந்து பெரிய அளவில் கூட்டுப் பயிற்சி நடத்த அமெரிக்கா திட்டமிட்டு உள்ளது. குறிப்பாக இந்திய விமானப்படையுடன் இணைந்து விரைவில் அதாவது அடுத்த ஆண்டு தொடக்கத்தில் கூட்டுப் பயிற்சி நடக்க உள்ளது. 500 பில்லியன் டொலர் செலவில் இந்த கூட்டு பயிற்சி நடைபெறும்.

அதேபோல் விரைவில் விசாகப்பட்டினத்தில் நடைபெறும் கடற்பயிற்சியில் அதிக எண்ணிக்கையிலான அமெரிக்க போர்க்கப்பல்கள் பங்கேற்கும். இதேபோன்று ஏற்கனவே சிங்கப்பூர், மலேசியா நாடுகளுடனும் அமெரிக்கா கூட்டு கடற்பயிற்சியை மேற்கொண்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சீனாவுக்கு எதிரான அணியில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்று சீனா எச்சரித்திருந்த நிலையில் கடற்பயிற்சியை அடுத்து விமானப்பயிற்சி நடைபெறும் என அமெரிக்க - சீன தூதுவர் அறிவித்துள்ளமை. அமெரிக்க - சீன முறுகல் நிலையை துலாம்பரமாக சாட்டுவதாக அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.(3-7)



## குறிதவறியது கூட்டுப்படையின் தாக்குதல்

### ஏமனில் 30 இராணுவம் பலி

ஏமனில் சவுதி கூட்டுப்படையினர் நடத்திய தவறான தாக்குதலில்- ஜனாதிபதி மன்சூர் ஹாதியின் ஆதரவு படையை சேர்ந்த 30 பேர் பலியாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஏமனில் ஈரான் ஆதரவு பெற்ற ஷியா பிரிவு ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும், ஜனாதிபதி மன்சூர் ஹாதியின் படையினருக்கும் இடையே நீண்ட காலமாக சண்டை நடந்து வருகிறது.

இதில் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகவும் ஜனாதிபதி மன்சூருக்கு ஆதரவாகவும் சவுதி அரேபியா தலைமையில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், குவைத், பஹ்ரைன், கட்டார், ஜோர்தான், மொராக்கோ, எகிப்து, சூடான் ஆகிய 9 நாடுகளின் கூட்டுப்படைகள் களம் இறங்கின.

இந்த கூட்டு படைகள் பல்வேறு இடங்களில் தொடர்ந்து வான் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

இந்த தாக்குதலில் ஜனாதிபதி ஆதரவு படையை சேர்ந்த 30 பேர் உயிரிழந்தனர். மேலும் 40 பேர் காயம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை சவுதி படையினர் நடத்திய தாக்குதலில் 7 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பிள்ளையானிடம் 90நாட்கள் விசாரணை

(கொழும்பு)

**நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படு கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனை, பயங்கர வாதத் தடைச்சட்டத்தின் கீழ், 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி கோரப்பட்டுள்ளது.**



ஜோசப் பரராஜசிங்கம் படு கொலை தொடர்பாக குற்றப்புல னாய்வுத் துறையினரால் ஏற்க னவே கைது செய்யப்பட்ட, பிள்ளை யானின் முன்னாள் கூட்டாளிக ளான பிரதீப் மாஸ்டர் மற்றும் கஜன் மாமா ஆகியோரை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரிக்க பாது காப்பு அமைச்சு அனுமதி அளித்து ள்ளது.

இந்த நிலையில், கடந்த 11ஆம் திகதி கைது செய்யப்பட்ட பிள்ளை யானையும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரிக்க பாதுகாப்பு அமை ச்சின் அனுமதியை, குற்றப் புலனா ய்வுப் பிரிவினர் கோரியுள்ளனர்.

தற்போது பிள்ளையானை அடுத்த மாதம் 4ஆம் திகதி வரை தடுத்து வைத்து விசாரிக்க, கொழு ம்பு பிரதம நீதவான் நீதிமன்றம் அனுமதி அளித்திருக்கிறது.

இந்தநிலையில், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரிப்பதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி விரைவில் கிடைக்கும் என்று நம்புவதாக பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பிள்ளையான் மீது இரண்டு நாடாளுமன்ற உறுப் பினர்களின் படுகொலைகள் தொடர் பாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட லாம் என்று கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர் பாக கைது செய்யப்பட்ட பிள்ளை யானிடம், நாடாளுமன்ற உறுப்பி னர் நடராஜா ரவிராஜ் படுகொலை குறித்தும் குற்றப்புலனாய்வுப் பிரி வினர் விசாரணைகளை நடத்தி யுள்ளனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த கேணல் சம்மி குமாரரத்னவினால் பிள்ளை யானுக்கு வழங்கப்பட்ட துப்பாக் கியைப் பயன்படுத்தியே, ரவிராஜ் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக, குற்றப் புலனாய்வுத் துறையின ருக்குத் தெரியவந்துள்ளது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெ லிகொட கடத்தப்பட்ட சம்பவம் தொட ர்பாக, கேணல் சம்மி குமாரரத்ன கைது செய்யப்பட்டு தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கேணல் சம்மி குமாரரத்னவி னால் பிள்ளையானுக்கு வழங்கப் பட்ட துப்பாக்கி, அவரால், சேரன் என்பவருக்கு வழங்கப்பட்டு, கடைசி யாக, ரவிராஜ் படுகொலை தொடர் பாக குற்றம்சாட்டப்படும் கடற்ப டையின் பெற்றி ஒவ்விசரான செனவியிடம் வழங்கப்பட்டிருக்கிறது.

எனவே, இந்த இரண்டு நாடாளு மன்ற உறுப்பினர்களின் படுகொ லைகள் தொடர்பாகவும், பிள்ளை யான் விசாரணைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்று கொழும்பு வார இதழ் தெரிவித்துள்ளது.

மேலும், முன்னைய அரசாங் கத்தின் காலத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் உதவியுடன், பிள்ளையான் அணியினர், பல் வேறு படுகொலைகள் மற்றும் ஆட்கடத்தல்களில் ஈடுபட்டது பற்றிய தகவல்களையும் குற்றப்புலனா ய்வுப் பிரிவினர் கண்டறிந்துள்ள தாகவும், தெரியவந்துள்ளதாகவும், கொழும்பு ஆங்கில வாரஇதழ் குறிப்பிட்டுள்ளது. (இ-7-10)

# மழைக்கால நோய்கள்...

## மழைக்காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள்


(தொடர்ச்சி...)

★ மழைக்காலத்தில் முடிந்த வரை வெளியில் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

★ தினமும் இரண்டுமுறை வெது வெதுப்பான நீரில் குளிக்க வேண்டும்.

★ நன்கு தேய்த்துக் குளிக்கும் போது, நம் உடல் சருமத்தில் இரு க்கும் இறந்த செல்கள் நீங்கும்.

★ சைனஸ், ஆஸ்துமா முத லான தொந்தரவுகள் உள்ளவர்கள, மருத்துவர் அறிவுரையின் பேரில் தாராளமாகத் தலைக்குக் குளிக்க லாம். தலைக்குக் குளித்ததும் உடனடியாக நன்றாகக் காய வைப் பது அவசியம்.



காய்ச்சல், சளி, இருமல், நுரை யீரல் தொந்தரவுகள் இருப்பவர்க ளைத் தவிர, அனைவரும் நன் றாக தினமும் குளிக்க வேண்டும்.

ஆடையை நன்றாகத் துவை த்துப் பயன்படுத்துவது அவசியம்.

குறிப்பாக, உள்ளாடைகளை தினமும் மாற்ற வேண்டும். மழைக்காலத்தில் துணி துவை த்தால் காயாது என சாக்குப்போக்கு சொல்லக் கூடாது.

பகல் வேளையில் வெயிலில் துணிகளைத் துவைத்து உலர்த்தி னால்தான் கிருமிகள் அழியும். உள் ளாடைகளைத்துவைக்காமல் அணி யும்போது, தோல் நோய்கள் வரும்.

வருடத்துக்கு ஒருமுறை 'இன் புளுவென்சா' (Influenza) தடுப்பூசி போட்டுக்கொள்வது, ப்ளு காய்ச்ச லில் இருந்து காப்பாற்றும். குழந் தைகளுக்கு நிமோனியா காய்ச்ச லைத் தடுப்பதற்கான நியூ மோகோக்கல்தடுப்பூசிபோட வேண் டும். நோய் எதிர்ப்புச் சக்தி குறை ந்த முதியவர்கள் மருத்துவரின்ஆலோ சனையின் பேரில இந்தத் தடுப்பூசி யைப் போட்டுக் கொள்ளலாம்.

மழை மற்றும் குளிர் காலத்தில் செரிமானம் சற்று மந்தமாக இருக் கும். இதனால், காரம் மற்றும் கொழுப்பு நிறை ந்த உணவுகளை எடுத்துக்கொள்வதைக் குறைத் துக்கொள்ள வேண்டும்.

காய்கறி, பழங்களை அதிக அளவில் எடுத்துக்கொள்ளலாம். பழங்களை பகல் வேளையில் சாப்பிட வேண்டும்.

கொய்யா, மாதுளை, பப்பாளி, அப்பிள், அன்னாசி, பேரிக்காய், நெல்லிக்காய், ஒரேஞ் முதலான வற்றில் விற்றமின் சி நிறைவாக உள்ளன. இவை, நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கச் செய்யும்.






சாலை ஓரங்களில் விற்கப்படும் பழச்சலாது, நறுக்கப்பட்ட பழங்கள் போன்றவற்றில் கிருமித்தொற்று இருக்கக்கூடும். எனவே அவற் றைச் சாப்பிடக் கூடாது.

காலை, மதியம், இரவு என மூன்று வேளைகளிலும் புதிதாகச் சமைத்து சாப்பிட வேண்டும். எல் லோராலும் மதியம் சுடச்சுட வீட்டு சாப் பாட்டைச் சாப்பிட முடியாது. ஆனால், காலையில் சமைத்த உணவை ஐந் தாறு மணி நேரங்களுக்கு உள்ளா கச் சாப்பிட்டு விட வேண்டும்.

நார்ச்சத்து, புரதச்சத்து, மாவுச் சத்து, விற்றமின்கள், தாதுஉப்பு, கொழுப்புச் சத்து என அனைத்தும் நிறைந்த சரிவிகித உணவைச் சாப்பிட வேண்டும்.

மூலிகை சூப், ரசம், கிரீன் டீ முத லியவற்றை அருந்தலாம்.

மழைக்காலத்தில் அதிகமாக தேநீர், டீ குடிக்கத் தோன்றும். ஆனால், அளவுக்கு அதிகமாக அருந்தக் கூடாது. ஒரு நாளைக்கு இரண்டு மூன்று கப் மட்டுமே தேநீர், டீ அருந்த வேண்டும்.

சூடாக சத்துமாவுக் கஞ்சியை வீட்டில் தயாரித்துச் சாப்பிடலாம்.

மழைக்காலத்தில் தண்ணீர் தாகம் அதிகம் இருக்காது. அத னால், தண்ணீர் அருந்தாமலேயே இருக்கக் கூடாது. சூப், ரசம், பால், டீ, தேநீர் எனத் திரவ உணவுகள் என்பவற்றுடன் இரண்டு லீற்றர் தண்ணீர் அருந்துவது அவசியம்.

சிறுநீரை அடக்கக் கூடாது. சிறுநீர் கழிக்கும் உணர்வு வந் தால் சிறுநீர் கழிப்பது அவசியம்.

பாடசாலை செல்லும் மாணவர்கள வீட்டில் கொதிக்கவைத்து, ஆற வைத்த தண்ணீரை எடுத்துச்சென்று குடிக்க வேண்டும்.

சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்திருப்பது அவசியம். வீட்டி லும் வீட்டைச் சுற்றியும் தண்ணீர் தேங்கவிடக் கூடாது. வீட்டைச் சுற்றி அவ்வப்போது பிளீச் சிங் பவுடர் தூவி சுத்தமாக வைத்திருக்கலாம்.

குப்பைகளை அவற்றுக்கு உரிய தொட்டிகளில் கொட்டவேண்டும். பிளாஸ்ரிக் பைகள், தேங்காய் ஓடுகள், டயர்கள் போன்றவற்றை வீட்டிலும் வீட்டுக்கு அருகிலும் இருந்து அகற்ற வேண்டும்.

வெளியில் இருந்து வீட்டுக்கு வரும்போது வாசலிலேயே கை, கால், முகம் போன்றவற்றை கழுவிவிட்டு வரல் வேண்டும்.

செருப்பு, சூ பேர்ன்றவற்றை சுத்தம் செய்ய வேண்டும். வீட்டுக் குள் வந்ததும் முதலில் உடை களை மாற்றுவது அவசியம்.

இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால், கைவைத்தி யமோ, மருந்தகங்களில் மாத்திரை வாங்கி விழுங்கவோ கூடாது. உடனடியாக அருகில் உள்ள பொது மருத்துவரை அணுக வேண்டும்.

வைத்தியசாலைக்குச் சென்று இரத்த பரிசோதனை செய்து, என்ன வகையான காய்ச்சல் என்பதை அறிந்து, அதற்கேற்ப சிகிச்சை எடு த்துக்கொள்வது அவசியம். எப்போ தும் கையில் ஒரு கைக்குட்டை வைத்திருப்பது அவசியம். தும்மல் வந்தாலோ, சளி வந்தாலோ கைக் குட்டையை பயன்படுத்த முடியும்.

அத்துடன் தினமும் கைக்குட் டையை நன்றாக வெந்நீரில் கழுவ வேண்டும். பொது இடங்க ளில் சளியை காறித் துப்பக் கூடாது.

அடிக்கடி ஆவி பிடிக்க வேண் டும். ஆவி பிடிப்பது நுரையீரலுக்கு நல்லது. மிதமான சூட்டில் உள்ள வெந்நீரில் கல் உப்பு போட்டு, தொண்டையில் படுமாறு வாய் கொப்பளிப்பது தொண்டைப் புண் களை வராமல் தடுக்கும்.

மழைக்காலம் முழுவதும் ஒரே படுக்கை விரிப்பு, போர்வையைப் பயன்படுத்தக் கூடாது. 15 நாட்களு க்கு ஒருமுறை படுக்கை விரிப்பு மற்றும் போர் வையைத் துவை த்து, உலர்த்திபயன்படுத்தவேண்டும்.

செயற்கை இரசாயனங்கள் கலந்த கொசுவத்தி, கொசுவத்தி திரவம் போன்றவற்றைத் தவிர்த்து, முடிந்தவரை மாலை நான்கு மணிக்கெல்லாம் ஜன்னல்களைப் பூட்டி, கொசுக்களை வீட்டுக்குள் வரவிடாமல் தடுப்பதே சிறந்த வழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உள்நாட்டு பொறிமுறை குறித்து

# தமிழர்கள் திருப்தி

## அஜித் பி பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

**போர்க்குற்றங்கள் தொடர்பான உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை குறித்து தமிழர்கள் திருப்தியடைந்திருப்பதாக மின்வலு மற்றும் மீள்வலு சக்தி பிரதியமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.**



இவ்வார ராவய பத்திரிகைக்கு அவர் அளித்து நேர்காணலில் இதனைத் தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

தங்களது மனக்குமுறல்களை இறக்கிவைக்க முதன்முதலாக ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது என்ற வகையில் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை குறித்து தமிழ் மக்கள் திருப்தியடைந்துள்ளார்கள்.

ஜெனிவா அறிக்கையின் பிரகாரம் பொறுப்புக்கூறல் என்ற கடப்பாட்டுக்கு அப்பால் உண்மையைக் கண்டறியும் செயன்முறையொன்றுக்கும் நாம் ஒப்புக்கொண்டுள்ளோம்.

காணாமற் போனவர்கள் தொடர்பான அலுவலகமொன்றை தாபித்து, சிங்கள, முஸ்லிம், தமிழர் என்ற பாகுபாடின்றி அனைவருக்கும் இழப்பீடு வழங்கப்படும்.

அத்துடன் இந்நாட்டில் மீண்டுமொரு முறை இனப்பிரச்சினையொன்று ஏற்படாத வகையில் தனியான செயற்றிட்டமொன்று முன்னெடுக்கப்படும்.

இவையனைத்தும் நம் நாட்டு மக்களின் உரிமைகளை ஏற்றுக் கொள்ளும்நோக்கில் நாம் ஒப்புக் கொண்டுள்ள விடயங்களாகும்.

ஒருசிலர் கூறுவது போன்று இதனை நாம் வெளி நாட்டவர்களின் தேவைக்காக மேற்கொள்ளவில்லை. நமது மக்களின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்தே இதனை மேற்கொள்ளவுள்ளோம் என்றும் பிரதியமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார். (இ-7-10)

# நல்லாட்சி அரசாங்க அமைச்சர்களும் ஆடம்பர செலவுகளில் ஈடுபடுகின்றனர்

நல்லாட்சி அரசாங்க அமைச்சர்கள் ஆடம்பர செலவுகளில் ஈடுபட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தின் பெற்றோலியவள மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர், பிரதி அமைச்சர் ஆகியோர் பாரிய செலவில் சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்யவுள்ளனர்.

அமைச்சர் சந்திம வீரக்கொடி மற்றும் பிரதி அமைச்சர் அனோமா கமகே ஆகியோர் ஆறு கோடி ரூபா செலவில் இரண்டு பி.எம்.டபிள்யூ ரக வாகனங்களை கொள்வனவு செய்யவுள்ளனர்.

வாகனங்களை இறக்குமதி செய்ய புதிய பணிப்பாளர் சபையின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள் பயன்படுத்திய நான்கு மொன்டெரோ ரக வாகனங்களும் ஒரு பி.எம்.டபிள்யூ ரக வாகனமும் அமைச்சில் காணப்படும் நிலையில் ஆறு கோடி ரூபா செலவில் புதிதாக வாகனங்களை கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வாகனங்கள் இருக்கும் நிலையில் ஆறு கோடி ரூபா செலவிட்டு புதிதாக அதி சொகுசு வாகனங்களை கொள்வனவு செய்வது பாரிய விரயமாகும் என தொழிற்சங்கங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

பெற்றோலியத் திணைக்களத்தின் ஊழியர் பிரச்சினைகள், பவுசர் பிரச்சினைகள் போன்றவற்றைத் தீர்த்து எரிபொருள் விலைகளை குறைக்க வேண்டுமே தவிர அதி சொகுசு வாகனங்களை கொள்வனவு செய்வது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-7-10)

### ஐக்கிய நாடுகள் சபையின்

# யோசனையை எதிர்ப்பவர்கள் ஜெயாவின் ஆதரவாளர்களாம்

## மஹிந்த கண்டுபிடிப்பு



இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் யோசனையை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் தெரிவித்தார்.

இந்த யோசனையினால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற விடயத்தை அவர் நிராகரித்துள்ளார்.

தமிழகத்தின் முதல்வர் ஜெயலலிதா மற்றும் முன்னாள் முதல்வர் கருணாநிதி ஆகியோர் இந்த யோசனையை எதிர்ப்பதன் மூலம் அந்த யோசனை இலங்கைக்கு வாய்ப்பானது என்பது தெரிய வருகிறது.

இந்தநிலையில் இலங்கையின் எவராவது யோசனையை எதிர்ப்பார்களானால் அவர்கள், ஜெயலலிதாவுக்கும் கருணாநிதிக்கும் ஆதரவளிப்பவர்களாகவே இருப்பர் என்று சமரசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.



இறுதிப்போரின்போது பூஜ்ஜிய உயிர் சேதங்களை முன்கொண்டே படையினர் செயற்பட்டனர்.

எனினும் இதனை படையினர் மீறியிருந்தால் அவர்கள் சட்டத்துக்கு கீழ் கொண்டுவரப்படுவர் என்று சமரசிங்க தெரிவித்துள்ளார். (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## 'சேர்ந்தாரைக் கொல்லி'

கோபம், இது ஒரு தற்காலிக பைத்தியக்காரத்தனம். ஒரு வகை மனே வியாதி. ஆசையின் வளர்ப்பு மகன்.

கோபத்தை விட்டவர்கள், வென்றவர்கள் பூமிக்கு சொர்க்கத்தை இழுத்து வரும் புண்ணியவான்கள்.

எப்போதும் கோபம் ஆசையை அடுத்தே வரும். இராமனைத் தொடர்ந்த இலக்குமணனை இராமானுஜன் என்றாற் போல காமத்தைத் தொடரும் கோபத்தைக் காமானுஜன் என்பார் வடமொழி யார். ஆசைகள் தடைப்படும் போது– அல்லது உடைபடும் போது கோபம் பிறக்கும்.

சூதாடி வாழ்வை இழந்த தருமருடன் வனவாசத்தில் வாதாடிப் பார்த்தாள் பாஞ்சாலி. உமக்கு கோபமே வராதா? கொல்லுங்கள் என்றுஆணையிட்டால் துரியனைப் பீமர் பிசைந்து விடுவார். கர்ணனை அர்ஜுனர் காணாமற் போனவர் பட்டியலில் சேர்ப்பார். ஐயா... கோபப்பட மாட்டீரா? என்றாள். தருமர் அமைதி காத்தார். சாத்திரம் என்ற கோபம்தான் க்ஷத்திரிய தர்மம் என்றும் தருமரின் சாந்தம் சந்தனத்தின் குளிர்ச்சி அல்ல பிணத்தின் குளிர்ச்சி என்றும் ரோசம் ஊட்டினாள். பயன் இல்லை. வாக்குத் தவறி வனவாசம் முடியும் முன் போர் தொடுக்க அவர் மறுத்தே விட்டார். நூற்றுக் கணக்கான தருமங்களைவிட, ஆயிரக்கணக்கான யாகங்களைவிட பொறுமை மேலானது என்று அமைதி காத்தார். உண்மைதான். பொறுமை இல்லை என்றால் வாழ்க்கையில் எதையும் சாதிக்க முடியாது.

குட்டிக் குரங்கு ஒன்று தோட்டம் போட்டது. எதுவுமே விளையவில்லை. தன்னைப் பார்க்க வந்த முதிய குரங்கிடம் இந்த வேதனையைச் சொல்லி அழுதது. விதை போட்டால் போதுமா? தண்ணீர் ஊற்றி இருக்க மாட்டாய். அதனால்தான் முளைக்கவில்லை! என்று கடிந்தது பெரிய குரங்கு. குட்டிக் குரங்குக்கு வந்ததே கோபம்....

ஒரு விதைக்குப் பத்து வாளி வீதம் தினம்தோறும் ஊற்றி இருக்கிறேன் என்று கத்தியது. அடடா பத்து வாளியா? போச்சு... போச்சு... இவ்வளவு தண்ணீர் ஊற்றினால் விதைகள் அழுகி இருக்குமே! விதைகள் அழுகியதால் முளைக்கவில்லை என்றது பெரிய குரங்கு.

ஒரு விதை கூட அழுகவில்லையாக்கும்! குட்டி குரங்கு பெருமையோடு கூறியது. அது எப்படி உனக்குத் தெரியும்?

நான்தான் தினம் தினம் மண்ணில் இருந்து விதையை எடுத்து எடுத்துப் பார்க்கிறேனே என்றது குட்டிக் குரங்கு. விதை விதைத்தால் விளைந்து வரும் காலம் வரை பொறுமை வேண்டும். வாழ்க்கையிலும் அப்படித்தான். உரியகாலம் வரை பொறுமை வேண்டும். அவசரம், ஆத்திரம் அதனால் வரும் கோபம் தவிர்க்கப்பட வேண்டியது.

சில கோபக்காரர்கள் கோபம் வந்துட்டா... நான் மனுசனா இருக்க மாட்டேன் என்று சிலிர்ப்பார்கள். எதுவாக மாறுவார் என்று அவருக்கே தெரியாதாம். இதிலிருந்தே தெரிகிறதே கோபப்படு கிறவன் மனிதனே இல்லை என்று!

இருப்பினும் ஒரு சந்தேகம்!

வீட்டில் கொஞ்சம் கண்டிப்பும் கோபமும் இல்லை என்றால் பிள்ளைகள் பெற்றோருக்கு பயப்படுவார்களா? மதிப்பார்களா? நியாயமான கேள்வி. பிள்ளைகளிடம் கோபப்படவில்லை என்றால் அவர்கள் நண்பர்களிடம் பேசுகிற போது எங்கப்பாவுக்கு ரோசம் மானம் எதுவும் கிடையாது... எருமை மாதிரி என்று பட்டம் கட்டி விடுவார்கள். அதேசமயம் ஓயாமல் கோபப்பட்டால் அது அப்படித்தான் பிளட் பிரஷர்ல கத்தும். நாங்க யாரும் கண்டுக்கிறதே இல்லை என்பார்கள். அடிக்கடி கோபப்பட்டால் கோபத்துக்கு மரியாதை இல்லை. கோபமே இல்லை என்றால் நமக்கே மரி யாதை இல்லை!

இந்தப்பிரச்சினைக்கு விடை கந்த புராணத்தில் உண்டு. பிரமனை முருகன் சிறையில் அடைத்ததும் விடுதலை வேண்டி நந்தி வந்தார். பிறகு சிவனே வந்தும் முருகன் மறுத்தார். சிவனை வணங்கிய பின்னும் அகந்தை விடாத பிரமனைச் சிறையில் இருந்து விட முடியாது என்றார். உடனே முருகனைச் சிவபெருமான் கோபித்துக் கொண்டாராம். 'மைந்த நின் செய்கை என்னே' என்று உரக்க சப்தமிட்டு 'கந்தனை வெகுள்வான்' என்றார் கச்சியப்பர்.

சிவபெருமானா கோபப்பட்டார்! அதுதான் இல்லை. பாட்டை ஆழமாகப் பார்த்தால் கந்தனை வெகுள்வான் போலக் கழறினான் என்றார் கச்சியப்பர். போல என்ற வார்த்தையைப் போட்டு அந்தக் கோபமே போலி என்று புரிய வைத்தார் கச்சியப்பர். நாம் பிள்ளைகளிடம் கோபப்படக் கூடாது. ஆனால் கோபப்படுவது போல் நடிக்க வேண்டும் என்கிறது கந்தபுராணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சினிமா வரலாறு

32

## திருப்பங்கள் நிறைந்த பி.யு.சின்னப்பா வாழ்க்கை

தமிழ்த் திரையுலகின் முதல் பொற்காலத்தில் பாகவதருக்கு அடுத்த இடத்தைப் பெற்றிருந்தவர் பி.யு. சின்னப்பா. தவநடிக பூபதி என்று பட்டம் பெற்றவர்.

முதல் படத்திலேயே சுப்பர் ஸ்டாராக உயர்ந்தவர் பாகவதர். ஆனால் பி.யு.சின்னப்பா எதிர்நீச்சல் போட்டு சுப்பர் ஸ்டார் ஆனவர்.

சின்னப்பாவின் சொந்த ஊர் புதுக்கோட்டை. சின்னப்பாவின் தந்தை உலகநாதப்பிள்ளை நாடக நடிகர்.

சின்னப்பாவின் இயற்பெயர் சின்னசாமி. நடிகரான பிறகு சின்னப்பா என்று மாற்றிக்கொண்டார்.

தந்தை உலகநாதபிள்ளை நாடக நடிகராக இருந்த காரணத்தினால் சின்னப்பாவும் தனது ஐந்தாவது வயதில் (1922 இல்) மேடையேறினார். நன்றாக நடிக்கவும் பாடவும் ஏற்றுக் கொண்டார். கத்திச்சண்டை, குத்துச் சண்டை முதலியவற்றில் பயிற்சி பெற்றார். சிறுவயதில் பெற்ற பயிற்சிகள் பிற்காலத்தில் திரையுலகில் ஜொலிப்பதற்கு உதவியாக இருந்தன.

டி.கே.எஸ்.சகோதரர்களின் நாடகக் குழுவில் சிலகாலம் இருந்த பிறகு மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பனியில் சேர்ந்தார். அங்கு முக்கிய வேடங்கள் கிடைத்ததுடன் மாதம் 75 ரூபாய் சம்பளம் கொடுக்கப்பட்டது. அக்காலத்தில் இது பெரிய தொகை.

### பெண்வேடத்தில் எம்.ஜி.ஆர்.

நாடகத்தில் சின்னப்பா கதாநாயகனாக நடித்த போது அவருக்கு ஜோடியாக எம்.ஜி.ஆர் பெண் வேடத்தில் நடித்திருக்கிறார் என்ற செய்தி இன்றைய தலைமுறையினருக்கு வியப்பளிக்கும்.

சின்னப்பாவை விட எம்.ஜி.ஆர். ஒரு வயது இளையவர். அக்காலத்தில் பாடும் திறமையுள்ளவர்கள் மட்டும்தான் நாடகத்திலோ சினிமாவிலோ கதாநாயகனாக நடிக்கமுடியும். எம்.ஜி.ஆருக்கு அழகும் திறமையும் இருந்தும் பாடத்தெரியாத காரணத்தினால் அப்போது கதாநாயகனாக முடியவில்லை. பின்னணி பாடும் முறை வந்த பிறகுதான் கதாநாயகன் ஆனார்.


பிற்காலத்தில் சந்திரலேகா படத்தில் கதாநாயகனாக நடித்த எம்.கே. ராதாவின் தந்தை எம்.கந்தசாமி முதலியார், நாடகக்குழு ஒன்றை நடத்தி வந்தார். அந்த நாடகக் குழுவில் சின்னப்பா சேர்ந்தார். நாடகக் குழுவுடன் சின்னப்பா பர்மா சென்றார். பர்மாவில் சுமார் 6 மாத காலம் சுற்றுப் பயணம் செய்த இந்த நாடகக் குழுவினர் பல நாடகங்களை நடத்தினர். அதில் சின்னப்பா முக்கிய வேடங்களில் நடித்தார்.

### சந்திரகாந்தா

துப்பறியும் நாவல்கள் எழுதுவதில் புகழ்பெற்று விளங்கிய ஜே.ஆர். ரங்கராஜு எழுதிய சந்திரகாந்தா என்ற நாவல் மிகவும் புகழ்பெற்றது. அதை நாடகமாக்கினார்கள். போலி மடாதிபதியின் வீலைகளை அம்பலப்படுத்தும் அந்த நாடகத்தில் கண்டூர் இளவரசன் என்ற முக்கிய வேடத்தில் சின்னப்பா நடித்து ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றார்.

### முதல்படம்

1936 இல் ஜூபிடர் பட நிறுவனத்தை தொடங்கிய எம்.சோமசுந்தரமும் எஸ்.கே.மொகிதீனும் சந்திரகாந்தாவை படமாக்கினர்.



உத்தமபுத்திரன் படத்தில் சின்னப்பா- எம்.வி.ராஜம்மா

நாடகத்தில் நடித்த அதே வேடத்தில் கண்டூர் இளவரசனாக சின்னப்பா நடித்தார். படத்தில் மடாதிபதியாகவும் சி.ஐ.டியாகவும் நகைச்சுவை நடிகரான காளி என்.ரத்தினம் நடித்து சக்கை போடு போட்டார். படம் வெற்றி பெற்றது. சின்னப்பாவுக்கும் நல்ல பெயர் கிடைத்தது.

சின்னப்பா தொடர்ந்து ராஜமோகன் (1937), பஞ்சாப் கேசரி (1938), அநாதைப்பெண் (1938), யயாதி (1938), மாத்ருபூமி(1939) ஆகிய படங்களில் நடித்தார். இந்தப்படங்கள் சுமாராக ஓடின. சின்னப்பாவுக்கு பெரிய வெற்றி எதுவும் கிடைக்கவில்லை. புதிதாக படவாய்ப்பும் வரவில்லை.

### சாமியாராக முடிவு

இதனால் நொந்து போன சின்னப்பா சினிமாவுக்கு முழுக்குப் போட்டு விட்டு சாமியாராகி விட முடிவு செய்தார். 45 நாட்கள் மௌன விரதம் இருந்தார். உண்ணாவிரதமும் மேற்கொண்டார்.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 300

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

ஒருமுறை ரமண மகரிஷியிடம் ஒருவர் சென்று பகவான் எனக்கு அமைதி வேண்டும் என்றாராம். ரமணர் சொன்னாராம். நீங்கள் சொன்ன வாக்கியத்தில் இருந்து வெறுமனே எனக்கு என்ற வார்த்தையையும் வேண்டும் என்ற வார்த்தையையும் அகற்றிவிடுங்கள். பிறகு அங்கே இருப்பது அமைதிதான்.

நிஜத்துடன், பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் உயிர்ப்புள்ள தொடர்பு வேண்டுமென்றால் அதற்கு ஒரே வழி உங்கள் நெறிப்படுத்தல்களையும் அஹங்காரத்தையும் விட்டுவிட்டு உங்களைச் சுற்றி நீங்களே எழுப்பிக் கொண்டுள்ள சுவரை உடைத்துத் தள்ளிவிட வேண்டியதுதான். அப்பொழுதுதான் உங்களால் அந்தத் தொடர்பு எப்பொழுதுமே இருக்கிறது என்பதைக் காணமுடியும்! அதற்காக நீங்கள் விசேடமாக எதுவும் செய்ய வேண்டியதில்லை. நீங்கள் இது இல்லையோ அதை வெறுமனே விட்டுவிடவேண்டும். அவ்வளவுதான்!

நீங்கள் நேசிக்கும் தன்மையுடனும் பிரவகிக்கும் தன்மையுடனும் நன்றியுணர்வால் நிரம்பியும் இருப்பீர்களானால் உங்கள் வழியாகப் பாய்ந்து செல்லும் பிரபஞ்ச இருப்புத் தன்மையின் மாபெரும் சக்தியை உங்களால் எப்பொழுதும் உணரமுடியும். நீங்கள் எப்பொழுதும் ஒரு மனநிறைவான உணர்வுடன் இருப்பீர்கள். அதனால் எதுவும் இலாபம் கிடைக்கும் என்பதனால் அல்ல. அதுவே உங்கள் இருப்புத் தன்மையாய் ஆகிவிடுவதால் இந்த மனநிறைவே. அவன் அறியா விடி




னும் ஒவ்வொரு மனிதனும் தேடும் இறுதியான மனநிறைவாகும். அவன் மீண்டும் மீண்டும் அதை லோகாயதமான விடயங்களில் தேடித் தேடி தவறவிட்டுக் கொண்டேயிருக்கிறான்.

நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களோ இல்லையோ பிரபஞ்ச இருப்புத் தன்மை உங்களைப் பாதுகாத்துக் கொண்டுதான் இருக்கிறது. நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் அதன்மீது விசுவாசம் வைத்து நன்றியுணர்வுடன் உங்கள் கடமையைச் செய்து கொண்டிருக்கவேண்டியதே. பிறகு பிரபஞ்ச இருப்புத் தன்மை உங்கள் மீது பொழிந்து கொண்டேயிருக்கும்.

ஆனால் நம்மிடம் விசுவாசம் இல்லை. ஒரு சின்னக் கதை... கடவுளிடம் எந்த விதமான விசுவாசமும் இல்லாத ஒரு மனிதன் வாழ்ந்து வந்தான். ஒருநாள் அவன் திடீரென்று மலையுச்சியில் இருந்து விழுந்து விட்டான். வெறுமனே ஒரு மரத்தின் வேரைப்பிடித்துக்கொண்டு தொங்கிக் கொண்டு இருந்தான். அவன் திகிலால் நிரம்பியிருந்தான். அவனுக்கு திடீரென்று மக்கள் எப்பொழுதும் கடவுளைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பது ஞாபகம் வந்தது. கடவுளை ஏன் உதவிக்கு அழைக்க முயற்சி செய்யக்கூடாது என்று எண்ணினான்.

ஓ கடவுளே! நான் ஒரு போதும் உன்னிடம் விசுவாசம் வைத்ததில்லை. நீ உண்மையிலேயே இருக்கிறாயா? உன்னால் என்னைக் காப்பாற்ற முடியுமா? என்று கத்தினான். கடவுளின் குரல் இடிபோல முழங்கியது. கண்டிப்பாக மகனே, நீ பிடித்துக் கொண்டிருக்கும் வேரைச் சற்று விட்டுவிடு நான் உன்னைக் கீழேயிருந்து தாங்கிக்கொள்கிறேன் அவன் மீண்டும் கத்தினான். எனக்கு உதவ வேறு யாராவது இருக்கிறீர்களா?

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேயரை தடுத்தார் ஆணையாளர்
# மொறட்டுவ மாநகரசபையில் பதற்றம்

(கொழும்பு)

**மொறட்டுவ மாநகரசபையின் பதவிக்காலம் கடந்த 16ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவடைந்த போதும் அதன் கால எல்லையை நீடிப்பது குறித்து வர்த்தமானியில் பிரசுரிக்காததால் மொறட்டுவ மாநகர சபையில் பதற்றமான நிலைமை ஏற்பட்டுள்ளது.**

மாநகரசபை ஆணையாளர் பொலிஸாரின் உதவியுடன் மாநகர சபை மேயர் மற்றும் அலுவலர்களை மாநகரசபை வளாகத்தினுள் நுழைவதைத் தடுத்துள்ளார்.

ஏனைய 23 உள்ளூராட்சி சபைகளுக்குமான காலாவதித் திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் நீடிக்கப்பட்டபோதும் மொறட்டுவ மாநகர சபை வர்த்தமானியில் உள்ளடக்கப்படவில்லை.

இந்தநிலையில் ஆணையாளர் மாநகரசபை மேயரையும் உத்தியோகத்தர்களையும் பொலிஸாரின் உதவியுடன் மாநகரசபையின் கடமைகளில் ஈடுபடவிடாது தடுத்தமையினால் அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

22 உள்ளூராட்சி சபைகளுக்கான காலாவதியாகும் திகதி நீடிக்கப்பட்டபோதும் மொறட்டுவ மாநகரசபை இந்த வர்த்தமானியில் உள்ளடக்காததால் மாநகரசபை ஆணையாளர் தமது அதிகாரத்தை பயன்படுத்தியுள்ளார். மாநகரசபை சட்டப்படி காலாவதியாகிவிட்டதால் ஆணையாளருக்கு இந்த அதிகாரம் சட்ட ஏற்பாடுகளின் படி வழங்கப்படுகிறது.

மேலும் ஆணையாளர், மேயருடையவும் துணை மேயருடையவும் வாகனங்களை எடுத்துச் சென்றுள்ளார்.

பொலிஸார் விரைந்து செயற்பட்டு மாநகரசபை உறுப்பினர்களை உள்ளே நுழையவிடாது தடுத்துள்ளனர்.

இதுவிடயம் குறித்து மேயர் சமன் லால் பெர்னாண்டோ தெரிவிக்கையில்,

அரசாங்கம் 23 உள்ளூராட்சி சபைகளின் கால எல்லையை நீடிப்பதற்குத் தீர்மானித்திருந்தது. எனினும் இது எழுதுவினைஞர் பகுதியில் ஏற்பட்ட தவறாக இருக்கலாம். ஆனால் ஆணையாளர் தவறாக பயன்படுத்த முனைகிறார்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளோம். இந்த தவறு திருத்தப்படும் என்று அறிவித்துள்ளனர். தற்பொழுதும் நானே மேயராக உள்ளேன்.

ஆணையாளர் என்னையோ உறுப்பினரையோ வழமையான செயற்பாடுகளை மேற்கொள்ளாது தடுக்க முடியாது என்று கூறியுள்ளார்.

இதேவேளை மாநகர ஆணையாளர் தெரிவிக்கையில், அதிகாரிகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற தாம் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளார். (3)

# களனி கங்கையில் குப்பை கொட்டிய 23 பேர் கைது

(கொழும்பு)

களனி,பொல்கொட ஆகிய கங்கைகளில் குப்பைகளை கொட்டியதுடன் கழிவு தண்ணீரை திறந்து விட்டனர் என்ற குற்றச்சாட்டில் 23 பேரை கைதுசெய்துள்ளதாக பொலிஸ ஊடகப்பேச்சாளர் திணைக்களம் அறிவித்துள்ளது.

பொலிஸார் மற்றும் கடற்படையினர் இணைந்து பள்ளியாவத்த, மொரட்டுமோதர மற்றும் கொஸபெலேன ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களனி கங்கைக்குள் கழிவுகளை கொட்டிய பெண்கள் மூவர் உட்பட எழுவரும், பொல்கொட கங்கைக்குள் கழிவுகளை கொட்டிய 10 பெண்கள் உட்பட 16 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களனி கங்கைக்குள் கழிவுகளை கொட்டினர் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட 23 பேரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

களனி கங்கைக்குள் கழிவுகளை கொட்டினர் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டவர்கள் வத்தளை நீதவான் நீதிமன்றத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி ஆஜர்படுத்தவுள்ளனர்.


இதேவேளை, பொல்கொட கங்கைக்குள் கழிவுகளை கொட்டிய சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டவர்கள் கல்கிஸை நீதவான் நீதிமன்றத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆஜர் படுத்தப்படவுள்ளனர் என்றும் அத் திணைக்களம் அறிவித்துள்ளது. (3-10)

# ஆதிவாசி இளைஞர் கடற்படையில் இணைவு

மகியங்கனை பகுதியில் வசித்து வரும் ஆதிவாசியான வசந்த பிரதீப் ஜயவர்த்தன இலங்கையின் கடற்படையில் நேற்று முன்தினம் இணைந்துள்ளார். இலங்கைவரலாற்றில் ஆதிவாசி ஒருவர் கடற்படையில் இணைவது இதுவே முதல் தடவையாகும்.

இதேவேளை பிரஸ்தாப இளைஞர் ஆதிவாசி தலைவரின் பூட்டப்பிள்ளை என்பது குறிப்பிடத்தக்கது.


இவரது அண்ணன் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமை யாற்றுவதுடன் இவர்களது தங்கை க.பொ.த. உயர்தரத்தில் படித்து வருகிறார்.(3)



# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 523

Search for people, places and things | Nagendram Home


ராஜி




பாவனா




காவியா




சரவணன்




கீர்த்து கரன்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.

அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத்திட்டம் கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஜே/328 தவசிகுளம் கிராம சேவையாளர் பகுதியில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டவர்களுக்கான வீட்டுத் திட்டம் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என மீள்குடியேறியுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் இடம்பெற்ற இறுதி யுத்தமான வன்னிப் போரில் இருந்து தப்பிச் சென்ற மக்கள் வவுனியா நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டனர்.

அதன் பின்னர் 2009- 2010 வரையான காலப்பகுதியில் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஜே/328 கிராமசேவையாளர் பிரிவில் அமர்த்தப்பட்டனர். ஆனால் அம் மக்களுக்கு இன்றும் வீட்டுத் திட்டத்தின் கீழ் வீடுகள் கிடைக்கவில்லை.

இதேவேளை மேற்படி பகுதிகளில் நிரந்தர குடிகளாக இருந்தவர்களுக்கு கரித்தாஸ் நிறுவனத்தால் அரை வீட்டுத்திட்டம், மலசலகூடம் என்பன அமைத்துக்கொடுக்கப்பட்டது.

அத்துடன் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து கெற்பெலி, உசன் போன்ற பகுதிகளில் மீள் குடியேறியவர்களுக்கும் வீட்டுத் திட்டம் கிடைத்துள்ளது.

ஆனால் மேற்குறிப்பிட்ட மக்களுக்கு இதுவரை வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை என்பதுடன் அம் மக்களது அடிப்படை வசதிகள் எவையும் எந்தவொரு நிறுவனத்தாலோ, அரசாங்கத்தாலோ செய்து கொடுக்கப்படவில்லை.

இது தொடர்பாக அம் மக்கள் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டும் கவனிப்பாரன்றிய நிலையிலே காணப்படுகின்றனர்.

இது தொடர்பாக தென்மராட்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஜே/328 கிராம சேவையாளர், தென்மராட்சி பிரதேச செயலாளர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர் கவனத்தில் கொள்ளுமாறு அம் மக்கள் கேட்டுள்ளனர்.

அத்துடன் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு உயிர் தப்பி வந்துள்ள தம்மை மேற்குறித்த அதிகாரிகள் கவனத்தில் கொண்டு மிக விரைவில் வீட்டுத்திட்ட வீடுகளை பெற்றுத் தருமாறு பாதிக்கப்பட்ட குடும்பங்கள் வேண்டி நிற்கின்றன. (இ-5-283)

### வெளிநாட்டு நாணய மாற்று விகிதம் 19.10.2015
### மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 138.54 | 143.05 |
| பவுண்ட் | பிரிட்டன் | 212.93 | 221.51 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 156.46 | 163.47 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 144.21 | 150.97 |
| டொலர் | கனடா | 106.34 | 111.28 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 99.56 | 104.75 |
| டொலர் | சிங்கப்பூர் | 99.56 | 103.89 |
| யென் | ஜப்பான் | 1.1552 | 1.2066 |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 373.6888 |
| குவைத் | டினார் | 467.2813 |
| ஓமான் | ரியால் | 366.1179 |
| கட்டார் | ரியால் | 38.7102 |
| சவுதி அரேபியா | ரியால் | 37.5866 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 38.3813 |


### சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 70 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 200 | 350 |
| தக்காளி | 120 | 140 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 40 |
| கோவா | 70 | 60 | 70 | 80 |
| கரட் | 80 | 60 | 80 | 100 |
| பூசணி | 40 | 40 | 40 | 50 |
| புடோல் | 40 | 40 | 50 | 80 |
| வாழைக்காய் | 60 | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 110 | 120 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 140 | 120 |
| பாகற்காய் | 180 | 200 | 160 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 40 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 90 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 100 | 100 | 120 | 120 |
| லீக்ஸ் | 70 | 60 | 60 | 80 |
| பீற்றூட் | 50 | 30 | 40 | 60 |
| கறிமிளகாய் | 180 | 180 | 180 | 140 |
| முருங்கைக்காய் | 80 | 100 | 60 | 120 |
| போஞ்சி | 160 | 200 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 40 | 80 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 300 | 320 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-60 | 40-50 | 40-50 |
| இராசவள்ளி | 200 | — | — | — |
| வெங்காயப்பூ | 180 | — | 200 | — |
| முள்ளங்கி | 50 | — | 40 | 60 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## கண்டி மன்னன் திடீர் தாக்குதலில் வெள்ளையர்கள் சரண்

14



எனவே வேறு நல்ல மாப்பிள்ளையாகப் பார்த்து உன் மகளைத் திருமணம் செய்து கொடு. நானே முன்னின்று திருமணத்தை நடத்தி வைக்கிறேன் என்றார்.

பிலிமைத்தலாவின் முகம் கறுத்தது. தன் திட்டம் சுக்கல் சுக்கலாக நொறுங்கி விட்டதை எண்ணி மனம் உடைந்தான்.

இந்தச் சம்பவம் நடந்த சில நாட்களிலேயே தன்னுடைய உறவுப்பெண் ஒருத்தியைக் கண்டி மன்னர் மணந்து அவளையே பட்டத்து ராணி ஆக்கினார்.

முக்கிய பிரச்சினைகளை எல்லாம் மன்னரே கவனித்தார். பிலிமைத்தலாவின் யோசனைகளைக் கேட்பதில்லை. மனச்சாட்சியின்படி முடிவுகளை எடுத்தார்.

பிலிமைத்தலாவுக்கு ஆத்திரம் பொங்கியது. ஒருநாள் மன்னனிடம் உங்கள் நன்மைக்காக நான் கூறும் ஆலோசனைகளை எல்லாம் புறக்கணிக்கிறீர்கள். இது நல்லதல்ல என்றான்.

நான் சொல்கிறபடி நடக்க வேண்டியதுதான் உன் கடமை. நீ சொல்கிறபடி எல்லாம் நடப்பது மன்னனின் வேலை அல்ல என்று பதிலளித்தார் மன்னர்.

இதனால் பிலிமைத்தலாவின் மனம் எரிமலை ஆகியது. இனிப் பொறுத்திருப்பதில் பயனில்லை. மன்னனைத் தீர்த்துக் கட்டினால் தான் என் ஆசைகள் நிறைவேறும் என்று முடிவு செய்தான்.

மன்னனைக் கொலை செய்ய ஒரு பயங்கரமான திட்டத்தைத் தீட்டினான்.

### கொலை முயற்சியில் தப்பினார் கண்டி மன்னர்

கண்டி மன்னன் விக்கிரமராசசிங்கனைப் படுக்கையிலேயே படுகொலை செய்ய மந்திரி திட்டம் தீட்டினான். அதில் மன்னர் அதிசயமாக உயிர் தப்பினார்.

மன்னரைத் தீர்த்துக்கட்ட திட்டம் தீட்டிய மந்திரி பிலிமைத்தலா, அந்தத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை மன்னரின் படுக்கை அறை காவலாளிகளிடம் ஒப்படைத்தான்.

அப்போது படுக்கைக் காவலாளிகளாக இருந்தவர்கள் மலேயாவைச் சேர்ந்தவர்கள். அவர்களை மிரட்டியும் ஆசை காட்டியும் தன் திட்டத்திற்கு இணங்க வைத்தான்.

காவலாளிகளில் சிலர் மந்திரியின் வலையில் சிக்கினாலும் சிலர் மன்னர் மீது விசுவாசம் கொண்டவர்களாக இருந்தார்கள். மந்திரியின் சதித்திட்டத்தை அவர்கள் மன்னரிடம் கூறிவிட்டார்கள். அதனால் கடைசி நேரத்தில் மன்னர் கொலை செய்யப்படாமல் தப்பினார்.

### தூக்குத் தண்டனை

மந்திரி பிலிமைத்தலாவின் சதிவேலைகளும் சூழ்ச்சிகளும் மன்னருக்குத் தெரிய வந்தன. ஏற்கனவே மந்திரியின் போக்கு மன்னருக்குப் பிடிக்காமல் இருந்தது என்றாலும் தான் மன்னராவதற்கு உதவியவன் என்ற காரணத்திற்காக அவன் செய்த குற்றங்களை மன்னித்து வந்தார்.

இம்முறை தன்னைக் கொலை செய்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்ற மந்திரி பிலிமைத்தலா திட்டம் தீட்டியதை மன்னிக்க அவர் தயாராகவேயில்லை. பிலிமைத்தலாவையும் அவனுடன் சேர்ந்து சதி செய்த மற்றும் 6 பேர்களையும் தூக்கில் போடும்படி மன்னர் உத்தரவிட்டார். அதன்படி அவர்கள் 1812 ஆம் ஆண்டு ஜூன்மாதம் தூக்கிலிடப்பட்டனர்.

### புதிய மந்திரி

பிலிமைத்தலாவுக்குப் பதிலாக எகிலப்பொல என்ற சிங்களன் புதிய மந்திரியாக நியமிக்கப்பட்டான். உதவி மந்திரியாக மொலிக்கொடை என்பவன் பொறுப்பேற்றான்.

தூக்கிலிடப்பட்ட பிலிமைத்தலாவிடம் இருந்த அத்தனை கெட்ட குணங்களும் புதிய மந்திரி எகிலப்பொலவிடமும் இருந்தன. அவனும் வெள்ளைக்காரர்களுடன் இரகசிய தொடர்பு வைத்திருந்தான். மன்னரைக் கவிழ்க்கத் தக்க தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

### மறுமணம்

முன்னாள் கண்டி மன்னர் இராசாதிராசசிங்கன் போல விக்கிரமராசசிங்கனுக்கும் குழந்தை இல்லை. தனக்கு வாரிசு இல்லாமல் போய்விடுமோ என்று எண்ணிய அவர் மதுரையில் இரண்டு பெண்களைத் தேர்ந்தெடுத்து திருமணம் செய்து கொண்டார். 1813ஆம் ஆண்டு தை மாதத்தில் இந்தத் திருமணம் நடைபெற்றது.

இதற்கிடையே மந்திரி எகிலப்பொல மக்களிடம் மன்னன் பெயரைச் சொல்லி ஏராளமாகப் பணம் சேர்த்தான்.

இதுபற்றி மன்னருக்குத் தகவல் தெரிந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவா நெருக்கடி!

## விரிந்த பார்வையில்





105 ஆவது சரத்து இலங்கையின் நீதிமன்றங்களை வகைப்படுத்துகிறது. ஆனாலும் பரிந்துரைக்கப்பட்ட வகை இவற்றுள் இல்லை. அதாவது சட்டத் தொழில் நுட்ப ரீதியில் பார்த்தால் இங்கு இதுவரையில் அமைக்கப்பட்ட விசேட நீதிமன்ற விசாரணைகளில் இலங்கைப் பிரஜை அல்லாதவர் விசாரணை அமர்வுகளில் கலந்துகொள்ளும் ஏற்பாடு ஏற்கனவே நடைமுறையில் இருந்ததில்லை. எனவே, இந்த சட்ட இழுபறி நிலை தொடர்வதாகவே யிருக்கும்.

புதியதொரு பிறப்பெடுத்திருக்கும் எமது தற்போதைய அரசுக்கு ஏற்பட்டிருக்கும் புதிய அரசியல் குழப்பம்தான் என்ன? நம்பகத் தன்மையை வெளிப்படுத்துவதற்கான இந்த அழுத்தத்தை இலங்கைக்குக் கொடுத்தவர்கள் அநேகமாக முன்னைய அரசாங்கமே மீண்டும் பதவிக்கு வரும் என்ற எதிர்பார்ப்பில் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டிருப்பதாகவே தெரிகிறது! இலங்கையின் பெரும் பங்கு மக்களது கருத்து நீறுபூத்த நெருப்பாக இருப்பது பற்றிய ஐ.நா.வினது அறியாமையை யிட்டு அதன் நிபுணர்களை எவருமே பிழைகூற முடியாது. அவர்கள் நடத்தி முடிந்த விடயம் என்னவென்றால், மேற்கொண்டும் பரிசோதனைகள்- பரிசீலனைகள்- விசாரணைகள் தேவைப்படும் என அவர்கள் நம்பி எதிர்பார்த்த ஒருபக்கச்சார்பு அடிப்படையில் அமையும் ஓர் ஆரம்ப விசாரணையேதான். மேற்படி விடயங்களின் விரிவான பக்க த்தை நுணுக்கமாய் ஆராய்ந்து பார்த்து அதில் மறைவாயிருக்கும் சாதக/ பாதக விளைவுகளை இனங் காண்பது அமெரிக்காவினது பொறுப்பேயாகும்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் இக்குறைபாட்டை சரியான முறையிலேயே அடையாளங்கண்டு கொண்டுள்ளார். ‘ஒரே பலகார அச்சினை’யே எக்காலமும் பயன்படுத்துவது போல் ‘ஒரே மாதிரி வழிமுறையே அனைத்திற்கும் பொருந்தும்’ என்ற கொள்கை இந்த மாதிரியான சந்தர்ப்பங்களிலெல்லாம் நடைமுறைப் பொருத்தமாயிருக்கும் என்ற அவசியமில்லை என அவரது விஜயத்தின்போது கொழும்பில் வைத்து சுட்டிக்காட்டியிருந்தார். கம்போடிய போர்க் குற்றங்களுக்கான குற்றவியல் குழுவிசாரணையை எடுத்துக் கொண்டோமானால் 1970 ஆம் ஆண்டில் பொல்பொட் ஆட்சியின் போது நிகழ்த்தப்பட்ட போர்க்கால அட்டூழியங்களை விசாரிப்பதற்கென ஐ.நா. சபையை அந்த அரசாங்கமே வரவேற்றிருந்தது. தொடர்ச்சியாக நடந்த அந்த விசாரணைகளிலிருந்து ஐ.நா. கற் றுக்கொண்ட பாடங்கள் என்னவென்று பார்ப்போமானால், வழக்காளிகள்தரப்புசட்டத்தரணிகள்,




ஐ.நா.வினது சிவில் சேவை அதிகாரிகள் பெற்றுக் கொண்ட பயனைத் தவிர வேறு பயனெது வுமே கிட்டியதில்லை. வெறும் நேர விரயமும் நீடித்த சிர மமான பய னற்ற வெறும் பேச்சுக்களுடன் பாரிய பணவிரயமுமே ஏற்பட்டதாயிருந்தது.

பழங்காலத்து விவேகமிக்க நடைமுறை நீதியியல் கோட்பாடான ‘போர்க்காலங்களில் சட்டங்கள் மௌனித்து விடும்’ என்ற விதமான கொள்கைகளிலிருந்து உலகம் எவ்வளவோ தூரம் கடந்து சென்றுவிட்டது என்பதில் சந்தேகமேயில்லை. ஆனாலும் இப்போது முற்றிலும் தூய்மையான ஒழுக்கநெறி அணுகு முறைக் கருத்துக்களென் றில்லாமல், நாடுகளின் புவிசார்- அரசியல் அடிப்படையிலான கோட்பாடுகள் ஒப்பீட்டளவில் கருத்திற்கொள்ளப்படும் சர்வதேச பரஸ்பர இணக்கப்ப டுகள், ஒப்பந்தங்கள் மற்றும் ஏனைய ஏற்பாடுகள் போன்ற தெரிவிற்குரிய மாற்றீடுகளும் இப்போது உள்ளன.

அமெரிக்காவின் பொதுவான நிலைப்பாடு அதனைப் பொறுத்தமட்டில் பெரிதும் துன்பகரமான ஒன்றாகும். இவ் [illegible]லையென்றாலுங்கூட இலங்கை மட்டிலான அதன் தீர்மான வரைபில் சிற்சில இடங்களில் அது பரிந்துரைக்கும் நடவடிக்கைகள் அதனது சொந்த செயற்பாடுகளுக்கு மாறாகவும் கேலிக்குரிய விதத்தில் முரண் நகையானவையாகவுமே உள்ளன. அதாவது பாலியல் குற்றங்கள் மட்டில் விசாரணை மேற்கொள்ளப்படும் அவசியம் பற்றி அது பரிந்துரைக்கும் அதேநேரம், அதனது சொந்த பாலியல் குற்ற விவகார விகிதாசாரம் உலகத்திலேயே அதிகூடியனவற்றுள் ஒன்றாகும்.

அத்துடன் அமெரிக்கா தளம் கொண்டிருக்கும் ஒக்கினாவா தீவு மக்கள் அமெரிக்கர்களால் அங்கு மேற்கொள்ளப்பட்ட பல கற்பழிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து அங்கிருக்கும் அமெரிக்க தளத்தை மூடிவிடும்படி தொடர்ச்சியாக குரலெழுப்பி வருகின்றனர். திட்டமிடப்பட்ட விதமாக ‘ஐ.எஸ்.ஐ.எஸ்.’ மற்றும் ‘தலிபான்’ இலக்குகள் மீது மேற்கொள்ளப்படும்அமெரிக்ககுண்டு வீச்சுக்கள் சர்வதேச மனித உரி[illegible] இருப்பதை பென்ரகன் (pentagon) பாதுகாப்பு அமைச்சு உறுதி செய்து கொள்ள வேண்டுமென்ற அறைகூவல் அமெரிக்காவை நோக்கி எழுப்பப்பட்டு வருவதையும் நாம் காணலாம்.

போரினால் பாரிய அழிவு களுக்குள்ளான இலங்கையின் வடபுலத்தில் இந்தவித நீடித்த கால விரயத்தில் மேற்கொள்ளப்படக்கூடிய ஆபத்தான அரசியல் திட்டங்கள் மூலம் உருவாகக்கூடிய வெறும் பேச்சு இழுபறிச் சூழ்ச்சிகளினூடாக நிகழக் கூடிய தேவை யற்றதும் விரும்பத்தகாததுமான விடயங்களுக்குப் பதிலாக ‘நிதி’ மற்றும் ‘பொருளாதார’ அடிப்படையில் எவ்வளவோ கூடுதல் நன் மைகளை நாம் எமது விருப்பப்படியே ஏற்படுத்திக் கொள்ளலாம். இந்த நீடித்த செயற்பாடுகளினூடாக எமது மக்களுக்கு ஏற்கனவே ஏற்பட்ட- ஏற்படுத் தப்பட்ட காயங்களைக் குணப்படுத்துவதிலும் பார்க்க மீள் இணக்கப்பா ட்டிற்கு முரணாக பழைய காயங்க ளையே மீளவும் கீறிப் புண்ணாக்கி ரணகளமாக்கக் கூடிய நிலைமைகளை நாம் முன்னறிவுடன் சிந்தித்து அவற்றை சீராக்கிக் கொள்வதே அறிவு டைமை... அவசிய மும் அதுவே!



நடந்து முடிந்த போரின் விளைவுகள் மூடி மறைக்கப்படவேண்டும் என்பது இதன் பொருள் அல்ல!

இலங்கையின்பல்வேறு நீதிமன்றங்களிலும் பல்வேறு வழக்குகள் இன்றும் நிலு வையிலேயே தொடர்ந்தும் இருந்து கொண்டிருப்பது தெரிந்ததே. இவைகளனைத்துக்கும் தீர்வு காணப்பட வேண்டும்.

நீண்ட காலமாக வே நீதி வழங்கப்படாமலோ, நீதி மறு க்கப்பட்டவர்களாகவோ இருக்கும் பாதிக்கப்பட்ட மக்களனைவரதும் குறைபாடுக ளைத் தீர்க்கவும், இழப்புக் களுக்கு நட்ட ஈடு கொடுக்க வும் வாழ்வாதார உதவிகள் செய்யவும் இதுபோன்ற ஏனைய வேறு நடவடிக்கைகளுக்கும் அதிகாரிகளை நியமித்து இவற்றுக்கான பொது அலுவலகமொன்றையும் ஏற்பாடு செய்ய அரசு தானாகவே முன்வந்துள்ளது.

இந்நடவடிக்கைகள் ஒரு சமூகத்திற்கு மட்டும் என்ற வரையறையில்லாது அனைத்து சமூகங்களுக்குமானதே. பாலியல் குற்ற விசாரணைகளுக்கு முன்னுரிமையளிக்கப்பட வேண்டும்.

சர்வதேச சமூகமானது, கற்றுக்கொண்ட பாடங்களுக்கான மீள் இணக்கப்பாட்டு சபை ஆணையாளர்கள் அப்போதிருந்த ஜனாதிபதியின் துதிபாடுபவர்கள் என்ற கணிப்பை ஏற்கனவே கொண்ட தாயிருந்தது.

இருப்பினும் இலங்கையர்களில் தீர்மானமிக்க நேர் மையாளர்களும், சுதந்திரமான முறையில் நியாயம் தீர்த்து நீதி வழங்குபவர்களுமான நீதியாளர்கள் நாட்டில் தொடர்ந்து இப்போதும் இருந்தே வருகின்றனர்.

அமெரிக்காவைப் பொறுத்தமட்டில், இலங்கையில் நடந்து முடிந்த பயங்கரங்கள் மீண்டும் நடைபெறக்கூடாதென்று அது விரும்புமாகில், அன்று நடந்தவற்றுக்கு காரணகர்த்தாவாகிய இந்தியாவுடனேயே அது பேச வேண்டியது அவசியம்.

இப்போதோ இந்த செயல் முறைகள் ஜெனிவாவில் ஆரம்பிக்கப்பட்ட பின்னணியில் அனைத்து விடயங்களையும் தமது விரிந்த பார்வையில் தெளிவான ஓர் படமாக கண்டுகொண்டே அவர்கள் தெளிவுற வேண்டியவர்களாயுள்ளனர். கண்டுகொள்வார்களா அவர்கள்? இறுதியில் சரியான முடிவிற்கு வருவார்களா?

**“ஜெனிவா நெருக்கடி! விரிந்த பார்வையில்” எனும் தலைப்பில் சண்டேரைம்ஸ் பத்திரிகையின் ஆசிரியர்தலையங்கத்தின்மொழியாக்கம்....**

-தமிழில்.யோகர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிறுவர் அரங்கம்

1268

## புறா அரசன்



வேடன் ஒருவன், ஒரு ஆலமரத் தினடிக்கு வந்தான்.

வலையை விரித்து, அரிசியைத் தூவி வைத்தான்.

உடனே அண்மையிலிருந்த ஒரு புதரில் மறைந்து கொண்டான்.

பறவைகள் வந்து வலையில் விழுவதை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருந்தான்.

அச்சமயம், புறாக்களுக்கு அரசனான சந்திரன், தன் பரிவாரங்களுடன், இரை தேடிக் கொண்டு அந்தப் பக்கமாக வந்தது. உடனே, அங்கு

அரிசி இறைக்கப் பட்டிருந்ததைக் கண்டு கும்பலாக இறங்கத் தொடங்கியது.

ஆனால், அப்புறாக்களின் அரசன் அதைத் தடுத்தது.

இந்தக் காட்டில், தானியம் எப்படி வரும்? நிச்சயம் இதை யாரோ இங்கு கொண்டு வந்து தெளித்திருக்க வேண்டும்.

இதுபற்றி நாம் நன்கு தெரிந்துகொண்டாலொழிய, அந்தத் தானியத்தை தின்னக் கூடாது.

ஏனென்றால், ஒருமனிதன், பொன் காப்பு க்கு ஆசைப்பட்டு, எப்படி ஒரு புலியிடம் அகப்பட்டுக் கொண்டு மரணமடைந்தானோ, அதுபோல் அது ஏதோ விபரீத மாகத் தோன்றுகிறது என்றது புறா அரசன்.

அது என்ன கதை? என்று மற்ற புறாக்கள் கேட்க, புறா அரசன் சொல்லத் தொடங்கியது.

நான் முன்பு ஒருநாள், இரை தேடிக் கொண்டு இக்காட்டின் தெற்கே செல்லுகையில் அதைக் கண்டேன்...

அது ஒரு கிழப்புலி மிகவும் வயதாகிவிட்டது.

அங்குமிங்கும் ஓடி இரை தேட முடியாதநிலை.

அதற்காக வயிறு பசிக்காமல் இருக்குமா? வேளா வேளைக்கு அதற்குப் பதில் சொல்லியாக வேண்டுமே!

அது வெகு நாட்களாக, ஒரு ஜதை பொன் காப்பு வைத்திருந்தது.

அதை யாருக்காகி லும் கொடு த்து விட வேண்டும் என்று தீர்மா னித்திருந்தது.

ஒருநாள், அக்கிழப் புலி, அங்கி ருந்த ஒரு ஏரியில் நீராடி விட்டு, கையில் காப்பை பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தது.

அந்த சம யம் பார்த்து ஒரு மனிதன், அக்கரைப் பக்கமாக வந்தான்.

அவனைக் கண்டதும், ஓ மனிதா! இதோ இந்துப் பொன் காப்புக்களை வாங்கிக்கொண்டு போ! என்று இரைந்து,

இதோ, பொன்காப்பு நமக்கு வலிய கிடைக்கி றது! ஆனால், அதைக் கொடுப்பதோ ஒரு புலி! அது துஷ்ட மிரு கமாயிற்றே! காப்பை வாங்க அதன் அருகில் சென். றதும் அது நம்மீது பாய்ந்து விட்டால் என்ன செய் வது என்ன தர்மசங்கடமான நிலை! அதற்காக, இந்தப் பொன் காப்பை கைவிடுவதற்கும் மனம் வரவில்லையே! என்ன செய்வது.

உம் மரணம், இப்போது இல்லா விட்டாலும் எப்போதோ ஒருநாள் வந்தே தீரப் போகிறது. அதைத் தடுக்க முடி யுமா?.........

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

10.2015
20

803 - ஐக்கிய அமெரிக்கா லூசியானாவை பிரான்சிடம் இருந்து கொள்வனவு செய்யும் ஒப்பந்தத்துக்கு ஒப்புதல் அளித்தது.

827 - ஓட்டோமான், எகிப்தியப் படைகள் பிரித்தானீய, பிரெஞ்சு, ரஷ்யக் கூட்டுப் படைகள் நவாரினோ என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் தோற்கடித்தன. இது கிரேக்க விடுதலைப் போரை முடிவுக்குக் கொண்டுவந்தது.

941 - கிறகுஜேவாச் படுகொலைகள்: சேர்பியாவின் கிறகுஜேவாச் நகரில் ஆயிரக்கணக்கான மக்கள் நாசி ஜேர்மனியர்களினால் கொல்லப்பட்டனர்.

944 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் இராணுவம் யுகோசுலாவியத் தலைநகர் பெல்கிரேட்டை ஜெர்மனியிடமிருந்து மீட்டது.

944 - கிளீவ்லண்ட் நகரில் இயற்கை வாயுக் குழாய் வெடிப்பினால் 130 பெர் கொல்லப்பட்டனர்.

955 - த லோட் ஒவ் த ரிங்ஸ் நூலின் கடைசிப் பாகமான ரிட்டர்ன் ஒஃப் த கிங் வெளியிடப்பட்டது.

946 - புவேர்ட்டோ ரிக்கோ விடுதலைக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

973 - சிட்னி ஒப்பேரா மாளிகை திறந்து வைக்கப்பட்டது.

976 - மிசிசிப்பி ஆற்றில் பயணிகள் கப்பல் ஒன்று சரக்குக் கப்பலுடன் மோதியதில் 78 பயணிகள் கொல்லப்பட்டனர். 18 பேர் மட்டும் தப்பினர்.

982 - இலங்கையில் முதன் முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது.

982 - மொஸ்கோவில் இடம்பெற்ற சர்வதேச உதைபந்தாட்டப் போட்டி ஒன்றில் இடம்பெற்ற நெரிசலில் சிக்கி 66 பேர் இறந்தனர். ,

2001 - இலங்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற அரசியல் கூட்டணிக் கட்சி தொடங்கப்பட்டது.

2004 - முதலாவது உபுண்டு லினக்ஸ் வெளியிடப்பட்டது.

### பிறப்புக்கள்

1469 - குரு நானக் தேவ், சீக்கிய மதத்தைத் தோற்றுவித்தவர். (இ. 1539)

1884 - டி. எஸ். சேனநாயக்கா, இலங்கையின் முதலாவது பிரதமர். (இ. 1952)

1923 - தொ. மு. சி. ரகுநாதன், எழுத்தாளர், திறனாய்வாளர் . (இ. 2001)

1923 - வி. எஸ். அச்சுதானந்தன், கேரள முதல்வர்

1925 - ஆர்ட் புச்வால்ட், அமெரிக்க நகைச்சுவையாளர்

1946 - எல்ஃப்ரீத் ஜெலினெக், ஆஸ்திரிய எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர்

1954 - ந. செல்வராஜா, இலங்கையை சேர்ந்த நூலகவியலாளர், ஆய்வாளர்

1971 - ஸ்னூப் டாக், அமெரிக்க ராப் இசைக் கலைஞர்

1978 - வீரேந்தர் சேவாக், இந்தியத் துடுப்பாளர்

### இறப்புகள்

1984 - கார்ல் கோரி, ஆஸ்திரிய மருத்துவர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1896)

1984 - போல் டிராக், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேய இயற்பியலாளர் (பி. 1902)

2008 -ஶ்ரீதர், தமிழ்த் திரைப்பட இயக்குநர் (பி. 1933)

2014 - ராஜம் கிருஷ்ணன், தமிழக எழுத்தாளர் (பி. 1925)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### தைப்பொங்கல்

தைப்பொங்கல் தை 1 அன்று தமி ழர்களால் சிறப் பாக கொண்டாடப்படும் ஒரு தனிப் பெரும் விழா. தமி ழர் திருநாளாக தமிழ்நாடு, இல ஙகை, மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பிய நாடுகள், வட அமெரி க்கா, தென் ஆப்பிரிக்கா, மொரிசியசு என தமிழர் வாழும் அனை த்து நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது.

இவ்விழா சமயங்கள் கடந்து அநேக தமிழர்களால் கொண்டாடப்படுகிறது.

பொங்கல், உழைக்கும் மக்கள் இயற்கைக்கும், மற்ற உயிர்களுக்கும் சொல்லும் ஒரு நன்றியறிதலாக கொண்டா டப்படுகிறது.

சங்ககாலத்தில்,அறுவடை காலத்தில் நல்ல மழை பொழிய வும், நாடு செழிக்கவும் பெண்கள் இந்நோன்பைக் கடைப் பிடித்தார்கள்.

தை முதல் நாளில் இந்த நோன்பை முடிப்பார்கள். நல்ல விளைச்சல் கொடுத்தமைக்காக பூமி, பகலவன், உதவிய கால் நடை போன்றவற்றிற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக சர்க்கரைப் பொங்கல் படைத்து வழிபட்டனர்.

இதுவே நாளடைவில் மூன்று தினங்கள் கொண்டாடும் பொங்கல் திருநாள் கொண்டாட்டமாக மாறியது. இப்பொங்கல் விழா, மக்களால் இயல்பாகக் கொண்டாடப் படுகிறது.

உழைக்கும் தமிழ் மக்கள் தாமே கண்டுணர்ந்து, தமது உழைப்பிற்கு உதவிய இயற்கைக்கும், தம்மோடு சேர்ந்து உழை த்த கால் நடைகளுக்கும், தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழா.

உழவர்கள் மழையின் உதவியால் ஆடி மாதம் முதல் உழை த்துச் சேர்த்த நெல்லை மார்கழியில் வீட்டிற்குக் கொண்டு வந்து தமது உழைப்பின் பயனை நுகரத் தொடங்கும் நாளே தைப் பொங்கல். இப்பொங்கல் அன்று தனது முதற் பயனை கதிர வனுக்குப் படைத்த பின் குடும்பத்தாருக்கும் சுற்றத்தாருக்கும் கொடுத்த பின்பே தான் நுகர்வான். இது தமிழரின் பண்பாடாக தொன்று தொட்டு உள்ளது என்பர்.

பெரும்பாலும் முதல் சிந்தனை தெளிவற்றவையாக இருக்கும். எதற்கும் மறுசிந்தனை செய்யுங்கள். - தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பிரம்மகத்தி தோஷத்தில் இருந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டும்

பிரம்மகத்தி தோஷம் என்பது பற்றி பலரும் அறிந்திருக்காமல் இருக்கலாம். ஆனால் பிரம்மகத்தி தோஷம் என்பது மிகவும் பலமானது. அது நாட்டையே அழிக்கவல்லது.

எனவே பிரம்மகத்தி தோஷத்தில் இருந்து எங்களை நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அப்படியாயின் பிரம்மகத்தி தோஷம் எங்ஙனம் ஏற்படுகிறது என்ற கேள்வி இப்போது எழும்.

பூனூல் தரித்து வேத மந்திரங்கள் ஓதுகின்ற பிராமணோத்தமர்கள் குருவாக இருந்து இறை பரம்பொருளுக்கும் மானிடத்திற்குமான தொடர்பை ஏற்படுத்துபவர்கள்.

சிவப் பிராமணர்கள் சிவபூசை செய்து சிவசின்னங்களை தம் உடம்பில் அணிந்து சுத்த சைவர்களாக வாழுகின்றவர்கள். இதனாலேயே மும்மாரிகளில் ஒன்று வேதம் ஓதும் வேதியருக்கானது.

எனவே அந்தணச் சிவாச்சாரியார்கள் சிவாத்துவம் உடையவர்கள். அவர்களுடைய மனதை நோகடிப்பது, தெரிந்தோ தெரியாமலோ அவர்களுக்குத் தீங்கிழைப்பது மகாபாவம். இவ்வாறாக அந்தணர்களை நிந்தனை செய்தலும் அவர்களைக் கொலை செய்வதற்கு ஒப்பான பாவத்தை இழைப்பதும் பிரம்மகத்தி தோஷத்தை உண்டு பண்ணும்.

யதார்த்த உலகில் விஞ்ஞானம் எத்துணை உச்சமடைந்திருந்தாலும் அதிசயமான-தெய்வீகமான சம்பவங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன.

இதில் ஒன்று கன்ம வினை என்பதாகும். கன்ம வினைப்பயன் என்பதை அறிந்திருப்பது மிகவும் அவசியமானது. கன்மா ஒருபோதும் எவரையும் விட்டு விட மாட்டாது. இந்த உடம்பு பிறப்பு எடுத்தாலும் இறப்பு நடப்பதும் எடுத்த சரீரத்தை விடுத்து அழிவற்ற ஆன்மா நகர்ந்து போவதும் இயல்பு.

இந்த இயல்பினிடையே எத்தனையோ இன்ப துன்பங்களை நம் வாழ்நாளில் சந்தித்து முடிக்கின்றோம். ஆக, மனித சமூகம் புண்ணிய பாவம் என்ற விடயம் பற்றி நிச்சயம் அறிந்திருக்க வேண்டும்.

எமது தாயகத்தில் இன்று நடக்கின்ற அத்தனை தாழ்வுகளுக்கும் அடிப்படைக்காரணம் புண்ணிய பாவம் பற்றிய நினைப்பின்மையாகும். நம் முன்னோர்களின் வாழ்வில் தர்மம் இருந்தது. நீதி, நேர்மை என்ற அறச் சிந்தனைகள் நடைமுறையில் இருந்தன.

இதற்கு அடிப்படைக்காரணம் புண்ணிய பாவம் என்ற இரு வினைக் கோட்பாட்டை நம் முன்னோர்கள் முழுமையாக அறிந்தும் தெரிந்தும் நம்பியும் இருந்ததாலாகும்.

எனினும் இன்றைய சூழ்நிலையில் புத்திசாலித்தனம் என்ற பெயரால் பாவ காரியங்கள் நடந்தேறுகின்றன. என்றைக்கு எங்கள் இளம் சமூகம் புண்ணிய, பாவம் என்ற தருமம் உரைக்கும் தத்துவங்களை உணர்ந்து, ஏற்று அதன் வழி ஒழுகுகின்றார்களோ அன்றைக்கு எங்கள் மண்ணில் எங்கும் தர்மம், எதிலும் நீதி, எதிலும் நேர்மை என்ற அறத்துவம் பெருக்கெடுத்து ஆறாக ஓடும். அப்போது தமிழினத்தின் விடிவு தானாக ஏற்படும்.

எனினும் தர்மத்தை வாழவைக்க தர்மப் பிரபுக்கள் தோன்றி வழிகாட்ட வேண்டும். அப்போதுதான் மேற்கூறியவை சாத்தியமாகும்.

தர்மம் தழைக்க வேண்டுமாயின் நாட்டில் பாவ பழிகள், தோஷங்கள் இல்லாது போவது அவசியம். இருந்தும் அண்மையில் அந்தணச் சிவாச்சாரியர் சிவஸ்ரீ ரகுபதி சர்மா அவர்களுக்கு 300 வருடங்கள் சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

நீதிமன்றத்தின் தீர்ப்பை விமர்சிக்க முடியாது என்ற உண்மைக்கு அப்பால், ஒரு அந்தணச் சிவாச்சாரியாருக்கு வழங்கப்பட்ட இத் தண்டனையில் இருந்து அவரை விடுவிக்க இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவருக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டும்.

இதற்கான முயற்சியில் எங்கள் அந்தணச் சிவாச்சாரியர்களும் வடக்கின் முதலமைச்சரும் ஈடுபடுவது அவசியம்.

பூனூல் தரித்த சிவாச்சாரியர் சிறையில் வாடுவது இந்த நாட்டுக்கு பிரம்மகத்தி தோஷத்தை தரும் என்பதால் சிவஸ்ரீ ரகுபதி சர்மாவுக்கு பொது மன்னிப்பு வழங்குவது மிகவும் அவசியம்.

# வெளிநாட்டு நீதிபதிகள் வந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## தினேஷ் குணவர்த்தன

பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்கேற்புடன் உள்ளக விசாரணை நடைபெறுமாயின் அது அரசியலமைப்பை மீறுவதாகவே அமையும். அவ்வாறு அரசியலமைப்பை மீறும் செயற்பாடுகளை மேற்கொண்டால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நாம் தயங்க மாட்டோம் என ஒன்றிணைந்த எதிர்க்கட்சி என தம்மை அறிவித்துக்கொண்டுள்ள மகிந்த அணியின் முக்கியஸ்தர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்கம் உள்ளக விசாரணை என்ற போர்வையில் சர்வதேச விசாரணையே நடத்துவதற்கு முயற்சிக்கிறது. அதற்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். மேலும் அரசாங்கமானது உள்ளகப் பொறிமுறை செயற்பாட்டை வெளிப்படுத்தாமல் மறைத்து வைத்திருக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

ஜெனிவா மனித உரிமை பேரவை தீர்மானத்துக்கு எதிராக நாட்டு மக்களை தெளிவுபடுத்தப்போவதாக மகிந்த அணியினர் கூறிவருகின்றமை குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இந்த விடயம் குறித்து மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் உரிமை பேரவையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணையில் சர்வதேச பங்களிப்புடன் கூடிய விசாரணையே வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே இதனை உள்ளக விசாரணை பொறிமுறை என்று கூறமுடியாது. வெளிநாடுகளின் தலையீடுகள், பங்கேற்புகள், நிபந்தனைகள் இல்லாமல் முன்னெடுக்கப்படுகின்ற உள்ளக விசாரணையையே உள்ளகப் பொறிமுறை என்று நாம் கூறமுடியும்.

அதனை விடுத்து வெளிநாட்டு, பொதுநலவாய நீதிபதிகளுடனும் வெளிநாட்டுப் பங்களிப்புடனும் உள்ளக விசாரணை இடம்பெறுமாயின் அதனை ஒருபோதும் உள்ளக விசாரணை என்று கூறமுடியாது. அவ்வாறான செயற்பாடுகளை அனுமதிக்கவும் முடியாது. மறுபுறம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி.சுமந்திரன் கலப்பு விசாரணையே இடம்பெற உள்ளதாக கூறி வருகிறார்.

அப்படியாயின் அது சர்வதேச விசாரணை என்றே பொருள்படும். அதனை எவ்வாறு உள்ளக விசாரணை என்று கூறுவது?

இலங்கை இறைமையுள்ள நாடு. இங்கு வெளிநாட்டுத் தலையீடுகளுடனும் பொதுநலவாய பங்களிப்புடனும் விசாரணை செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது. இதற்கு அனுமதிக்கவும் முடியாது. அதுமட்டுமன்றி இந்த உள்ளக விசாரணை எனக் கூறப்படும் பொறிமுறையில் ஐக்கிய நாடுகளின் கண்காணிப்பு அலுவலகங்களும் இலங்கையின் பல பாகங்களில் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறு ஐக்கிய நாடுகளின் கண்காணிப்பு அலுவலகங்கள் அமைக்கப்படுவதானது எமது நாட்டின் அரசியலமைப்பை மீறுவதாகவே அமையும். அதற்கும் ஒருபோதும் நாங்கள் இடம்கொடுக்க முடியாது.

எனவே அரசாங்கம் உள்ளக விசாரணை என்ற போர்வையில் பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்புடன் ஒரு விசாரணை செயற்பாட்டை இலங்கையில் முன்னெடுக்குமாயின் அதனை எதிர்த்து நிற்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்புடன் உள்ளக விசாரணை முன்னெடுக்கப்படுமானால் அது எமது நாட்டின் அரசியலமைப்பை முற்று முழுவதுமாக மீறுவதாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# ஷிரந்தியின் சிகை அலங்கரிப்பாளருக்கும் இராஜதந்திர கடவுச்சீட்டு வழங்கப்பட்டது

## மோசடிகளை தெரிவிக்கிறார் அமைச்சர் மங்கள

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதியின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷவின் சிகை அலங்காரக் கலைஞருக்கும் இராஜதந்திர கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மங்கள சமரவீர குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அமைச்சர் மங்கள சமரவீர, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இராஜதந்திர நடைமுறைகளை மீறி அரசுக்கு நெருக்கமான அனைவருக்கும் இராஜதந்திர கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சிக்காலத்தில் சுமார் 2800 பேருக்கு அவ்வாறு இராஜதந்திர கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது. உலகின மிகப்பெரிய இராஜதந்திர சேவையைக் கொண்டிருக்கும் அமெரிக்க அரசாங்கத்தினால் கூட இந்தளவு பெரிய தொகையில் இராஜதந்திர கட வுச்சீட்டுகள் வழங்கப்படவில்லை.

இதில் ஷிரந்தி ராஜபக்ஷவின் சிகை அலங்கார நிபுணருக்கும் கூட இராஜதந்திர கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (செ-11)

## விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சியும்

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணி பிரதேச செயலக பிரிவில் மணற்காடு ஜே/418 கிராம உத்தியோகத்தர் பிரிவில் மட்டும் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 3 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சிச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பில் பொதுமக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் பொது மக்களுக்கு இத்தால் அறிவுறுத்தப்படுகின்றது என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



முடியாது என்னால் முடியதது என்று மட்டும் சொல்லாதீர்கள். நீங்கள் எல்லையற்றவர்கள். காலமும் இடமும் கூட உங்கள் இயல்புடன் ஒப்பிடும்போது ஒன்றுமே இல்லை. நீங்கள் எதையும் செய்ய முடியும். எல்லாம் வல்லவர்கள் நீங்கள்.

நாமும் ஒன்றும் செய்வதில்லை. ஏதாவது செய்பவரையும் எள்ளி நகையாடி ஏளனம் செய்வோம். நம் நாட்டவர்கள் வீழ்ச்சியுற்றதற்கு நாசகரமான இந்தக் குறைபாடே காரணம்.

கிராமம் கிராமமாகச் செல்லுங்கள். மக்களுக்கு ஸ்ரீ இராமகிருஷ்ணரின் போதனைகளை எடுத்துக் கூறுங்கள். இதைவிடப் பெரிய வேறு கிடைக்குமா என்ன?

முதலில் நாம் வழிபடவேண்டிய தெய்வங்கள் நமது நாட்டு மக்களேயாவர். ஒருவரிடமும் ஒருவர் பொறாமை கொண்டு ஒருவரோடொருவர் சண்டையிடுவதற்குப் பதிலாக ஒருவரையொருவர் வழிபடுவோமாக.

வேலையைத் தொடங்கு. நீங்கள் வென்றேயாகவேண்டும். உங்கள் ஒவ்வொரு முயற்சியிலும் என் பிரார்த்தனைகளும் ஆசிகளும் தொடர்ந்து வரும்.

எழுந்திருங்கள், விழித்திருங்கள் என்னும் அபயச் செய்தியை முழங்குவதற்காகவே நான் பிறந்திருக்கிறேன். இந்த அபயச் செய்தியை சண்டாளன் முதல் பிராமணர் வரை எல்லோருக்கும் சொல்லுங்கள். நீங்கள் எல்லையற்ற சக்தி படைத்தவர்கள், மரணமிலாப் பெருநிலையின் பங்குதாரர்கள் என்பதை அவர்களிடம் சொல்லுங்கள். இவ்வாறு அவர்களை வாழ்க்கைப் போராட்டத்திற்குத் தகுதியுடையவர்களாகச் செய்யுங்கள்.

இது ஒரு கனவுலகம். இங்கே ஒருவன் சுனம் அனுபவிக்கிறானா அல்லது துக்கத்தில் துடிக்கிறானா என்பது ஒரு பொருட்டே அல்ல, இரண்டுமே கனவுகள். எனவே விரைவிலோ தாமதித்தோ கலையத்தான் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலுசந்தி மைக்கல் வி. கழக உதைபந்தாட்ட சுற்றுத்தொடர்

## கலைமதி, ஐக்கியம் அடுத்த சுற்றுக்குத் தெரிவு





மாலு சந்திமைக்கல் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரு பரபரப்பான ஆட்டத்தில் வடமராட்சி நவிண்டில் கலைமதி மற்றும் மன்னார் தோட்டவெளி ஐக்கியம் அணிகள் வெற்றிபெற்று அடுத்த சுற்றுப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன.

முதலாவது ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து கிளிநொச்சிவலைப்பாடு அணி மோதியது. இரு அணிகளும் தமது முழு திறமைகளை வெளிப்படுத்தி ஆடியபோதும் இறுதியில் 2-4 என்ற கோல்கணக்கில் கலைமதி அணி வெற்றிபெற்றுள்ளது. இரண்டாவது ஆட்டத்தில் மன்னார் தோட்டவெளி அணியை எதிர்த்து வல்வெட்டி கருணாகரன் அணி மோதியது.

இந்த ஆட்டத்தை ரசிகர்கள் மிக விரைவில் மறந்துவிடமாட்டார்கள். மிகவும் பரபரப்பாக நடைபெற்றது. முதல் பாதியாட்டத்தில் கருணாகரன் அணியின் இளம் வீரர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தி அடுத்து அடுத்து மூன்று கோல்களை போட்டு தமது அணியை முன்னிலைப்படுத்தினர் இடைவேளையின் போது 0-3 என்ற கோல்கணக்கில் கருணாகரன் தமது வெற்றி பதிவு செய்ய முயற் சித்தனர்.

ஆனால் இரண்டாம் பாதியாட்டத்தில் மன்னார் தோட்டவெளி ஐக்கிய அணி வீரர்கள் தமது சிறப்பான ஆட்டத்தின் மூலம் தொடர்ச்சியாக கோல்கள் போட்ட வண்ணமே இருந்தனர். இதன் பயனாக இறுதியில் 3-4 என்ற கோல்கணக்கில் மன்னார் தோட்டவெளி ஐக்கிய அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுப் போட்டிக்கு தெரிவாகியது. (க)

## மைலோ வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட சுற்றுத்தொடர்

யாழ். மாவட்டச் செயலக விளையாட்டுத் திணைக்களம் மைலோ கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட உதைபந்தாட் அணிகளுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் தீவக லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கான ஆட்டங்கள் வேலணை ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விபரங்கள் வருமாறு,

தீவக அணிக்கும் சண்ஸ்ரார் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சண்ஸ்ரார் அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. சென்.ஜேம்ஸ் அணிக்கும் நாரந்தனை அண்ணா அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நராந்தனை அண்ணா அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சென்.சேவியர் அணிக்கும் ஞானஒளி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சென்.சேவியர் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. நயினை அண்ணா அணிக்கும் தம்பாட்டி காந்திஜி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் தம்பாட்டி காந்திஜி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

புங்குடுதீவு நண்பர்கள் அணிக்கும் புங்குடுதீவு நசரேத் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புங்குடுதீவு நசரேத் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. வேலணையூர் ஐயனார் அணிக்கும் சண்ஸ்ரார் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் வேலணையூர் ஐயனார் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (க)

## உடுத்துறை செந்தமிழ் வெற்றி





மைலோ கிண்ணப்போட்டியில் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தினர் முதலாவதாக இடம்பெற்ற போட்டியில் சென்செபஸ்ரியன் அணியினரை தண்டஉதை மூலம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினர். அடுத்த போட்டியில் செந்தமிழ் வி.கழகத்தை எதிர்த்து விளையாடிய அணியினர் மிகச்சிறப்பாக விளையாடியபோதும் போட்டியின் இறுதிநிமிடத்தில் அடித்த கோலினால் உதயசூரியன் வி.கழகம் 1:0 என்ற கோல்கணக்கில் அடுத்த இறுதிப் போட்டி வாய்ப்பை இழந்தார்கள்.

நடைபெற்ற உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகத்திற்கும் அருணோதயா விளையாட்டுக் கழகத்திற்கும் இடையிலான போட்டியில் அருணோதயா விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (க)

## 7,600அடி உயரத்தில் கிரிக்கெட் போட்டி



நியூசிலாந்து வீரர்கள் 70.000 ஆடி உயரத்தில் கிரிக்கெட் விளையாடி அசத்தியுள்ளனர்.

நியூசிலாந்தின் சுற்றுலா தூதுவர் சித்தார்த் மல்கோத்ரா(30). நியூசிலாந்து கிரிக்கெட் அணித் தலைவர் பிளமிங் மற்றும் வீரர்கள் ஸகாட் ஸ்டைரிஸ். சைமைன் டவுல் ஆகியோர். நியூசிலாந்தில் உள்ள இசோபெல் கிளேசியர் என்ற மலைப்பகுதிக்கு சென்றுள்ளனர்.

பனிபிரதேசமான அந்த இடம், கடல் மட்டத்தில் இருந்து சுமார் 7,600 அடி உயரத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில். அங்கு சென்ற இவர்கள், கிரிக்கெட் மேட்டை விரித்து. இருபக்கமும் ஸ்டம்ஸ்களை ஊன்றி ஒரு ஆடுகளத்தை உருவாக்கியுள்ளனர்.

பின்னர். இவர்கள் அனைவரும் இணைந்து அங்கு கிரிக்கெட் விளையாடியுள்ளனர்.

பனிப்பிரதேசத்தில் கிரிக்கெட் விளையாடியது மனதை மயக்கும் வகையில் இருந்தது என்று நியூசிலாந்து அணித்தலைவர் பிளமிங் கூறியுள்ளார். (க)

## சர்வதேச உதைபந்து தொடரில் யாழ்.வீரர் பிறேம்குமார்



பங்களாதேசில் நடைபெறவுள்ள சர்வதேச கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் பங்கு பெறுவதற்கு வதிரி டயமன்ஸ் வீரர் ம.பிறேம்குமார் நேற்று முன்தினம் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இலங்கை சொலிட் கழகம் சார்பாக விளையாடி வரும் பிறேம் குமார் மாவட்டம் ,மாகாணம் தேசிய மட்டம் என பல போட்டிகளில் பங்கு பற்றி தனது திறமையால் இன்று சர்வதேச கழகங்களுக்கிடையிலான போட்டியில் பங்குபற்றவுள்ளார். அவர் மேலும் பல சாதனைகளை படைத்து தமிழினத்துக்கு பெருமை சேர்த்துள்ளார். (க)

## ஷங்காய் டென்னிஸ் ஜோகோவிச் சம்பியன்

ஷாங்காய் டென்னிஸ் சீனாவில் நடைபெற்றது. இதன் இறுதிப் போட்டியில் நம்பர் ஒன் வீரரான செர்பியாவின் ஜோகோவிச் பிரான்சை சேர்ந்த ஜோவில்பிரைட் சோங்காவை எதிர்கொண்டார். இதில் ஜோகோவிச் 6-2, 6-4 என நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் ஏடிபி உலக மாஸ்டர் டைட்டிலை 25 முறை ஜோகோவிச் கைப்பற்றியுள்ளார். நடால் 27 முறை கைப்பற்றி முதல இடத்தில் உள்ளார். இந்த வெற்றியின் மூலம் ஷாங்காய் கோப்பையை தொடர்ந்து 4 ஆவது முறையாக ஜோகோவிச் கைப்பற்றியுள்ளார்.

இந்த வருடம் மூன்று கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை கைப்பற்றிய ஜோகோவிச் இந்த சீசனில் வாங்கும் 9 ஆவது பட்டம் இதுவாகும். (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெனிவா அறிக்கைக்கு...

செய்திருந்தனர்.

போர்க்குற்றங்கள் தொடர்பான கலப்பு நீதிமன்றக் கட்டமைப்பு குறித்து எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விகாரமகாதேவி பூங்காவில் நடைபெற்ற குறித்த எதிர்ப்புக் கூட்டத்தில் நாமல் ராஜபக்ஷவும் கலந்து கொண்டிருந்தார்.

கடந்த ஜனவரியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் தோல்விக்குப் பின்னர் எதிர்க்கட்சிகளின் முக்கிய கூட்டம் ஒன்றில் ராஜபக்ஷவினர் கலந்து கொள்வது இதுவே முதல் தடவையாகும்.

இதில் அரசியல் பிரமுகர்களுடன் கலைஞர்களும், ஏராளமான பொதுமக்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## இலங்கை விவகாரம்...

படுத்தல் இடம்பெற உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நோர்வேயின் முன்னாள் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் நோர்வேயின் முன்னாள் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன் ஆகியோர் இந்த நூலின் ஊடாக இலங்கையில், நோர்வே வழங்கிய பங்களிப்பு குறித்து தெளிவுபடுத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நூலை மார்ச் சால்டர் எழுதியுள்ளார், இந்த நூலில் சொல்ஹெய்ம் மற்றும் விடார் ஆகியோரே முக்கிய தகவல்களை வழங்கியுள்ளனர்.

1983-ம் ஆண்டு முதல் 2009-ம் ஆண்டு வரையிலான காலப்பகுதி தொடர்பில் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள், நோர்வே வழங்கிய மத்தியஸ்தம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (செ-11)

## ஐ.நா தீர்மானத்தை...

இல்லாமல் போயுள்ள அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளவே இவ்வாறு போலியான பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த முயற்சிக்கு எந்த வகையிலும் இடமளிக்கப்பட மாட்டாது என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இனவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் சகலரும் இணைந்து கொள்ள வேண்டுமென சமன் கோரிக்கை விடுத்துள்ளார். (செ-12)

## அரசியல் முதிர்ச்சி...

ர்ந்தும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, ஊடகங்கள் தன்னை அரசியல் ரீதியாக காணாமல் போகச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் விமர்சனம் ஒன்றை முன்வைத்திருந்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை அமர்வுக்கு தனது புதல்வரை அழைத்துச் சென்றமை, ஜனாதிபதியின் பயன்பாட்டுக்கு புதிய வாகனங்களை கொள்வனவு செய்தமை போன்ற விடயங்கள் குறித்த ஊடகங்களின் விமர்சனத்துக்கான பதிலாக ஜனாதிபதியின் கருத்து வெளிப்பட்டிருந்தது.

எனினும் ஊடகங்கள் என்பது பொதுமக்களின் வரிப்பணத்தில், பொதுமக்களுக்காக நடத்தப்படுவதன்றி, அரசியல்வாதிகளின் அடிவருடிகளாக செயற்படுவதற்கான சாதனங்கள் அல்ல. அதனை ஜனாதிபதி உள்ளிட்ட அரசியல்வாதிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஊடகங்களின் செய்திகளில் தவறுகள் இருந்தால் சுட்டிக்காட்ட வேண்டுமே தவிர, அவற்றை விமர்சிப்பது சிறந்த அரசியல்வாதிகளுக்கான பண்பு அல்ல. ஜனாதிபதி இதனை உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதேநேரம் அரசாங்கத்தின் மீதான ஊடக விமர்சனங்களை கட்டுப்படுத்த முயற்சித்தால் மகிந்தவுக்கு நடந்தது போன்றே ஏனைய அரசியல்வாதிகளின் தலைவிதியும் அமையும் என்றும் ராவய பத்திரிகை வலியுறுத்தியுள்ளது. (செ-11)

## சுதந்திர கட்சியை...

பட்ட ரீதியில் அழைப்பு விடுத்ததாகவும், தாம் அதனை நிராகரித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவினால் சுதந்திரக் கட்சி அரசாங்கம் அமைக்கும் திட்டம் கைநழுவியது எனவும், இதனால் தமக்கு பாதக விளைவுகள் ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தலின் போது சுதந்திரக் கட்சிக்கு மகிந்த ராஜபக்ஷ தலைமை ஏற்றிருந்தால் வெற்றியீட்டியிருக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தலில் கட்சி ஆதரவாளர்கள் எடுத்த தீர்மானம் பிழையானது, கட்சிக்கு ஆதரவளித்திருந்தால் சுதந்திரக் கட்சியே இன்று ஆட்சி பீடத்தில் இருந்திருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது மகிந்த அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டால் சுதந்திரக் கட்சிக்கு கூடுதலான உள்ளூராட்சி மன்றங்களை வென்றெடுக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## நாய்க் கூட்டில் தந்தை...

டங்களாக சிறை வைத்த பெண்ணை எதிர்வரும் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

தனது தந்தை வீட்டின் உள்ளே மலம், சிறுநீர் கழிப்பதனால் அவரை நாய்க் கூட்டில் சிறை வைத்ததாக கைது செய்யப்பட்ட பெண் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 73 வயதுடைய குறித்த தந்தை தொடர்ந்தும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (செ-11)

## முன்னாள் போராளி...

ரான 29 வயதுடைய சசிதரன் தாரிகா என்பவரே மரணமடைந்தவர் ஆவார்.

இறுதி யுத்தத்தில் உடல் முழுவதும் பலத்த காயமடைந்த நிலையில் இவர் வாழ்ந்து வந்தார். நேற்று மாலை திடீரென நெஞ்சு வலி ஏற்பட்ட நிலையில் உயிரிழந்தார். இவர் தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவ பிரிவில் மருத்துவ போராளியாக இருந்தவர்.

வன்னியில் விடுதலைப்புலிகளால் நடத்தப்பட்ட பொன்னம்பலம் மருத்துவ மனையில் இறுதி யுத்த காலப்பகுதி வரையில் இவர் போராளி மருத்துவராக போரில் காயமடைந்த மக்களுக்கு பல்வேறு சிகிச்சைகளை வழங்கி கடமையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## வாக்குறுதிகளை அரசு...

செயற்பாடுகள் தொடர்பில் சர்வதேச மன்னிப்புச் சபை தொடர்ந்தும் கரிசனை கொண்டுள்ளது.

இதன்படி உண்மையைக் கண்டறிதல், நீதியை நிலைநாட்டுதல், குற்றச் செயல்கள் மீள இடம்பெறுவதனை தடுத்தல் போன்றவற்றை விரைவாகவும் அடி மட்டத்திலிருந்து ஆக்கபூர்வமாக செயற்படுத்தவும் முயற்சிக்கப்பட வேண்டும்.

இதற்காக நாட்டின் சிவில் அமைப்புகள் தொடர்ச்சியாக உறவு பேணப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட தரப்பினர் விசாரணைகள் மீது நம்பிக்கை கொள்ளும் வகையில் உள்ளக மனித உரிமைக் கலாசாரம் ஒன்று முறையாக பேணப்படுவது அவசியமாகும்.

இதற்காக ஒத்துழைப்பை சர்வதேச நாடுகள் வழங்க தயாராக உள்ள நிலையில் சர்வதேச சட்ட விதிமுறைகள் விசாரணையின் போது பின்பற்றப்பட வேண்டும்.

பொறுப்புக் கூறல் பொறிமுறையில் அர்த்தபூர்வமான முடிவுகளை எடுப்பதற்கு மனித உரிமை மீறல்களில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறவினர்களுடன கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் தனது ஊடக குறிப்பில் தெரிவித்துள்ளார். (செ-11)

# ரூபாய் 50 இலட்சம் பெறுமதியான சிகரட்டுக்கள் கைப்பற்றப்பட்டன

கண்டிப் பிரதேசத்தில் வைத்து நேற்று 50 லட்சம் ரூபாய் பெறுமதியான சட்டவிரோத சிகரட்டுக்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்டிருந்த 187,000 சிகரட்டுகளுடன் பயணித்துக் கொண்டிருந்த லொறியொன்றை நேற்று மாலை கைப்பற்றியுள்ளதாக கடுகண்ணாவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட சிகரட்டுக்களின் பெறுமதி சுமார் 50 லட்சம் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் சிகரட்டுக்களை இறக்குமதி செய்தவர் மாவனல்ல, அரநாயக்க பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவித்துள்ள பொலிஸார், கைப்பற்றப்பட்ட சிகரட் லொறி மற்றும் சந்தேக நபரை இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (செ-11)

# இரட்டை குடியுரிமை சர்ச்சை; கீதாவுக்கு 2 மாதகால அவகாசம்

இரட்டை குடியுரிமை தொடர்பான மனுவுக்கு பிரதி மனுவை சமர்ப்பிக்க நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்கவுக்கு இரண்டு மாதம் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இரட்டை குடியுரிமை கொண்டுள்ள கீதா குமாரசிங்க நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டமை அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது எனக் கூறி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரீட் மனு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இந்த மனுவுக்கு எதிராக பிரதிவாதி தரப்பு மனுவை எதிர்வரும் டிசம்பர் 7 ஆம் திகதி தாக்கல் செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் நீதியரசர் விஜித் மலல்கொட உத்தரவிட்டார்.

சுவிஸர்லாந்து பிரஜா உரிமையை கொண்டுள்ள கீதா குமாரசிங்கவுக்கு இலங்கையின் இரட்டைக் குடியுரிமையும் உள்ளது.

19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு அமைய இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் இலங்கை நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்த முடியாது.

இதனடிப்படையிலேயே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான கீதா குமாரசிங்க பிரபல சிங்களத் திரைப்பட நடிகை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# நிதிக்குற்றவியல் பிரிவு இடமாற்றம்

பொலிஸ் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு மத்திய வங்கியின் அருங்காட்சியக கட்டிடத்திற்கு மாற்றம் செய்யப்பட உள்ளது.

கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள மத்திய வங்கியின் அருங்காட்சியகம் அமைந்துள்ள கட்டிடத்தில் இயங்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மக்களின் வசதி கருதி இவ்வாறு மாற்றம் செய்யப்பட்ட உள்ளதாக பொலிஸ் பேச்சாளர் ஒருவர் கொழும்பு ஊடகமொன்றுக்கு குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# புலிகளை இல்லாது அழிப்பதில் விமானப்படையினர் பங்கு அளப்பரியது-ஜனாதிபதி

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப் புலிகளை இல்லாதொழிக்கும் முயற்சிகளின் போது விமானப் படையினரின் பங்களிப்பு அளப்பரியது என தெரிவித்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,

புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது விமானப்படையினரின் பங்களிப்பினை குறைத்து மதிப்பீடு செய்துவிட முடியாது என குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலை சீனன்குடா விமானப் படை முகாமில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,

விமானப்படையினரின் வழங்கி வரும் சேவையில் காணப்படும் திறன் மற்றும் தரம் குறித்து திருப்தி அடைவதாகத் தெரிவித்துள்ளார்.

தாய்நாட்டின் சுதந்திரத்திற்காக உயிர் மற்றும் உடல் உறுப்புக்களையும் ஏனைய வகையிலும் தியாகங்களை செய்த அனைத்து படைவீரர்களையும் மிக கௌரவத்துடன் நினைவூட்டுகிறேன்.

நாட்டின் நிலப்பரப்பினை விடவும் எட்டு மடங்கு விசாலமான கடற்பரப்பினை பாதுகாப்பதிலும் விமானப்படையினர் முக்கிய பங்களிப்பினை வழங்கியுள்ளது.

நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதில் விமானப்படையினர் தங்களது கடமைக்களை உரிய முறையில் மேற்கொண்டுள்ளனர். இதனைத் தொடர்ந்தும் முன்னெடுக்க தேவையான தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (செ-11)

# ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

## மகிந்த தரப்பு யோசனை

(கொழும்பு)

நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வது குறித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பு கவனம் செலுத்தி வருவதாக கூறப்படுகின்றது.

இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வழக்கறிஞர்கள் ஆராய்ந்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

மகிந்த ராஜபக்ஷ கடந்த தடவை ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது, ஆணைக்குழுவில் உயர்நீதிமன்ற நீதிபதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்

இவர்களின் எதிர்ப்பை ஜனாதிபதி ஆணைக்குழு நிராகரித்திருந்த நிலையில், இது தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்ய மகிந்த ராஜபக்ஷ தரப்பு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, அரசியல்யாப்பின்படி உயர நீதிமன்ற நீதிபதிகளை வேறு கடமைகளில் ஈடுபடுத்த எவ்வித தடையும் கிடையாது என நீதவான் ப்ரீதி பத்மன் சூரசேன தெரிவித்துள்ளார். (செ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமை கல்வி நிறுவனம்

சோதிவேம்படி லேன்,
மானிப்பாய்.

**புதிய புலமைப்பரிசில் வகுப்புக்கள் ஆரம்பம்**

தரம் - 4 (தற்போது தரம் 3)
காலம் - 22.10.2015 (வியாழக்கிழமை)
(விஜயதசமி அன்று)

திரு. க. கலாமோகன்
(B.A, Dip.in.Teach.)

(2105)

குறிப்பு:-
பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால்
பதிவுகளுக்கு முந்துங்கள்.

நிர்வாகி,
சோதிவேம்படி லேன்,
மானிப்பாய். (சாமி பாடசாலை அருகாமை)

தொடர்புகளுக்கு :- 077 21 21 915


## பிரகீத் காணா...

ணுவத் தளபதியையும் இராணுவ புலனாய்வுப் பிரிவுத் தலைவரையும் சேர்ப்பதற்கு நாட்டின் மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

தங்களது வேண்டுகோளை ஏற்று நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்ததாக பிரகீத எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட தெரிவித்தார்.

பிரகீத் எக்னெலிகொட தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளுக்கு அமைய, அவர் காணாமல்போன சம்பவத்துடன் இராணுவப் புலனாய்வுப் பிரிவு தொடர்புபட்டுள்ளதாக அறியமுடிவதாகவும், அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள இராணுவத் தளபதியையும் புலனாய்வுப் பிரிவுத் தலைவரையும் பிரதிவாதிகளாக சேர்ப்பதற்கு அனுமதி அளிக்குமாறும் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தைக் கேட்டுக் கொண்டார்.

அந்த வேண்டுகோளை ஏற்ற நீதிபதிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை மனுவில் பிரதிவாதிகளாக சேர்ப்பதற்கு அனுமதி வழங்கினர்.

இதன்படி, இம்மாதம் 30-ம் திகதி நீதிமனறத்தில் ஆஜராகி விளக்கமளிக்குமாறு இராணுவ தளபதிக்கும் புலனாய்வு பிரிவின் தலைவருக்கும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

காணாமல்போன பிரகீத்எக்னெலிகொடவை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துமாறுகோரி அவரது மனைவி 2010-ம்ஆண்டு இந்த மனுவை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## பரந்தனில் இன்று...

பொறுப்பாளர் தமிழினியின் (சிவகாமி ஜெயகுமரன்) இறுதிச்சடங்கு இன்று பிற்பகல் 2 மணியளவில் பரந்தனில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மகரகம மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தமிழினி, சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அவரது உடலம் நேற்று முன்தினம் மாலை பரந்தன் சிவபுரத்தில் உள்ள அவரது இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் அவரது உடலத்துக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அதேவேளை, உலகெங்கிலும் இருக்கின்ற எமது தமிழ் உறவுகள் அனைவரும் ஒரு நிமிடம் தமிழினியின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்யுங்கள் என வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (செ-11)

## புலிச் சந்தேக...

ஊடகச் செயலாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிச் சந்தேக நபர்களுக்கு எதிராக உடனடியாக நீதிமன்ற செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இது சட்டமா அதிபருக்கு உரிய பொறுப்பு. அது மாத்திரமல்லாது இது நல்லாட்சி அரசாங்கத்தினதும் பொறுப்பு எனவும் வர்ணசிங்க கூறியுள்ளார்.

அனைவருக்கும் சட்டம் நியாயமானதாகவும் தார்மீகமாகவும் நிலைநாட்டப்பட வேண்டும். அப்படியில்லாது குழுக்கள், அணிகள் அல்லது அரசியல் பிரிவினைவாதிகளின் விருப்பு வெறுப்புகளுக்கு அமைய நடவடிக்கை எடுப்பதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க குறிப்பிட்டுள்ளார். (செ-11)


யாழ்ப்பாண வரலாற்றில் நீங்கள் எப்போதும் கண்டிராத நிகழ்வு உங்கள்
நகரில் கணக்கிட முடியாது இலட்சத்துக்கு மேற்பட்ட டிசைன்களில்
தொகையான ஆபரணங்கள்

யாழ்ப்பாண யுவதிகள் தங்க முலாம் பூசப்பட்ட மற்றும் ரேடியம்
பூசப்பட்ட அவுஸ்திரேலியா வைர நகைகளை கொள்வனவு செய்யலாம்
99 வீதமான புதிய டிசைன்கள்

உரிய ஏற்றுமதி விலையான ரூ. 1500 /=, 3000 /=
வரையிலான நகைகளுக்கு
கடைசி மூன்று தினங்கள் மட்டும்

**ரூபாய். 150 /= - 350 /= மட்டுமே**

**2015 ஒக்டோபர் 19,20,21,22**
(திங்கள், செவ்வாய், புதன், வியாழன்) திகதிகளில்

நேரம் : முற்பகல் 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை
(பகல் உணவு இடைவேளை கிடையாது)

ரூ. 150/- க்கும், ரூ. 350/- க்கும் விற்பனை செய்யும் ரூ. 3000/- ஏற்றுமதி
பெறுமதி கொண்ட 10 இலட்சம் நகைகளை இன்றே கொள்வனவு செய்யுங்கள்

இவ் விளம்பரத்தில் எல்லா டிசைன்களையும் குறிப்பிட இடமில்லை
சில ஆபரணங்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளோம்.

| | |
|---|---|
| மும்பாய் தங்க முலாமிடப்பட்ட செயின் பெண்டன் | ரூ. 150/- Only |
| சிபாரா தங்க முலாமிடப்பட்ட கம்மல் | ரூ. 150/- Only |
| அமெரிக்கன் டைமன் கல் பதித்த கம்மல் | ரூ. 150/- Only |
| மேல் நாட்டு மாதிரியிலான தோடுகள் | ரூ. 150/- Only |
| அவுஸ்திரேலிய டயமன்ட் மோதிரம் | ரூ. 150/- Only |
| அவுஸ்திரேலிய டயமன்ட் செயின் | ரூ. 350/- Only |
| பஞ்சாம் பியூட்டி குயின் மாலை | ரூ. 350/- Only |
| அமெரிக்க டயமன்ட் நெக்லஸ் | ரூ. 350/- Only |
| கிரிஸ்டல் நெக்லஸ் செட் | ரூ. 350/- Only |
| ஐதராபாத் முத்து நெக்லஸ் செட் | ரூ. 350/- Only |
| இத்தாலிய டயமன்ட் தோடுகள் | ரூ. 350/- Only |
| ரேடியம் பிளேடிங் டயமன்ட் தோடுகள் | ரூ. 350/- Only |
| ஜெய்ப்பூர் குண்டன் நெக்லஸ் செட் | ரூ. 350/- Only |
| அவுஸ்திரேலிய டயமன்ட் மோதிரம் | ரூ. 350/- Only |

விசேட சலுகை : விவாக சடங்குகள் மற்றும் வைபவங்களுக்கு ரூபாய் 500/-ரூ 1000/- வரை ஆபரணங்கள்

(2104)

**இடம் : வீரசிங்கம் மண்டபம்**
இல. 12, கே.கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்.
அனுமதி இலவசம், தொலைபேசி : 0776047788



விஜயதசமி அன்று புதிய பிரிவு ஆரம்பம்

O/L உடன் 30,000/= உடன் ஆரம்பித்து
சுவிஸ், நியூசிலாந்து, சிங்கப்பூர், மலேசியாவில்
மாதம் 3 இலட்சத்துக்கு மேல் உழைக்க

ஒக்.22, வியாழன் காலை 10 மணி
Business & Hotel Management
With ENGLISH COURSE
Leading to University of Sunderland UK

கற்கைநெறிக் காலத்தில் ரூ.15,000 வரை வருமானம்



6 மாதங்களில் விரும்பிய நாடு வெல்லும்
100% உத்தரவாதம்

SIKARAM Any Visa to Any Country
மேலதிக விபரங்களுக்கு www.sikaram.lk

இதுவரை கற்கைநெறியில் இணைந்த 13 பேருக்கு
வெளிநாட்டு விசா ஏற்பாடு

MONEY BACK 100% GUARANTEE

3 மாதங்களில் ஆங்கிலத்தில் பேசும் திறன்
& தொழில்வாய்ப்பு பெறும் உத்தரவாதம்

077 36 16 798, 021 222 0011

Sikaram School of Hospitality &English
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m



அமெரிக்க லொத்தர் விசா



இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற !!!
அலட்சியம் வேண்டாம் நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?
இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில்
இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம். இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு
குடும்பத்துடன் விண்ணப்பிப்பவர்கள் 2 தடவை விண்ணப்பிக்கலாம்(இரட்டிப்பு வாய்ப்பு)
பங்களாதேஸ், இந்தியா,பாகிஸ்தான் போன்ற சனத்தொகை கூடிய நாடுகள் இவ்வருடம் விண்ணப்பிக்க தகுதி இல்லாதமையால் ஆசியாவில் இலங்கையர்களுக்கான வாய்ப்புக்கள் அதிகம்
எமது அலுவலகங்களுக்கு நேரில் வந்து விண்ணப்பிப்பவர்களுக்கு உடனடியாகவே உறுதிப்படுத்தல் கடிதம் வழங்கப்படும்.

எமக்கூடாக அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பிப்பவர்களுக்கு கனடா செல்வதற்கான அனைத்து வேலைவாய்ப்புகள், அடிப்படைதகுதிகள் மற்றும் சைப்பிரஸ்,டுபாய்,கட்டார், சவூதி, ஓமான், பஹ்ரேன் போன்ற நாடுகளில் உடனடி வேலைவாய்ப்புக்கள் அடங்கிய கையேடுகள் இலவசமாக வழங்கப்படும்.

அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு தினங்களில் பதிவுகள் மேற்கொள்ளப்படும்

| யாழ்ப்பாணம். | கிளிநொச்சி -A9 வீதி, | இன்னும் ஒருசில தினங்களில் | நெல்லியடி. | வல்வெட்டித்துறை. |
|---|---|---|---|---|
| 49A,சப்பல் லேன், | (பழைய அஸ்பத்திரிக்கு முன்னால்) | பதிவுகள் நிறைவடைகின்றன. இறுதி சந்தர்ப்பம் - உடனே விரையுங்கள் | மாலுசந்தி, | யாழ் வீதி,வல்வெட்டி, |
| 0768226241 | 0768226240 | | 0776699892 | 0776697960 |

V2 TRAVELS

UK/CANADA/EUROPE போன்ற அனைத்து நாடுகளுக்குமான
VISIT VISA / SPOUSE VISA / TOURIST VISA / STUDENT VISA / BUSINESS VISA
போன்றவற்றிற்கான ஆலோசனைகள்,ஆவணத்தயார்ப்படுத்தல்கள் ONLINE விண்ணப்ப படிவங்கள் நிரப்புதல் மற்றும் நிராகரிக்கப்பட்டவிசாக்களுக்கு சட்டநிபுணர்களின் உதவியுடன் Appeal செய்துகொடுத்தல்

- பயண திகதியினை மாற்றுதல் (Date change)
- வீசா எடுப்பதற்கான மாதிரி பயணச்சீட்டு (Travel Itinerary)
- இந்தியா, மலேசியா விசாக்கள் (Visa Services)
- விமான ஆசனத்தினை பதிவு செய்தல்(Advanced Free Booking)
- வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு (Srilankan Visa extension)
- பயணக்காப்புறுதி (Travel Insurance)
- மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்பு


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org